ஐரோப்பியப் பதிப்பு

# ஈழமுரசு®

முரசு 05 | 28 மே - 10 யூன் 2019 | முழக்கம் 100

ஓம் விஸ்வப் பிரமனே நம
பாரிஸ் லா சப்பலில்
ESANE JEWELLRY

தங்க நகை சேமிப்புத் திட்டத்தில் இணைபவர்களுக்கு முதல் மாதம் இலவசம்!
8, Rue Cail,75010 Paris Tel: 01 42 81 18 03
email: esanejewellery@gmail.com Port: 06 66 09 55 11

NORD OPTICAL

லாச்சப்பலில் முதல் முறையாக கண் பார்வைக்குரிய கண்ணாடி, லென்ஸ், என்பன இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
18, rue Demarquay, 75010 Paris
Gare du Nord (La Chapelle)
Horraires d'ouverture
Lundi au Samedi 10h à 19h30 TEL: 01.75.42.92.30



# மீண்டும் மோடி

## உலகத் தலைவர்கள் வாழ்த்து

## அமெரிக்க, பிரித்தானிய ஊடகங்கள் கொதிப்பு

## தமிழரின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதைப் போன்று விரைவில் தமிழ்த் தேசியம் மௌனிக்கப்படும் நிலை

## தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசு வரும்வரை மக்களைக் காக்கவேண்டியது தாயக, புலம்பெயர் மக்களின் கடமை!

## ஆறு கடக்கும் வரைக்கும் அண்ணன் தம்பி

## இந் நாட்டின் பூர்வீகக் குடி மக்கள் இந்துத் தமிழ் மக்களே

## மந்திரத்தால் மாங்காயை விழுத்தும் மாயாவாதத் திட்டம்

உங்கள் வீடுகளை
விற்க | வாங்க
i@D IMMOBILIER
Bondyயில் புத்தம் புது வீடு விற்பனைக்கு
✓45m² அளவு கொண்ட F2 வீடு
✓மார்ச் மாதம் குடியமரக்கூடியது
✓விலை. 179 000€
110% கடன்
எந்தவித முதலீடும் இன்றி 110% வீதக் கடன் செய்து தரப்படும்
Gare de Bondyயில் இருந்து 1 நிமிட நடைதூரத்தில்
தொடர்பு: சுதன் 07 64 08 93 83

BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com

V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

Mohan Jewellery Mart

3/4 Fois sans Frais
(Piéce d'identité + Rib + C.B)
பழைய நகைகளைக் கொடுத்து புதிய நகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்
Mo: La Chapelle ou Gare du Nord
201,rue du fg. St. Denis 75010 Paris
Tel: 01 42 05 65 26 Fax: 09 50 31 01 82

IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான் சுப்பர் மார்சே
பல்பொருள் வாணிபம்

64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

OM MURUGA DESIGN & PRINT
+33 1 71 93 34 32
Info@omprint.fr
71 Rue Louis Blanc 75010 Paris
NEW

Ria MONEY TRANSFER
OM MURUGA
பணம் அனுப்பும் சேவை
BANK CARD மூலம் RIAஇல்
பணம் அனுப்பிக் கொள்ளலாம்
VISA | VISA Electron | EUROCARD MasterCard | Maestro

Crédits - Solutions
வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்
திரு.சிவா: 0973255923 - 0665660305
Fond de Commerce மற்றும் Mur Commerciaux ஆகியவற்றிற்கு கடன் உதவிகள் செய்து தரப்படும்
2-4 rue de l'Orillon - 75011 Paris
email: creditssolutions@gmail.com

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04

# ASCES

## 30 ஆண்டுகளாக நடைபெறும் பதிவு செய்யப்பட்ட பாடசாலை

**100 % சித்தி Bac et Brevet இல் எமது மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்**

விபரங்கள் அறிய எமது இணையத்தளம் **www.asces.fr** **Tél : 07 82 88 59 16** E-mail : asces@free.fr

## Brevet, Terminale மீட்டல் வகுப்புகள் ஆரம்பம்

**Grande Section, CP, CE,CM, Collège, Lycée** வகுப்புகள்
**Maths, Français, Physique, Chimie, SVT, Histoire**

**பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்**

பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்
20-04-2019 சனி காலை 9 மணி ஒருநாள் வகுப்பு
04-05-2019 சனி ஞாயிறு பி.ப 5.30 மணி
15-04-2019 திங்கள் காலை 10.30 மணி
12-06-2019 ஞாயிறு காலை 10.மணி (**Nationality** வகுப்பு)
24-04--2019 புதன் பி.ப 3.30 மணி (Bobigny)

**LA COURNEUVE இல்**
**35, rue Maurice Lachâtre - 93120 La Courneuve**

**BOBIGNY**
**38, rue Gaston Crépin 93000 Bobigny**

**PARIS**
**3, place de Joinville 75019 Paris M° Crimée**

**Epinay sur seine** 42, rue Félix Merlin 93800 Epinay sur Seine

**100 % சித்தி Bac et Brevet இல்**
**எமது மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்**

எமது வெளியீடுகள்
நடைமுறை பிரஞ்சு – பிரஞ்சு இலக்கணம் பயில சிறந்தநூல்
பிரஞ்சு – தமிழ், தமிழ் – பிரஞ்சு அகராதி
பிரஞ்சு பேசுவோம் பகுதி 1 & 2 CD உடன்

**Bridal makeup & cake icing**
மணப்பெண் அலங்காரம்,
கேக் அலங்காரம் சனி காலை 9.30 மணி ஆரம்பம்
பதிவுகள் இப்போதே செய்யுங்கள்

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ், நடனம், சங்கீதம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம்,
வயலின், ஓர்கன், கிட்டார் வகுப்புகள்
தையல் வகுப்புகள் ஆரம்பம்


**IN THE COURT OF HON'BLE PRINCIPAL DISTRICT JUDGE**
**PUDUCHERRY (INDIA)**

O.S. No: 176 of 2017

1. Jaliot Manohgar
and two others ... Plaintiffs

Vs.

1. Jaliot Manohary
And ten others ... Defendants

NOTICE OF HEARING

TO: DEFENDANT Nos: 5, 6, 8 to 10

| | | | |
|---|---|---|---|
| D-5 | Mr. Alencon Djeapragassam S/o. Late. Alencon Rattinam, | D-8 | Mr. Alencon Ravi [D-8] S/o. Late. Alencon Ramatchandirane, |
| D-6 | Mrs. Jaliot Malarviji W/o. Alencon Djeapragasam, | D-9 | Mr. Alencon Isabelle [D-9] D/o. Late. Alencon Ramatchandirane, |
| | Address D-5 & D-6 both are residing at No: 29, Avenue Pabio Neruda, 77290 Mitry Mory, France. | D-10 | Mr. Alencon Remond [d-10] S/o. Late. Alencon Ramatchandirane, Address D-8, D-9 & D-10 all are residing at No: 11, Auguste Renoir, 95140 Garges les Gonesse, France. |

Please take Notice that the above suit filed by Plaintiffs for Partition of their parental family immovable properties (situated at Puducherry in India) by way of Judgment and Preliminary Decree to allot their 3/25th shares and for costs is posted to **06.06.2019 at 10.00 A.M**, before said Court [situated in Puducherry – Cuddalore Main Road, Mudaliarpet, Puducherry – 605 004, INDIA] for all of your appearance and objections if any in matter. Take further Notice if you all fail to appear on said date, you all may be set-exparte and the matter will be decided in your absence.

Counsel for Plaintiffs.
**D. SOUNDARARAJAN - ADVOCATE**
PUDUCHERRY, INDIA,
Mobile: 98942-02543

(PUB 2719)








எப்பினே சூர் ஏசென்னில் RER முன்பாக

**NEW SUJAN COIFFURE**

**5 rue d'orgemont**
**93800 Epinay sur seine**
RER C T8 11 :Epinay sur seine
**Tél.: 07 53 54 27 73**





ஈழமுரசு®
mediacentre ஊடகமையம்
முரசு 05 | 28 மே – 10 யூன் 2019 | முழக்கம் 100

"அறப்போரிலும் சரி, ஆயுதப்போரிலும் சரி, எமது விடுதலைப்போர் உலக சாதனைகளைப் படைத்துவருகின்றது. மனித ஈகையின் சிகரத்தை எட்டியிருக்கின்றது."

- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்



# மீண்டும் மோடி

## உலகத் தலைவர்கள் வாழ்த்து

## அமெரிக்க, பிரித்தானிய ஊடகங்கள் கொதிப்பு



*(28.05.2019, செவ்வாய்க்கிழமை)*

இந்தியாவின் 17வது நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடியின் பாரதிய ஜனதாக் கட்சி (பா.ஜ.க.) மிகப் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. கடந்த ஏப்ரல் 11ம் திகதி தொடங்கி 7 கட்டங்களாக தேர்தல் நடத்தப்பட்டது. மொத்தம் உள்ள 543 தொகுதிகளில் தமிழ்நாட்டின் வேலூர் நீங்கலாக 542 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடந்தது. இந்தத் தேர்தலில் 8,049 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். தகுதி பெற்ற சுமார் 90 கோடி வாக்காளர்களில் 67 சதவீதம் பேர் வாக்களித்தனர். கடந்த 23ம் திகதி வாக்குகள் எண்ணப்பட்டன. இந்தியா முழுவதும் அமைக்கப்பட்டிருந்த 4 ஆயிரத்துக்கும் அதிகமான மையங்களில் பலத்த பாதுகாப்புடன் வாக்குகள் எண்ணப்பட்டன. 272 ஆசனங்களைக் கொண்டிருப்பவர்களே ஆட்சியைக் கைப்பற்ற முடியும் என்ற நிலையில், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி தேர்தல் நடந்த 542 தொகுதிகளில் 349 இடங்களை கைப்பற்றி அமோக வெற்றி பெற்று வரலாற்றுச் சாதனை படைத்தது. இதில் பா.ஜ.க. மட்டும் 302 இடங்களில் வெற்றிபெற்று தனிப்பெரும்பான்மை பெற்றது. குஜராத், இமாசலபிரதேசம், உத்தரகாண்ட், அரியானா மாநிலங்களிலும் மற்றும் தலைநகர் டில்லியிலும் பா.ஜ.க முழுத் தொகுதிகளையும் கைப்பற்றியது. உத்தரபிரதேசம், மத்தியபிரதேசம், ராஜஸ்தான், கர்நாடகம் உள்ளிட்ட சில மாநிலங்களில் பெருவாரியான தொகுதிகளில் வெற்றி பெற்றது.

உத்தரபிரதேச மாநிலம் வாரணாசி தொகுதியில் 2வது முறையாக போட்டியிட்ட பிரதமர் மோடி 4 இலட்சத்து 79 ஆயிரத்து 505 வாக்குகள் அதிகமாகப் பெற்று மீண்டும் வெற்றி பெற்றார். தேர்தலுக்கு பிந்தைய அனைத்து கருத்துக்கணிப்புகளும் பா.ஜ.க. கூட்டணியே அதிக இடங்களில் வெற்றி பெறும் என்று தெரிவித்தன. அதை உறுதிப்படுத்தும் வகையில் தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன.

பா.ஜ.க. வெற்றி பெற்றதன் அடிப்படையில், நரேந்திர மோடி அவர்கள் மீண்டும் பிரதமராகிறார். அவரின் ஆட்சிக்காலம் அடுத்த ஐந்து வருடங்களுக்கு நீடித்துள்ளது. இந்த வெற்றி குறித்து கருத்து வெளியிட்ட பிரதமர் மோடி, 'இது இந்தியாவுக்கு கிடைத்த வெற்றி. இந்தியா மீண்டும் வென்றது' என்று கூறியுள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலை போன்றே இந்த தேர்தலிலும் கொங்கிரஸ் கூட்டணி பெரும் தோல்வியை சந்தித்தது. இந்த கூட்டணிக்கு 96 இடங்கள் கிடைத்தன. இதில் கொங்கிரஸ் மட்டும் தனியாக வெறும் 51 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. கடந்த தேர்தலில் வெறும் 44 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றதால் எதிர்க்கட்சி உரிமையைக்கூட பெற முடியாத நிலையில் இருந்த கொங்கிரசால் இந்த தடவையும் எதிர்க்கட்சி உரிமையைப் பெற முடியாமல் போய்விட்டது.

இதேவேளை, தேசிய அளவில் பா.ஜ.க, கொங்கிரஸ் ஆகிய இரு கூட்டணிகளையும் சாராத பிற கட்சிகள் 97 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளன.

### உலகத் தலைவர்கள் வாழ்த்து

பிரதமர் மோடிக்கு அமெரிக்கா அதிபர் டொனால்டு டிரம்ப், ரஷ்ய அதிபர் விளாடுமீர் புட்டின், பிரான்ஸ் அதிபர் இமானுவல் மக்ரோன், சீன அதிபர் ஜி ஜிங்பிங், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெதன்யாஹூ உட்பட உலகத் தலைவர்கள் பலரும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி 04ம் பக்கம்













வீட்டு திருத்தவேலைகள்
உங்கள் வீட்டு திருத்த வேலைகள் அனைத்தும் நீண்டகால அனுபவம் வாய்ந்தவர்களால் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு : 07 51 20 27 28

ஈழமுரசு

"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

"MEDIACENTRE" JOURNAL TAMOUL bimensuel **Gratuit**

MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France
Port: 00 33 781 808 116

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

**Le Président:** S.Pulenthiran
**தலைவர்:** சு.புலேந்திரன்

**Redacteur:** K.Jeisanthar
**பொறுப்பாசிரியர்:** கி.ஜெய்சந்தர்

**ஆசிரியர் பீடம்**
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
கந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

**விளம்பரம் / விநியோகம்**
சுஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
கஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

Impression:
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard

**பிரித்தானியா**
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

**சந்தா விபரம்**
**வருட சந்தா**
**பிரான்ஸ்** 75€
**ஐரோப்பா** 85€
**ஏனைய நாடுகள்** 99€

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

**லாச்சப்பலில் ஈழமுரசுடனான விளம்பரத் தொடர்புகளுக்கு**
**பாலன்:**
29, rue Philippe de Girard,
75010 Paris
Port: 06 63 01 75 80

# மீண்டும் மோடி...

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை மாமனிதர் என்றும், மகத்தான தலைவர் என்றும் வர்ணித்திருக்கும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அவரைப் பிரதமராகக் கொண்டிருப்பதற்கு இந்திய மக்கள் அதிஷ்டம் செய்திருக்கின்றார்கள் என்றும் தனது சுட்டுரை (டுவிட்டர்) தளப்பதிவில் தெரிவித்திருந்தார். அத்துடன், பிரதமர் மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய அமெரிக்க அதிபர் டிரம்ப், தேர்தல் வெற்றிக்காக அமெரிக்காவின் சார்பில் வாழ்த்து தெரிவித்தார். இதேவேளை, வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கையில், ஜப்பானின் ஒசாகா நகரில் அடுத்த மாதம் ஜி20 நாடுகளின் உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. அத்துடன், இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் நாடுகளிடையே முத்தரப்பு பேச்சுவார்த்தையும் நடைபெறவுள்ளது. இதையொட்டி, அதிபர் டிரம்ப்பும், பிரதமர் மோடியும் சந்தித்து பேசுவதற்கு ஒப்புக் கொண்டுள்ளனர். இந்தியா, அமெரிக்கா இடையிலான நல்லுறவில் கடந்த 2 ஆண்டுகளில் பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அவற்றை தொடர்ந்து முன்னெடுக்க இரு தலைவர்களும் ஆர்வத்துடன் உள்ளனர்? என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதேவேளை, பிரான்ஸ் அதிபர் மக்ரோன் பிரதமர் மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தேர்தலில் வெற்றி பெற்றதற்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். இந்த தகவலை வெளியிட்ட பிரான்சு வெளியுறவுத் துறை அமைச்சரின் செய்தி தொடர்பாளர், பிரான்சும் இந்தியாவும் உறுதியான ஒத்துழைப்பை கொண்டுள்ளன. நாடுகளின் பாதுகாப்பு மற்றும் உலகின் பாதுகாப்பு நிலைத்தன்மை ஆகியவற்றுக்காக இரு நாடுகளும் தொடர்ந்து இணைந்து பணியாற்றுவோம். நீடித்த வளர்ச்சியை ஊக்குவிப்போம் என்று தெரிவித்துள்ளார்.

மோடி தலைமையிலான இந்தியா உடனான உறவுகளை வலுப்படுத்த விரும்புவதாக சீனா தெரிவித்தவுள்ளது. சீன அதிபர் ஜி ஜின் பிங் பிரதமர் நரேந்திர மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துத் தெரிவித்திருந்தார். இந்நிலையில் மோடி தலைமையிலான இந்தியா உடனான உறவுகளை வலுப்படுத்த விரும்புவதாக சீனா தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளரான லு காங் செய்தியாளர்களிடம் கூறுகையில், இந்தியாவும் சீனாவும் ஒருவருக்கு ஒருவர் முக்கியமான உறவினர்கள். நாங்கள் பெரிய அளவில் முன்னேறிய நாடுகள் மட்டும் அல்லாது வளர்ந்து வரும் சந்தைகளும் ஆவோம். கடந்த வருடம் இருநாட்டு அதிபர்களுக்கு இடையேயான வுஹான் மாநாடானது இருநாட்டு பரஸ்பர உறவின் எதிர்காலத்திற்கான பாதையமைத்துக் கொடுத்ததுடன், ஒரு புதிய அத்தியாயத்தைத் துவங்கி வைத்தது. ஒரு வருடம் கழிந்த நிலையில் அது சிறப்பான வளர்ச்சி கண்டுள்ளது. இருதரப்பு உறவுக்கு சீனா மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது. தற்போது மோடி தலைமையின் கீழ் இந்தியா உடன் பரஸ்பர அரசியல் நமபிக்கையை வலுப்படுத்தும் பொருட்டும், இருதரப்பு நலன் நாடும் ஒத்துழைப்பின் மூலம் வளர்ச்சி மற்றும் நெருக்கமான கூட்டுறவை நோக்கிச் செயலாற்ற விரும்புகிறோம் என்று தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெதன்யாஹு, நரேந்திர மோடிக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார். அப்போது உங்கள் கூட்டணி எனக்கு நிச்சயம் தேவை என்று தெரிவித்தார். இந்த உரையாடலை காணொளியாக வெளியிட்டுள்ளார். அதில் அவர் பேசியதாவது, நண்பரே நரேந்திர மோடி, உங்கள் வெற்றிக்கு எனது வாழ்த்துகள். இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியாகும். நாம் இருவரும் மிக விரைவில் நமது அரசுகளை அமைத்த பின்னர் சந்திப்போம் என்று நம்புகிறேன். எனது வெற்றிக்காக நீங்கள் வாழ்த்து கூறியதற்கு மிக்க நன்றி. உங்களது வெற்றிக்கும், எனது வெற்றிக்கும் ஒரு வித்தியாசம் உள்ளது. நீங்கள் ஆட்சியமைக்க கூட்டணித் தேவையில்லை. ஆனால், எனக்கு கூட்டணி அவசியம் என்று இந்தியாவுடனான நட்புறவு குறித்து நகைச்சுவையுடன் தெரிவித்தார்.

இதேவேளை, நாளை மறுதினம் வியாழக்கிழமை (30ம் திகதி) டில்லியில் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு வைபவம் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ள நிலையில், சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேனவும் கலந்துகொள்ளவுள்ளதாக, ஜனாதிபதி செயலக பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### மோடியின் வெற்றி உலகத்துக்கே கெட்ட செய்தி

உலகத் தலைவர்கள் பிரதமர் மோடிக்கு வாழ்த்துக்களை அள்ளி அள்ளி வழங்கிவரும் நிலையில், பிரித்தானியா மற்றும் அமெரிக்காவில் இருந்து வெளிவரும் உலகப் பிரபல்யம் வாய்ந்த ஊடகங்கள் மோடியின் வெற்றியை கடுமையாக விமர்சித்துள்ளன.

தனிப்பெரும்பான்மையுடன் மோடி மீண்டும் பிரதமராவது இந்தியாவுக்கு மட்டுமல்ல, உலகத்திற்கே கெட்ட செய்தி என்று பிரித்தானியாவில் இருந்து வெளிவரும் பிரபல பத்திரிக்கை த கார்டியன் எச்சரிக்கை விடுத்துள்ளது. பொய் பிரச்சாரம் மற்றும் வெறுப்பு அரசியல் மூலம் இந்தியாவை மோடி மயக்கி விட்டதாக அமெரிக்காவில் இருந்து வெளிவரும் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிக்கையும் விமர்சித்துள்ளது.

தொடர்ச்சி 12ம் பக்கம்



## தமிழகத்தில் மோடி எதிர்ப்பு அலை

இந்தியாவின் அனைத்து மாநிலங்களில் ஆசனங்களைக் கைப்பற்ற முடிந்த பா.ஜ.கவினால் தமிழகத்தில் மட்டும்தான் ஒரு ஆசனத்தைக்கூட கைப்பற்ற முடியவில்லை. தமிழகத்தில் அ.தி.மு.க - பா.ஜ.க. கூட்டணியில் 20 தொகுதிகளில் களம் இறங்கிய அ.தி.மு.க. தேனி தொகுதியில் மட்டும் வெற்றி பெற்றது. அந்த கூட்டணியில் இடம்பெற்ற பா.ஜ.க, மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி, தேசிய முற்போக்கு திராவிட கழகம், புதிய தமிழகம், த.மா.கா., என்.ஆர்.கொங்கிரஸ் கட்சிகளுக்கு ஒரு இடம் கூட கிடைக்கவில்லை.

இதனால் கொதிப்படைந்துள்ள பா.ஜ.க. மூத்த தலைவர்களில் ஒருவரும் சிறீலங்கா இனவாதிகளின் நண்பருமான சுப்ரமணியன் சுவாமி, இந்துத்துவா கொள்கை மூலம் தமிழகத்தில் பா.ஜ.கவை வளர்ச்சி அடைய செய்யவேண்டும் எனக் கூறியுள்ளார்.

அதேவேளை, திமுக உடன் கூட்டுச் சேர்ந்து தமிழகத்தில் கொங்கிரசுக்கு வெற்றிகள் கிடைத்தபோதும், தேசிய அளவில் அதற்குப் பலத்த அடி விழுந்துள்ளது.?திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரசாரமொன்றில் உரையாற்றும்போது, ராகுல் காந்தி பிரதமராக வருவது உறுதி என்று அறுதிபடக் கூறியிருந்தார். இந்திய கொங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியே பிரதமராக வருவார் என சில கருத்துக் கணிப்புகள் தெரிவித்திருந்தன. எனினும் ராகுல் காந்தி தலைமையிலான கொங்கிரஸ் படுதோல்வி கண்டுள்ளது. அதாவது எதிர்க்கட்சி உரிமையைக்கூடப் பெறமுடியாதளவிற்கு அதற்கு தோல்வி ஏற்பட்டுள்ளது. கொங்கிரஸ் கூட்டணிக்கு கேரளா, தமிழ்நாடு, பஞ்சாப் ஆகிய 3 மாநிலங்கள் மட்டுமே கைகொடுத்துள்ளன. கேரளாவில் மொத்தம் உள்ள 20 தொகுதிகளையும் காங்கிரஸ் 18 தொகுதிகளை கைப்பற்றி சாதனை படைத்தது. அங்கு ஆளும் இடதுசாரி கூட்டணிக்கு 2 இடங்களே கிடைத்தன. பாரதீய ஜனதா ஒரு தொகுதியில் கூட வெற்றி பெறவில்லை.



தமிழ்நாடு மற்றும் புதுச் சேரியில் தி.மு.க-கொங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெற்றது.

இந்த கூட்டணி தேர்தல் நடைபெற்ற 39 தொகுதிகளில் புதுச்சேரி உள்ளிட்ட 38 தொகுதிகளை கைப்பற்றி சாதனை படைத்தது. இந்த அணியில் 19 தொகுதிகளில் போட்டியிட்ட தி.மு.க. 19 இடங்களிலும் வெற்றி பெற்றது. இதேபோல் 10 இடங்களில் போட்டியிட்ட கொங்கிரசுக்கு 9 இடங்கள் கிடைத்தன. இதேபோல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு கட்சிகளுக்கு தலா 2 இடங்களும், ம.தி.மு.க., கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, இந்திய ஜனநாயக கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், விடுதலை சிறுத்தைகள் கட்சிகளுக்கு தலா ஒரு இடமும் கிடைத்தன. சிதம்பரம் தொகுதியில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் வெற்றி பெற்றார். அதுவும் சுமார் 3219 வாக்குகள் வித்தியாசத்திலேயே அவர் வெற்றிபெற்றுள்ளார்.



இதேவேளை, இத் தேர்தலின் மூலம் நாம் தமிழர் கட்சி மிகப் பெரும் வாக்கு வங்கியைக் கொண்டிருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அக் கட்சி தமிழகத்தின் பல்வேறு தொகுதிகளில் இரண்டாவது இடத்திற்கு வந்திருப்பதுடன், 16 இலட்சத்து 41 ஆயிரத்து 835 வாக்குகளையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றியானது தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் நாம் தமிழர் கட்சிக்கு பெரும் வாய்ப்பாக அமையும் என்று எதிர்வுகூறப்படுகின்றது.

இதேவேளை, திமுக கூட்டணி 37 இடங்களில் வெற்றி பெற்று எதிர்க்கட்சியில் அமர முடிந்திருக்கிறதே தவிர, அந்த வெற்றியால் எந்தவிதப் பயனும் இருக்கப் போவதில்லை என்றும் கூறப்படுகின்றது.

ஈழமுரசு

# இனவாதத்தில் ஊறியவர்களிடம் நீதியை எதிர்பார்க்கக் கூடாது

தான் ஒரு சிங்களப் பேரினவாத ஜனாதிபதி என்பதை சிறீலங்காவின் அதியுயர் தலைவர் மைத்திரிபால சிறீசேன மிகத் தெளிவாக நிரூபித்துவிட்டார். கடந்த வாரம் பௌத்த மதக் கொண்டாட்டமான வெசாக் தினத்தை முன்னிட்டு பொது மன்னிப்பின் அடிப்படையில் 762 கைதிகள் சிறீலங்கா ஜனாதிபதியினால் விடுவிக்கப்பட்டனர். சிறைச்சாலைகள் வரலாற்றில் அதிக கைதிகள் ஒரே தடவையில் விடுவிக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவென சிறீலங்காவின் நீதி அமைச்சு பெருமையுடன் அறிக்கையும் வெளியிட்டிருந்தது. ஆனால், இந்தக் கைதிகளில் தமிழ் அரசியல் கைதிகள் ஒருவர் கூட அடங்கியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக, 10 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதியான ஆனந்தசுதாகரன், தாயை இழந்த நிலையில் இவரது பிள்ளைகள் கடந்த 30.03.2018 அன்று கொழும்பில் சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேனவை நேரில் சந்தித்து, தாயை இழந்து தந்தையும் சிறையில் அடைக்கப்பட்டு தாங்கள் அநாதரவாக நிற்பதாகவும், எனவே தமது தந்தையை விடுதலை செய்து தங்கள் எதிர்காலத்திற்கு உதவுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

அப்போது, தமிழ், சிங்களப் புத்தாண்டு (2018) அன்று தந்தையை விடுதலை செய்வேன் என்று மைத்திரிபால சிறீசேனவினால் அந்தச் சிறிய பிள்ளைகளிடம் உறுதிமொழியும் வழங்கப்பட்டது. ஆனால், மைத்திரிபால சிறீசேனவினால் உறுதிமொழி வழங்கப்பட்டு 14 மாதங்கள் கடந்தும், இன்று வரையில் அனந்தசுதாகரனுக்கு விடுதலை கிடைக்கவில்லை.

இதனைவிட, ஆனந்தசுதாகரனின் விடுதலை தொடர்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் கவனத்திற்கு கொண்டு வந்து, அதன் மூலம் ஆனந்தசுதாகரனின் விடுதலைக்கு உதவுவதாக இந்தியத் துணைத்தூதுவர் எஸ்.பாலசந்திரன் அப்போது தமிழர் தரப்பிடம் உறுதியளித்திருந்தார். ஆனால் அவர்கள் மூலமும் இதுவரை ஆனந்தசுதாகரனின் விடுதலையும் சாத்தியமாகவில்லை. அந்தக் குழந்தைகளின் அநாதரவான வாழ்வும் இன்னும் முடிவிற்கு வரவில்லை.

ஆயுள் தண்டனை கைதியான ஆனந்தசுதாகரனை பொது மன்னிப்பில் விடுதலை செய்தால், மற்றைய கைதிகளும் (தமிழ் அரசியல்) தங்களை விடுவிக்குமாறு கோரக்கூடும் என்பதனாலேயே அவரை விடுவிக்க முடியாதுள்ளதாக மைத்திரிபால சிறீசேன பின்னொரு நாளில் இதற்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

ஆனால், அதே மைத்திரிபால சிறீசேன, 19 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, அதில் ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்தே ஆகவேண்டும் என்று நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட சிங்களப் பேரினவாத கடும்போக்கு வாதியொருவரை கடந்த வாரம் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி பொதுமன்னிப்பின் அடிப்படையில், எதிர்காலத்தில் மீண்டும் இதற்காக தண்டனை அனுபவிக்காத வகையில் விடுதலை செய்திருக்கின்றார்.

2016 ஜனவரி 25ம் திகதி, சிறீலங்காவின் ஹோமா கம நீதிமன்றத்தில் ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட கடத்தப்பட்டு காணாமற்போன சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையின் போது, வழக்கின் வாதியான பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொடவுக்கு சிங்கள பௌத்த மதவாத கடும்போக்கு அமைப்பான பொது பல சேனவின் பொதுச் செயலர் ஞானசார தேரர் மிரட்டி அச்சுறுத்தல் விடுத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, நீதிமன்றத்திற்குள் வைத்து அச்சுறுத்தல் விடுத்ததுடன், நீதிமன்றத்திற்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் ஞானசார தேரர் செயற்பட்டதால், அப்போது ஹோமாகம நீதவானாக இருந்த ரங்க திஸாநாயக்கவால் இது தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முறையிடப்பட்டது. அதன்படி அந்த வழக்கு விசாரணைகள் நிறைவடைந்த நிலையில் பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர், கலகொட அத்தே ஞானசார தேரருக்கு 6 ஆண்டுகள் அனுபவிக்கும் வகையில் 19 வருட சிறைத் தண்டனை கடந்த ஒகஸ்ட் 8ம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றால் வழங்கப்பட்டது. ஆனால், 6 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்கும் கைதிக்கு, சுமார் 9 மாதங்களில் சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்திருக்கின்றார்.





ஞானசார தேரரிற்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுவித்தால் ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் குடும்பத்தவர்களின் உயிர்களுக்கு ஆபத்து ஏற்படும் என ஊடகவியலாளரின் மனைவி சந்தியா எக்னலிகொட ஏற்கனவே அச்சம் வெளியிட்டிருந்த நிலையிலும், பொது மன்னிப்பு வழங்கி அவரை விடுவித்தது மட்டுமல்ல, தனது இல்லத்திற்கும் அழைத்து அவரை நலம் விசாரித்து அனுப்பியிருக்கின்றார்.

இப்போது, ஞானசார தேரர் விடுதலை செய்யப்பட்டுள்ளமையால் தனது குடும்பத்தவர்களின் உயிர்களுக்கு பாரதூரமான ஆபத்து ஏற்பட்டுள்ளது என ஊடகவியலாளரின் மனைவி சந்தியா எக்னலிகொட சிறீலங்காவின் பிரதமர் ரணில் விக்கரமசிங்கவிற்கு கடிதம் எழுதியுள்ளதுடன், ஞானசார தேரர் சிறையிலிருக்கும்போதே அவரது ஆதரவாளர்கள் தன்னை அச்சுறுத்தி வந்துள்ளனர் எனவும் ஞானசாரர் விடுதலையான பின்னரும் சமூக ஊடகங்களில் இது தொடர்வதாகவும் குறிப்பிட்டுள்ளதுடன், அவர்கள் சட்டத்தை தம் கையில் எடுத்துச் செயற்படுவார்கள் என்றும் எனவே தமது குடும்பத்திற்கு உரிய பாதுகாப்பை வழங்குமாறும் ரணிலிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆனந்தசுதாகரனை விடுதலை செய்தால் யாருக்கும் எந்தவொரு பாதிப்பும் வந்துவிடப்போவதில்லை. மாறாக தாயையும் இழந்து தந்தையும் பிரிந்து வாடும் அந்தக் குழந்தைகளுக்கு ஓர் ஆறுதல், ஒரு பாதுகாப்பு கிடைத்திருக்கும். ஆனால், ஆனந்தசுதாகரனையோ ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையோ விடுவிப்பதற்கு சிறீலங்காவின் சட்டங்கள் வளைந்து கொடுக்கவில்லை. அதேநேரம், ஞானசார தேரரை விடுவித்தால் மற்றவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற அச்சங்கள் வெளியிடப்பட்டுள்ள நிலையிலும் அவரை விடுவிப்பதற்கு சிறீலங்காவின் சட்டங்கள் வளைந்து கொடுக்கின்றன.

சிங்களக் கடும்போக்குப் பேரினவாதிகளுக்காக வளையக் கூடிய சிறீலங்காவின் சட்டம், தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் கொஞ்சம் கூட மனிதாபிமானத்துடன் கூட வளைய முடியாது ஏன்?

இனவாதம் பேசக்கூடாது என சிங்களத் தலைமைகள் தொடர்ந்து கூச்சலிட்டு வருகின்றார்கள். சிறீலங்கா ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை இனவாதமன்றி வேறென்னவாக இருக்கமுடியும்?

சிங்களப் பேரினவாதச் சிந்தனையில் ஊறித்திளைத்துவிட்ட இவர்களிடம் தமிழ் மக்கள் நீதியை எதிர்பார்க்க முடியாது என்பதல்ல, எதிர்ப்பார்க்கக் கூடாது என்பதைத்தான் மைத்திரிபால சிறீசேனவின் ஞானசார தேரரின் விடுதலையும் - ஆனந்தசுதாகரனை விடுவிக்க மறுப்பதும் சொல்லி நிற்கின்றது.

## ஐ.நாவின் விசேட பிரதிநிதியை நியமிக்க வலியுறுத்தி

# ஐ.நா.செயலருக்கு விக்கினேஸ்வரன் அவசர கடிதம்

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்து இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிப்பதற்கு ஐ.நா. மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு ஒன்றை இலங்கையில் அமைக்க வேண்டும் எனவும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விசேட பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டும் என்றும் வட மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் விக்னேஸ்வரன் ஐ.நா. செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்ரஸக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

வடக்கு, கிழக்கில் பெருமளவில் இராணுவம் குவிக்கப்பட்டு தமிழர் நிலங்களில் இராணுவ அனுசரணைகளுடன் குடியேற்றங்கள் நடைபெறுவதாகவும் பௌத்த மேலாதிக்கத்தைத் தொடர்ந்து ஏற்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் விக்னேஸ்வரன் இந்தக் கடிதத்தில் குற்றம் சாட்டியுள்ளார்.

விக்னேஸ்வரன் எழுதிய கடிதத்தின் விபரம் வருமாறு, இராணுவமானது வடக்கு மற்றும் கிழக்கில் குவிக்கப்பட்டுள்ளமையானது நாட்டின் ஏனைய பகுதிகளை பயங்கரவாத அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாக்கும் அதன் தன்மையை விட்டுக்கொடுக்கும் வகையில் அமைகின்றது. அதேவேளை, தமிழ் மக்களை அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் அடக்குமுறைக்குட்படுத்தும் வகையில் அவசர கால சட்டத்தை அரசாங்கம் துஷ்பிரயோகம் செய்வதுடன், தமிழர் நிலங்களில் இராணுவ அனுசரணையுடன் குடியேற்றங்கள் நடைபெறுவதற்கும் பௌத்த மேலாதிக்கத்தை தொடர்ந்து ஏற்படுத்துவதற்கும் அனுமதிக்கின்றது.

இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்க ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு ஒன்றை அமைப்பதற்கான அவசியம் குறித்து இரண்டு வருடங்களுக்கு முன்னர் உங்களிடம் விடுத்த கோரிக்கையை அவசரமாக உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன். அத்துடன் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கைக்கான விசேட பிரதி நிதி ஒருவரை ஐ.நா. மனித உரிமைகள் சபை நியமிக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றேன்.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தற்போது 10 வரையிலான இராணுவக் காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், வவுனியாவுக்கும் கொழும்புக்கும் இடையில் அநேகமாக அப்படியான எந்தக் காவலரண்களும் அமைக்கப்படவில்லை. இந்த இராணுவக் காவலரண்கள் எண்ணற்ற மனித உரிமை மீறல்கள் இடம்பெறும் இடங்களாகவும், தமிழ் மக்கள் குறிப்பாக பெண்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்படும் இடங்களாகவும், தன்னிச்சையாக தடுத்துவைக்கப்படும் இடங்களாகவும் இருக்கின்றன.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் சமர்ப்பித்துள்ள ஏராளமான மனுக்களைக் கவனத்தில் எடுத்து இலங்கைக்கான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் விசேட பிரதிநிதி ஒருவரை நியமிக்க வேண்டிய அவசரத் தேவையை வலியுறுத்துகின்றேன். கடந்த 10 வருடங்களில் படையினரால் மேற்கொள்ளப்பட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ள மனித உரிமை மீறல்களையும் இந்த விசேட பிரதிநிதி கவனத்தில் எடுக்க வேண்டும். இறுதி யுத்தத்தின்போது இராணுவத்தினரால் கொல்லப்பட்ட மற்றும் கணக்கில் வராமல் காணாமல் போயுள்ள 70,000க்கும் அதிகமான மக்களை 10வது ஆண்டு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நாள் நினைவுகூர்ந்தது. இந்த அப்பாவி மக்கள் தவிர, அரசாங்கப் படைகளிடம் வெள்ளைக்கொடிகளுடன் சரணடைந்த விடுதலைப் புலிகளின் உயர்மட்ட உறுப்பினர்களும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆகவே, இந்தத் தருணத்தில் இலங்கையில் யுத்தத்தின்போதும் யுத்தத்துக்குப் பின்னரும் நடைபெற்ற, நடைபெறும் மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தை நான் வலியுறுத்துகின்றேன். இது சர்வதேசச் சட்டம், பாதுகாப்பு ஆகியவற்றின் ஆட்சிக்கும் பிராந்தியத்தின் செம்மைக்கும் மிகவும் முக்கியமானது என்று தனது கடிதத்தில் விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

## மாவீரரின் வித்துடல் தோண்டி எடுப்பு

முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதியில் கடந்த 17ம் திகதி குழி ஒன்றை தோண்டும் போது கண்டுபிடிக்கபட்ட மாவீரர் ஒருவரின் உடலின் எச்சங்களை தோண்டி எடுக்கும் பணி முல்லைத்தீவு மாவட்ட நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் நடைபெற்றது. சட்டவைத்திய அதிகாரி, மற்றும் தடயவியல் பொலிசார், மாவட்ட நீதிவான் ஆகியோரின் முன்னிலையில் இன்றுகாலை இந்த உடலம் காணப்பட்ட பிரதேசம் அகழ்வு செய்யபட்டு உடலத்தின் எச்சங்கள் மீட்க்கபட்டு



உடற்கூற்று பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மண்டையோடு சிதைவடைந்த நிலையில் காணப்பட்ட குறித்த உடலத்தில் இரண்டு குண்டுகள், துருப்பிடித்த துப்பாக்கிரவைகள், வோக்கி டோக்கி ஒன்றின் சிதைவுகள், இலக்கத்தகடுகள், சயினைட் குப்பி ஆகியனவும் மீட்க்கப்பட்டன. மீட்கப்பட்ட உடல் சிதைவில் இருந்து கண்டுப்பிடிக்கப்பட்ட இலக்கதகட்டில் த.வி.பு ஐ 2719 என்ற இலக்கம் காணப்படுகின்றமை குடிப்பிடத்தக்கது.

## பிள்ளையார் ஆலய அத்திபாரத்தை உடைத்து புத்தர் சிலை வைக்க முயற்சி

கன்னியா வெந்நீரூற்று ஏழு கிணறுகள் அமைந்துள்ள இடத்திற்கு அருகில் பிள்ளையார் ஆலயத்தின் அத்திபாரம் உடைக்கப்பட்டு குறித்த இடத்தில் புத்தர் சிலை அமைக்கும் பணிகளை புத்த பிக்கு ஒருவரின் தலைமையிலான சிலர் கடந்த ஒருவார காலமாக மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இடம் தொல்பொருள் திணைக்களத்திற்கு கையகப்படுத்தியிருந்த நிலையில் அவ்விடத்தில் எவ்வாறு புத்தர் சிலை வைக்க முடியும் எனத் தென்கயிலை ஆதின குரு முதல்வர்கள் தெரிவிக்கின்றனர். இவ் விடயம் தொடர்பில் மாவட்டச் செயலாளர் மற்றும் பிரதேச சபை தவிசாளர் வைத்திய கலாநிதி ஞான குணாளன் ஆகியோருக்குத் தெரியப்படுத்தியதனூடக குறித்த பணிகளை உடனடியாக நிறுத்துவதாக மாவட்டச் செயலாளர் தெரிவித்திருந்த நிலையில் மீண்டும் பிள்ளையார் இருந்த இடத்தில் அத்திவாரம் உடைக்கப்பட்டு புத்தர் சிலை வைக்கும் பணிகள் தொடர்வதாகவும் தென்கயிலை ஆதீனம் குருமார்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் மீண்டும் குறித்த விடயம் தொடர்பாக திருமலை மாவட்டச் செயலருக்கும் பிரதேச சபை தவிசாளர் வைத்திய கலாநிதி ஞான குணாளனுக்கும் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். நாட்டில் அவசரகால சட்டம் நடைமுறையில் உள்ள நிலையிலும் இவ்வாறான அத்துமீறல்கள் இடம்பெறுவது கவலையளிப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, தமிழர்களின் வரலாற்று ஆதாரங்களை அழிக்கும் நடவடிக்கையில் தொல்பொருள் திணைக்களம் ஈடுபட்டுள்ளதாக வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் குற்றம்சாட்டியுள்ளார்.



## செய்திகளும் எழும் கேள்விகளும்

தெய்வமகள்

**செய்தி:-** புதிய சட்ட திருத்தம் தொடர்பாக ஹொங்கொங் சட்டசபையில் ஏற்பட்ட பயங்கர மோதலில் உறுப்பினர்கள் காயமடைந்தனர்.

**எழும் கேள்வி:-** சிறீலங்கா நாடாளுமன்றத்தைப் பார்த்துக் கற்றுக் கொண்டிருப்பார்களோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** பாதுகாப்பு அமைச்சு வழங்கும் தகவல்களை மாத்திரம் நம்புமாறு, சிறீலங்காப் பாதுகாப்பு படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** 'லங்கா புவத்'தைப் தமிழர்களுக்குத் தெரியாதோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** இலங்கை சிங்கள பௌத்த நாடு என சிறீலங்கா தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள் மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** வரலாறுகளை இவர் புரட்டிப் பார்ப்பதில்லையோ..? அல்லது அடுத்த ஆட்சியிலும் அமைச்சர் பதவிக்கு இப்போதே விசுவாசத்தைக் காட்டுகின்றாரோ..?

★★★★ ★★★★

**செய்தி:-** இந்திய இராணுவத்தால் தோல்வியடையச் செய்ய முடியாமல் போன விடுதலைப் புலிகளை, எமது இராணுவம் இறுதியாக வெற்றி பெற்றது. இவ்வாறு சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



**எழும் கேள்வி:-** எந்தவொரு நாட்டினதும் ஆதரவில்லாமல் மக்களின் ஆதரவுடன் மட்டும் தனித்து நின்று போராடிய விடுதலைப் புலிகளை, 40 நாடுகளின் ஆதரவுடனும், 7 நாடுகள் நேரடியாக நின்று வழிநடத்த எதிர்கொண்டு விட்டு, இத்தனை தெனாவெட்டா..?

★★★★ ★★★★

**செய்தி:-** தனது உடல் நிலை தொடர்பில் வெளிவரும் போலிச் செய்திகளை நம்ப வேண்டாமென, சிறீலங்கா கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் சனத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** எது போலிச் செய்தி, எது உண்மைச் செய்தி என்று எப்படிக் கண்டறிவதாம்..?

★★★★ ★★★★

**செய்தி:-** வடக்கு மாகாண ஆளுநராக பொறுப்பேற்ற நாளில் இருந்து பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றேன். எனினும் இங்குள்ள அரசியல்வாதிகள் என்னுடன் இணைந்து செயற்படுவதில்லை என வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் ஆதங்கம் வெளியிட்டார்.

**எழும் கேள்வி:-** யாருடைய அபிவிருத்தி என்பதை அவர்களுக்கு விளக்கிச் சொன்னீர்களா..?

★★★★ ★★★★

**செய்தி:-** வடக்கில் ஆவா குழு முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டு, அங்கு அமைதி நிலவுவதாக விடைபெற்றுச் செல்லும் வட மாகாணத்திற்குப் பொறுப்பான சிறீலங்காவின் சிரேஷ்ட பிரதிக் காவல்மா அதிபர் ரொ'ான் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:-** அப்ப இன்னமும் வாளுகள், கத்திகளுடன் வெட்டிக் கொண்டு திரிகின்றவர்கள் யாராம்..?

★★★★ ★★★★

**செய்தி:-** தமிழ் மக்களுக்கு சிறீலங்கா ஜனாதிபதி துரோகமிழைத்து விட்டார் என இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற குழுக்களின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:-** இவர் எந்த உலகத்தில் இருந்தார்..? இப்போதுதான் செவ்வாயக் கிரகத்தில் இருந்து வந்து தரையிறங்கினவரோ..?

## அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

### விபத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தை உயிரிழப்பு!

முல்லைத்தீவு, பரந்தன் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார். கடந்த 13ம் திகதி காலை பரந்தன், உடையார் கட்டுப் பகுதியில் இறச்சி வியாபாரத்திற்காக சென்று கொண்டிருந்த வேளையிலேயே குறித்த நபர் தனியார் பேருந்தொன்றில் மோதி உயிரிழந்துள்ளார். மேற்படி விபத்தில் உயிரிழந்தவர் உழவனூர் புன்னைநீராவியடி பகுதியினை சேர்ந்த 41 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது. விபத்தையடுத்து பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

### தந்தையின் உழவு இயந்திரத்தில் சிக்கி மகன் பலி?





தந்தையின் உழவு இயந்திரத்தை இயக்கிய போது ஏற்பட்ட விபத்தில் சிக்கி ஆறு வயது சிறுவன் உயிரிழந்துள்ளார். இந்தத் துயரச் சம்பவம் கிளிநொச்சி கோணாவில் பகுதியில் நடந்துள்ளது. வயலுக்கு சென்று வீடு திரும்பிய தந்தை, உழவு இயந்திரத்தை திறப்புடன் நிறுத்தி வைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் சிறுவன் உழவியந்திரத்தில் ஏறி, உழவு இயந்திரத்தை இயக்கியுள்ளார்.

உழவியந்திரம் இயங்கி அருகில் உள்ள மரத்துடன் மோதியபோது சிறுவன் தவறி வீழ்ந்து சில்லில் நசியுண்டு உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

### வாகன விபத்தில் வயோதிபர் பலி

யாழ்.பருத்தித்துறை வீதியில் கோப்பாய் சந்திக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கோப்பாய் தெற்கைச் சேர்ந்த 63 வயதான எஸ்.செல்வராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கோப்பாய் சந்திக்கு அருகில் வீதியை கடக்க முற்பட்டபோதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து, படுகாயமடைந்த முதியவரை அங்கிருந்தவர்கள் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். எனினும் அவர் ஏற்கெனவே உயிரிழந்திருந்ததாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

### தலையில் காயத்துடன் இரு பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்பு


மட்டக்களப்பு வெல்லாவெளி மதுரைக்கடலை வீதியில் உள்ள பாலத்தின்கீழ் ஆண் ஒருவரின் சடலமும் உந்துருளி ஒன்றும் கடந்த 24ம் திகதி வெள்ளிக்கிழமை காலை மீட்டகப்பட்டுள்ளது. காக்காச்சிவெட்டை பிரதேசத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளியான 39 வயதுடைய 2 பிள்ளைகளின் தந்தையான பாலசுந்தரம் கரிகரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த நபர் வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணியளவில் வீட்டில் இருந்து உந்துருளியில் களுவாஞ்சிக்குடியிலுள்ள அவரது சகோதரர் வீட்டிற்கு செல்வதாக தெரிவித்து வெளியேறியுள்ள நிலையில் காலையில் சாவலடி சந்தியிலிருந்து செல்லும் மதுரைக்கடலை வீதியில் உள்ள பாலத்தின் கீழ் தலையில் காயத்துடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவரது மரணம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### கடலுக்குள் பாய்ந்த கார் - ஒருவர் பலி, இருவர் காயம்

யாழ்ப்பாணம் தீவகம் பண்ணை வீதியில் இடம்பெற்ற கார் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இரண்டு பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து கடந்த 19ம் திகதி மாலை மண்டைதீவு சந்திக்கு அண்மையாக இடம்பெற்றது. மூவரும் காரில் மண்கும்பான் சாட்டிக் கடற்கரைக்குச் சென்று திரும்பும் போதே இந்த விபத்து இடம்பெற்றது. வேகக் கட்டுப்பாட்டையிழந்த கார், வீதியோரம் உள்ள கட்டைகளுடன் மோதுண்டு கடலுக்குள் பாய்ந்தது. சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். சாரதி உள்பட இருவர் படுகாயமடைந்தனர். உயிரிழந்தவர் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த முருகையா முகுந்தராஜா (வயது–34) என அடையாளம் காணப்பட்டார்.

### மின்னல் தாக்கி சிறுவன் பலி

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் மின்னல் தாக்கி காஞ்சிரம்குடா சிறீ வள்ளிபுரம் கிராமத்தைச் சேர்ந்த 17 வயது சிறுவன் தொடர்ச்சி 18ம் பக்கம்

சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
Tél: 06 58 75 05 09
www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis
CITY EXPRESS

இலங்கையில் முஸ்லிம் பயங்கரவாதிகளின் தாக்குதல்களின் பின்னர் ஏற்பட்டுள்ள நிலைமைகள் தமிழர் தாயகக் கோட்பாட்டையும் தமிழர் வாழ்வியல் உரிமைகளையும் கேள்விக்குட்படுத்தி இருக்கின்றது. நீறு பூத்த நெருப்பாக எரிந்த தமிழின விடுதலைத் தீயை குண்டுவெடிப்பால் எழுந்த புகைக்கூட்டம் மூடுமண்டலம் ஆக்கியிருக்கின்றது. தமிழ் அரசியல் கட்சிகளின் கையாலாகத்தனத்தை இந்தத் தாக்குதல்களின் பின்னரான நிலைமை கோடிட்டுக் காட்டியிருக்கின்றது. சிங்கள தேசம் தமிழர்களை எந்த இடத்தில் வைத்திருக்கின்றது என்பதையும் இது வெளிப்படுத்தியிருக்கின்றது.

நெருக்குவாரங்களையும் கொடுக்காத சிங்களப் படைகள், வடக்கு மாகாணம் - தமிழர் தாயகம் - ஆரம்பிக்கும் இடத்தில் தொடங்கி பாதுகாப்பு நெருக்குவாரங்களை அதிகரித்திருக்கின்றனர்.

முஸ்லிம் பயங்கரவாதிகளின் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களில் அதிகளவானோர் தமிழர்களாக இருக்கின்ற போதிலும், அந்தத் தாக்குதல்கள் தமிழர் தாயகத்தில் அதிகமாக நடத்தப்படவில்லை. மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தை தவிர ஏனைய தாக்குதல்கள் அனைத்தும் சிங்கள தேசத்திலேயே இடம்பெற்றன. அத்துடன், முஸ்லிம் பிரதேசங்களான காத்தான்குடி, சாய்ந்தமருது

**‘தாயகத்தில் இருந்து’**
**காந்தரூபன்**

அதிகப் பெரும்பான்மைக் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனிடம் இது தொடர்பாகக் கேட்ட போது, ‘நாட்டின் பாதுகாப்பு என்ற அடிப்படையில் அவர்கள் இதைச் செய்கின்றார்கள். ஒரு சம்பவம் நடைபெற்ற பின்னர் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டியது அவர்களின் கடமை’ என சிறீலங்காவின் பாதுகாப்பு

## தமிழரின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதைப் போன்று

# விரைவில் தமிழ்த் தேசியம் மௌனிக்கப்படும் நிலை




**வடக்கே, மன்னார், முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் பல இடங்களில் காடுகளை வெட்டி முஸ்லிம் குடியேற்றங்களைச் செய்திருக்கின்றார் றிசார்ட் பதியுதீன். அவரின் ஆதரவாளர்கள் முல்லைத்தீவை முஸ்லிம் தீவாக மாற்றுவோம் என சபதம் எடுத்திருக்கின்றனர். கிளிநொச்சியில் முஸ்லிம்களின் பெயரால் பல ஏக்கர் காணிகள் வாங்கப்பட்டிருக்கின்றன.**

தமிழர் தாயகம், தமிழ்த் தேசியம், சுய நிர்ணய உரிமை என்ற கோரிக்கைகளின் அடிப்படையில் மூன்று தசாப்த காலங்களுக்கு மேலாக இடம்பெற்ற ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டு பத்தாண்டுகள் நிறைவடைந்துள்ளது. ஆனால், தமிழர் தாயகம், அதிலும் விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த வடக்கு மாகாணம் இன்றும் யுத்த களம் போலக் காட்சியளிக்கின்றது. தமிழ் மக்கள் மீண்டும் நிம்மதி அற்ற வாழ்க்கைக்குள் சென்றிருக்கின்றனர். ஏற்கனவே சிங்களப் படைகளாலும் சிங்கள அரசுகளாலும் வதைக்கப்பட்ட தமிழ் மக்கள் மீண்டும் அந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றனர்.

ஈழ யுத்தம் ஆரம்பமானபோது தமிழர் தாயகம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்திருக்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக கெரில்லா தாக்குதல்களை மேற்கொண்ட புலிகள், தமிழ் மக்களுக்கான தேசத்தை எல்லை நிர்ணயம் செய்து அதற்கேற்ப முன்னகர்கவுகளை மேற்கொண்டனர். சிங்கள தேசத்தை ஆக்கிரமிக்கும் நோக்கம் அவர்களிடம் இருக்கவில்லை. தமிழர் தாயகத்தில் பல்லின கலாசாரத்திற்கு அவர்கள் தடைவிதிக்கவில்லை. சக இனங்களின் வாழ்வுரிமையை அவர்கள் மறுக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர் தாயகமாக எதை வரையறுத்தார்களோ, அதை சிங்கள தேசமும் தமிழர் தாயகமாக வரையறுத்திருந்தது. தமிழீழ விடுதலைப் போரில் தமிழர் தரப்பின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு பத்தாண்டுகள் கடந்திருக்கின்ற போதிலும் சிங்கள தேசம் தமிழர்களின் தேச எல்லை நிர்ணயத்தை இன்றும் கடைப்பிடித்து வருகின்றது. ஏனெனில், அநுராதபுரத்திற்கு அப்பால் சிங்கள தேசத்தில் எந்தவித பாதுபாப்பு

போன்ற இடங்களில் பயங்கரவாதிகளின் தங்குமிடங்கள் அழிக்கப்பட்டன.

ஆனால், தாக்குதல் நடத்தப்பட்ட முஸ்லிம் பிரதேசங்களிலோ சிங்களப் பிரதேசங்களிலோ இல்லாத பாதுகாப்புக் கெடுபிடிகள் தமிழர்கள் அதிகளவாக வாழும் வடக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. சிங்களப் பிரதேசம் முற்றுப்பெற்று தமிழர் தாயகம் ஆரம்பிக்கும் அநுராதபுரத்திற்கும் வவுனியாவிற்கும் இடையேயான பிரதேசத்தில் பாதுகாப்பு சோதனை நடவடிக்கைகள் ஆரம்பமாகின்றன.

கொழும்பில் இருந்து வருகின்ற பயணிகள் அங்கு இறக்கப்பட்டு சோதனைகள் முடிவடைந்த பின்னரே வடக்கிற்குள் நுழைய அனுமதிக்கப்படுகின்றனர். அதுபோல, கொழும்பிற்குச் செல்பவர்களும் யாழ்ப்பாணத்தில் தொடங்கி, ஏ-9 நெடுஞ்சாலையில் ஆனையிறவு, மாங்குளம், வவுனியா எனப் பல இடங்களில் இறக்கி சோதனையிடப்பட்ட பின்னர் அநுராதபுரம் எல்லையில் இறுதிச் சோதனை முடித்து சிங்கள தேசத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படுகின்றனர்.

இதற்கு அப்பால் வடக்கே பல மாவட்டங்களிலும் பாதுகாப்பு என்ற போர்வையில் படையினரின் சோதனைகள் இறுக்கமாக்கப்பட்டுள்ளன. யுத்த காலத்தில் இருந்ததைப் போன்று பிரதான வீதிகளில் முக்கிய சந்திகள், தீவகப் பிரதேசத்திற்கான நுழைவாயில்கள் அனைத்திலும் நிரந்தர சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. வயோதிபர்கள், குழந்தைகள், கர்ப்பிணிகள் கூட இறக்கப்பட்டு சோதனைக்கு பின்னரே பயணிக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

எதற்காக இந்தச் சோதனை நடவடிக்கை? யார் இதைத் தட்டிக் கேட்பது? தமிழர்களின்

அமைச்சரைப் போன்று பதிலளித்தார். கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் எந்தக் கருத்தையும் கூறவில்லை. கூட்டமைப்பின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதேபோன்றுதான் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றனர்.


ஆனால், குண்டுத் தாக்குதல்களை நடத்திய முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிங்களத் தலைவர்களோடு அடிக்கடி சந்திப்புக்களை ஏற்படுத்தி தமது மக்களின் பாதுகாப்பு தொடர்பாக பேசி வருகின்றனர். அதன் மூலம் பல விடயங்களைச் சாதித்திருக்கின்றனர்.

குறிப்பாக, முஸ்லிம் வணக்கத் தலங்களான பள்ளிவாசல்களுக்கு சோதனையிடச் செல்லும்போது நாய்களுடன் செல்ல முடியாது, சப்பாத்துக்களுடன் செல்ல முடியாது, முன்னறிவிப்பு இன்றிச் செல்ல முடியாது போன்ற விடயங்களை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறு நாட்டின் தலைவர் முப்படைகளுக்கும் உத்தரவிட்டிருகின்றார்.

ஒரு சில முஸ்லிம்கள் தாக்குதல் நடத்தியமைக்காக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் எவரும் சிரமங்களுக்கு உட்படுத்த வேண்டாம் என ஜனாதிபதியும் பிரதமரும் அடிக்கடி முப்படையினருக்கும் அறிவுறுத்துகின்றனர். முஸ்லிம் சமூகதின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அவர்கள் கேட்டிருக்கின்றனர்.

ஆனால், குண்டுகள் வெடிக்காத தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் நாளாந்தம் பெரும் தொல்லைகளை அனுபவித்துக்கொண்டிருக்க தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவருமே அரசுக்கு எந்தவிதமான அழுத்தங்களையும் கொடுக்காமல் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

தொடர்ச்சி 14ம் பக்கம்



## தமிழ் இனம் காக்கும் தீ!

நூலகமே நூலகமே
யாழ் நூலகமே
நூலோர் தொகுத்தளித்து
தந்தவற்றையெல்லாம்
காத்துவந்த களஞ்சியமே
ஆவலோடு நாளும்
உனைநாடி வருவோர்க்கு
அறிவுப் பசி தீர
அள்ளி அள்ளி
வழங்கி வந்த
அன்னையே
சிங்கள பௌத்த
வெறிபிடித்த
கொடுங்கோலர்
திட்டமிட்ட முறையில்
செய்துவரும்
தமிழின அழிப்பில்
மூட்டிய தீயிலே
பொசிங்கிப் பொடியான
தாயே
கொடியவர் மூட்டிய தீ
உலகத் தமிழர்
அகங்களிலெல்லாம்
விழிப்பறிவுத் தீயாய்
நின்றெரியும்
தமிழினப்
பகைவர்களிடமிருந்து
இனம் காக்க
உலகப் பரப்பெங்கும்
ஆயிரம் ஆயிரம்
நூலகங்கள் எழட்டும்.

- தொல்லூர் நாகன்

## இறந்த தாயிடம் பால்குடித்த எட்டு மாத குழந்தை! முள்ளிவாய்க்காலில் சுடரேற்றிய துயரின் சாட்சி

முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் 10வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தாயகத்திலும், தமிழகத்திலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் கடந்த 18ம் திகதி உணர்வுபூர்வமாக அனுஷ்ட்டிக்கப்பட்டுள்ளது. தமிழினப் படுகொலை 10ம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் தாயகத்தில் காலை பத்து முப்பது மணிக்கு அக வணக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டது, தொடர்ந்து முள்ளிவாய்க்கால் இறுதிப் போர் நடந்தபோது கோரத் தாக்குதலில் சிறுமி ராகினி



தனது கையொன்றைப் பறிகொடுத்திருந்தார். அதைவிட, இறந்த தனது தாயிடம், பிறந்து எட்டு மாதங்களே ஆகியிருந்த ராகினி பால் குடித்த காட்சி அனைவரினதும் நெஞ்சையும் கனக்கச் செய்தது. தாயின் உயிர் பிரிந்தது அறியாமல், தந்தை படுகாயங்களுக்கு இலக்காகி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது தெரியாமல் அந்த எட்டு மாத பச்சிளம் குழந்தை தாயிடம் பால் குடித்த காட்சி அனைவரினதும் நெஞ்சையும் அன்று கனக்கச் செய்தது. இது குறித்த ஆதாரபூர்வமான நிழற்படங்கள் அன்றைய பொழுதுகளில் வெளிவராதபோதும், இந்தச் சம்பவத்தை 02.04.2009 அன்று கடும் போருக்குள்ளும் வெளிவந்துகொண்டிருந்த ஈழநாதம் பத்திரிகை பதிவு செய்திருந்தது. அந்த வலி மிகுந்த நிகழ்வை நேரில் கண்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர் தெய்வேந்திரன் என்பவர் அதனை ஈழநாதம் பத்திரிகையிடம் விபரித்திருந்தார். ஆனால், அந்தச் சிறுமி இறந்த தாயிடம் பால் குடிப்பது போன்ற போலியான படங்கள் சமூகவலைத் தளங்களில் பகிரப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.





தாய் இறந்து கிடப்பது தெரியாமலே குழந்தை பால்குடித்த பரிதாபத்தைக் கண்டேன்

மனம் நெகிழ்கிறார் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர்

(அலுவலகச்செய்தியாளர்)

சிறிலங்காப் படையினரின் எறிகணை வீச்சில் தாய் இறந்து கிடப்பதை அறியாத குழந்தை அவரில் பால் குடித்துக்கொண்டிருக்கும் பரிதாபநிலையை என் கண்ணால் கண்டேன் என தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணியாளர் தெய்வேந்திரன் கண்ணர் மல்கத் தெரிவித்துள்ளார்.

தாக்குதல்களில் காயமடையும் மக்களை மருத்துவமனையில் பராமரிப்பில் ஈடுபடும் இவர் மேலும் தெரிவிக்கையில்: நாளாந்தம் எறிகணைத்தாக்குதல்களில் காயமடையும் மக்களை வாகனங்களில் இருந்து இறக்குவது முதற்கொண்டு பராமரிப்பதுபோன்ற பணிகளும் மற்றும் இறந்தவர்களை அடக்கம் செய்வதுபோன்ற பணிகளிலும் நான் ஈடுபட்டுவருகின்றேன்.

நான் பணிசெய்த நாட்களில் சிறிலங்கா அரசபடைகளின் கொடூரமான செயல்களை நேரில் பார்த்து பேரதிர்ச்சியடைந்துவிட்டேன்.

என் பணிநாளில் ஒரு முப்பது வயது மதிக்கத்தக்க தாய், கணவன், பிள்ளை ஆகியோர் படுகாயமடைந்தநிலையில் மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டனர். உடனே நாங்கள் அவர்களை இறக்கியவுடன் மருத்துவர்களால் அவர்கள் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டனர்.

இருந்தபோதிலும் அத்தாய்க்கு பலத்தகாயமாதலால் இரத்தம் போய்க்கொண்டிருந்தது. அந்நேரத்தில் குழந்தை அழவே, குழந்தைக்கு அவர் பாலூட்டினார். பால்குடித்துக் கொண்டிருக்கும்போதே அத்தாய் இறந்துவிட்டார். இச்சம்பவம் இவரின் கணவருக்குத் தெரியாது. ஆனால் குழந்தை தொடர்ந்தும் பால்குடித்துக்கொண்டிருந்தது. இந்தப் பரிதாபச் சம்பவம் தன் மனதை உருகச்செய்துவிட்டது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். (சு)

# இணைய வலையில் பழத்தில் பிழத்தவை

## வீரனுக்கு மகனாய் பிறந்தால்....




என் தங்கை மகனைப்
பார்க்கும் போதெல்லாம்
உன்னைப் போலவே
அவன் இருக்கின்றான்
அவனைப் போல
நீயிருக்கின்றாய்
உன் தந்தையும்
புலம்பெயர்ந்து ஐரோப்பா
அகதியாக வந்திருந்தால்
நீயும்
உல்லாசமாய் வாழ்ந்திருக்கலாம்
டிஸ்கோவில் ஆடியிருக்கலாம்
விஸ்கியில் மூழ்கியிருக்கலாம்
வெள்ளைக்காரிகளோடு
கூடியிருக்கலாம்
விதவிதமாய் தலை முடியை
வெட்டியிருக்கலாம்
விலை உயர்ந்த கார்
ஓடியிருக்கலாம்
வெள்ளைத் தேகத்தில்
டாட்டு குத்தியிருக்கலாம்
அம்மா அப்பாவை
டாடி மம்மியென்று
அழைத்திருக்கலாம்
வெட்கம் மானம் சுரணை இழந்து
வெள்ளைக்காரன் போல்
வாழ்ந்திருக்கலாம்
நீயோ வீரனுக்கு
மகனாய் பிறந்ததால்
மண்ணுக்காய் மடிந்தாய்
ஈழ வரலாறு புனைவோருக்கு
உன் தந்தை பிள்ளையார் சுழி
மகன் நீயோ முற்றுப்புள்ளி
பாலச்சந்திரா
ஈழ மண்ணில்
நீ வாழ்ந்தது என்னவோ
ஒன்பது ஆண்டுகள்
ஈழத் தமிழர் மனதில் வாழ்வாய்
ஓராயிரமாண்டுகள்.

- காந்தன் கவிதைகள்

## முள்ளிவாய்க்கால் முருகன் காவி கட்டினதில்லை!

புத்தனுக்கு தொப்பி போடலாம்
எண்டு வெளிக்கிட்டு
கடைசியில அல்லாவுக்கு
காவி கட்டினார்கள்!
பள்ளிவாசல்களில் இனிமேல்
அலரிப்பூக்கள் தேவைப்படலாம்!
ஆறு நேர தொழுகையில் ஒருநேரம்
பிரித் ஒலிபரப்பாகலாம்!
காத்தான்குடியில்.....
பேரீஞ்சு மரத்துக்கு இடையில்
அரசமரங்கள் நாட்டப்படலாம்!
குண்டு வைச்சது தேவாலயத்தில்
குனிந்து கும்பிடுவது புத்தனை!
கொச்சிக்கடை அந்தோனியாருக்கு
மெழுகுவர்த்தியை ஏற்றுங்கள்!
அதுவே மதநல்லிணக்கம்!
அடிப்பதாலும்
எரிப்பதாலும்
கொல்வதாலும்
வருவதற்கு பெயர்
'மதநல்லிணக்கம்' அல்ல!
அப்பிடிப்பார்த்தால்
தமிழர்களில் முக்கால்வாசிப்பேர்
காவி கட்டியிருக்கவேண்டும்!



ஆரியகுளத்து புத்தனை
கோமணம் கட்ட சொல்லி
நாங்கள் ஒருபோதும்
கேட்டதில்லை!
இவ்வளவு நடந்தும்
முள்ளிவாய்க்கால் முருகன்
காவி கட்டினதில்லை!

- தமிழ்ப்பொடியன்

பரிஸ்தமிழ் .கொம் www.ParisTamil.Com
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM

## ஒப்பரேசன் டபிள் எட்ஜ்: 34

# மடையுடைக்கும் இரகசியங்கள்

கலாநிதி
**சேரமான்**

*நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் என்ற கனவுலக சாம்ராச்சியம் அடிப்படையில் கே.பியினதோ அன்றி உருத்திரகுமாரனினதோ மூளையத்தில் உதித்த ஒன்றல்ல. உண்மையில் இக் கனவுலக சாம்ராச்சியத்திற்கான ஆணிவேர் 31.08.1980 அன்று இலண்டனில் கிருஸ்ணா வைகுந்தவாசன் என்பவரால் நடுகை செய்யப்பட்டது. அதாவது நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தை விசுவநாதன் உருத்திரகுமாரனின் தலைமையில் உருவாக்கப் போவதாக 15.06.2009 அன்று கே.பி அவர்கள் அறிக்கை வெளியிடுவதற்கு இருபத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்னரே இத்திட்டத்தை கிருஸ்ணா வைகுந்தவாசன் அவர்கள் முன்வைத்தார்.*

*அதற்கு அவர் வைத்த பெயர் 'நாடுகடத்தப்பட்ட தமிழீழ அரசாங்கம்.' ஆம், நாடுகடந்த என்பதற்குப் பதிலாக நாடுகடத்தப்பட்ட என்ற சொற்பதத்தை 1980ஆம் ஆண்டில் கிருஸ்ணா வைகுந்தவாசன் பயன்படுத்தினாரே தவிர, சாராம்சத்தில் அவர் முன்வைத்த கனவுலக சாம்ராச்சியத்திற்கும், உருத்திரகுமாரனைத் தலைவராகக் கொண்டு கே.பி உருவாக்கிய கனவுலக சாம்ராச்சியத்திற்கும் எந்த வேறுபாடும் இருக்கவில்லை.*



## மந்திரத்தால் மாங்காயை விழுத்தும் மாயாவாதத் திட்டம்

*நாடுகடத்தப்பட்ட தமிழீழத்தை அமைக்கப் போவதாக 31.08.1980 அன்று அறிக்கை வெளியிட்ட பொழுது, இன்னொரு சுவாரசியமான தகவலையும் கிருஸ்ணா வைகுந்தவாசன் வெளியிட்டார். 1982ஆம் ஆண்டு தைப்பொங்கல் நாளன்று சுதந்திர தமிழீழம் மலரும் என்பதுதான் அது.*

*ஆயுத எதிர்ப்பியக்கமாகத் தமிழீழ தேசிய சுதந்திரப் போராட்டம் முகிழ்த்திருந்த காலப் பகுதி அது. 1977 பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் ஆணை பெற்றுச் சுதந்திரத் தமிழீழம் அமைக்கப் போவதாக அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அரங்கேற்றிய செப்படி வித்தை சுரத்தை இழந்து போய், ஆயுதப் போராட்டமே சுதந்திரத் தமிழீழம் அமைப்பதற்கான ஒரேயொரு வழி என்ற நிலைப்பாட்டிற்கு தமிழ் இளைஞர்கள் வந்திருந்த நிலையில், நாடுகடத்தப்பட்ட தமிழீழ அரசாங்கத்தை அமைக்கப் போவதாக 31.08.1980 அன்று கிருஸ்ணா வைகுந்தவாசன் வெளியிட்ட அறிவித்தல், தமிழ் இளைஞர்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக விடுக்கப்பட்ட ஒன்றாகவே அப்பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளால் கருதப்பட்டது.*

*ஆயினும் இது விடயத்தில் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைதி காத்தார்கள். ஏனென்றால் நாடுகடத்தப்பட்ட தமிழீழ அரசாங்கத்தை உருவாக்குவதன் மூலம் எவ்வாறு 1982 தைப்பொங்கலுக்குள் சுதந்திரத் தமிழீழத்தை மலர வைக்க முடியும் என்பதை கிருஸ்ணா வைகுந்தவாசன் அவர்கள் தெளிவுபடுத்தவில்லை.*

*பின்னர் ஏறத்தாள ஓராண்டு கழித்து 14.11.1981 அன்று நாடுகடத்தப்பட்ட தமிழீழ அரசாங்கத்தை அமைப்பதற்கான தனது மூலோபாயத்தை கிருஸ்ணா வைகுந்தவாசன் அவர்கள் வெளியிட்ட பொழுது தான் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது மௌனத்தைக் கலைத்தார்கள். சுதந்திரத் தமிழீழத்தை அமைப்பதற்கு முப்பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்னர் கிருஸ்ணா வைகுந்தவாசனின் மூலோபாயம் பின்வருமாறு அமைந்திருந்தது:*

*(1) இலண்டனைத் தலைமையகமாகக் கொண்டு நாடுகடத்தப்பட்ட தமிழீழ அரசாங்கத்தை நிறுவுவது.*

*(2) இவ் அரசாங்கத்தை முன்னிலைப் படுத்தி ஐ.நா. மன்றத்தில் சுதந்திரத் தமிழீழம் அமைப்பதற்கு ஆதரவு கோருவது.*

*(3) தமிழீழத்தை அமைப்பதற்கு சிறீலங்கா அரசாங்கம் இடையூறு விளைவித்தால், ஐ.நா. படைகளைக் களமிறக்கி தமிழீழத்தை விடுவிப்பது.*

*கிருஸ்ணா வைகுந்தவாசனின் கனவுலகத் திட்டத்திற்கான பிரதிபலிப்பாக 1981 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் குழுவால் (அப்பொழுது அரசியல்துறை என்ற கட்டமைப்பு இல்லை) அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அவ் அறிக்கையை எழுதிய தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பின்வருமாறு குறிப்பிட்டார்:*

**அன்று நாடுகடத்தப்பட்ட தமிழீழ அரசாங்கத்தை அமைப்பதற்கான தனது மூலோபாயத்தை கிருஸ்ணா வைகுந்தவாசன் அவர்கள் வெளியிட்ட பொழுதுதான் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது மௌனத்தைக் கலைத்தார்கள்.**

*'இரத்தம் சிந்தாமல், தியாகம் செய்யாமல் விடுதலை கிடைக்கப் போவதில்லை என்பதை எமது மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். யதார்த்தமான போராட்ட நிலைமை இப்படி இருக்கும் பொழுது ஒரு சிலர் மந்திரத்தால் மாங்காயை விழுத்தும் மாயாவாதத் திட்டங்களை முன்வைக்கிறார்கள். ஐ.நா. மூலம் காரியத்தைச் சாதித்து விடலாம், ஐ.நா. படைகள் வந்து நாட்டைப் பிரித்துக் கொடுக்கும் என்ற ரீதியில் போலி நம்பிக்கையைப் புகட்டுகிறார்கள். இப்படியான கற்பனாவாத மருட்சியில் எமது மக்களும் மருண்டு விட்டால் அவர்களைப் புரட்சிகரமான ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு அணிதிரட்டுவது அசாத்தியமாகிவிடும் அல்லவா?'*



*கிருஸ்ணா வைகுந்தவாசன் அவர்களின் தேசப் பற்றைத் தமிழீழ விடுதலைப் புலிகள் மதித்தார்கள். அன்றைய காலப்பகுதியில் ஐ.நா. மன்றுக்குள் தமிழர்கள் நுழைவதென்பதோ, அங்கு இனவழிப்புப் பற்றி நான்கு வார்த்தைகள் பேசுவதோ எளிதான விடயங்கள் அல்ல. அப்படியான சூழலில் ஐ.நா. பொதுச்சபையில் நடைபெற்ற வெளியுறவுத்துறை அமைச்சர்களுக்கான அமர்வில், சிறீலங்கா வெளியுறவுத்துறை அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீத் போன்று பாசாங்கு செய்து, மேடையில் ஏறி சில வினாடிகள் சிறீலங்கா அரசாங்கம் மேற்கொண்டிருந்த தமிழின அழிப்பை வெளிச்சம் போட்டுக் காட்டிய பெருமை கிருஸ்ணா வைகுந்தவாசனுக்கு இருந்தது. அதற்காகத் தமிழ் மக்களை கனவுலகிற்குள் கொண்டு சென்று தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கும் வகையில் அவர் நடந்து கொள்வதைப் பார்த்துக் கொண்டு வாளாவிருப்பதற்கு அன்றைய காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக இருக்கவில்லை.*

*துர்ப்பாக்கியவசமாக 15.06.2009 அன்று உருத்திரகுமாரனைத் தலைவராகக் கொண்டு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தை அமைக்கப் போவதாக கே.பி அறிவித்த பொழுது இதுவிடயத்தில் அன்று வெளிநாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொண்டிருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் அமைதி காத்தார்கள்.*

*கே.பியும், அக்காலப் பகுதியில் சிங்களப் புலனாய்வுத்துறையின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இயங்கிய ராம், நகுலன், பிரபா, தவேந்திரன், விநாயகம் போன்றோரும் வகுத்த சதிவலையில் இவர்கள் வீழ்ந்தார்களா, அல்லது கே.பியையும், கே.பியிற்குப் பக்கபலமாக நின்ற சிங்களத்தின் ஏவலாளிகளையும் எதிர்கொள்வதற்கான திராணியற்று இவர்கள் வாளாவிருந்தார்களா? என்பதை இவர்கள் தான் பகிரங்கப்படுத்த வேண்டும்.*

தொடர்ச்சி 12ம் பக்கம்

## புலிகள் மீதான தடை தமிழுணர்வுக்கு எதிரானது

**- பழ.நெடுமாறன்**

விடுதலைப் புலிகள் மீது மத்திய அரசு விதித்துள்ள தடை நீட்டிப்பு தமிழுணர்வுக்கு எதிரானது என்றார் உலகத் தமிழர் பேரமைப்புத் தலைவரும் தமிழர் தேசிய முன்னணி தலைவருமான பழ. நெடுமாறன். தஞ்சாவூர் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் மே 18 நடைபெற்ற இனப்படுகொலை நாள் 10ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நம் தமிழ் இனம் வரலாற்றுச் சிறப்புப் பெற்றது. ஐம்பதாயிரம் ஆண்டுகளில் எவ்வளவோ வெற்றிகளை நம் தமிழினம் பெற்றது. தென் கிழக்கு ஆசிய நாடுகளை தங்கள் ஆளுகையின் கீழ் தமிழர்கள் வைத்திருந்தனர். அப்படிப்பட்ட தமிழினம் 2009 ஆம் ஆண்டில் பேரழிவைச் சந்தித்தது.

அப்போது உலக நாடுகள் எதுவும் அந்த இனத்துக்கு ஆதரவு அளிக்கவில்லை. இந்த அழிவின் எச்சங்கள் உலகம் முழுவதும் உள்ள தமிழர்களின் நெஞ்சங்களில் நெருப்பாய் எரிந்து கொண்டிருக்கிறது. அது அணையக்கூடாது. அவ்வாறு இருந்தால்தான் நம் இனம் மீண்டும் எழுச்சி பெறும். நாம் செம்மாந்த நிலையை எட்ட முடியும்.

இந்த 10ம் ஆண்டு நினைவு நாளையொட்டி தஞ்சாவூர் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் யூலை 6, 7ம் திகதிகளில் மாநாடு நடத்தப்படவுள்ளது. இதைத் தொடர்ந்து திருச்சி, மதுரை, புதுச்சேரி நகரங்களிலும் மாநாடு நடத்தப்படும். விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் 5 ஆண்டுகளுக்கு மத்திய பா.ஜ.க. அரசு தடையை நீட்டித்துள்ளது. 2009ம் ஆண்டில் விடுதலைப் புலிகளை முற்றிலுமாக அழித்து ஒழித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், இந்தத் தடை நீட்டிப்புக்கான அவசியம் என்ன? விடுதலைப்புலிகள் மீதான தடையை காங்கிரஸ் அரசு 1991 ஆம் ஆண்டில் விதித்தது. தமிழ்நாட்டையும் சேர்த்து தமிழீழம் கேட்டு விடுதலைப்புலிகள் போராடுவதால், இந்தியாவுக்கு ஆபத்து என அப்போதைய காங்கிரஸ் அரசு கூறியது.

ஆனால், விடுதலைப்புலிகள் இயக்கம் தொடங்கப்பட்ட நாள் முதல் 2009 ஆம் ஆண்டு வரை இந்தியாவுக்கு எதிராகச் செயற்பட்டதில்லை.

இந்தியாவுக்கு எதிரான நாடுகளிடமும் உதவிகள் பெற்றதில்லை. இந்த விடயத்தில் பிரபாகரன் தெளிவாக இருந்தார். இதைப் பிரதமர் மோடி உணர வேண்டும். ஆனால், இந்திய அரசு உதவி செய்த சிங்கள அரசு சீனா, பாகிஸ்தானிடம் உறவு கொண்டாடியது. விடுதலைப்புலிகள் மீதான தடை நீட்டிப்புக்கு அப்போதைய காங்கிரஸ் அரசு கூறிய காரணத்தையே இப்போதைய பா.ஜ.க. அரசும் கூறுகிறது. எனவே, காங்கிரசுக்கும், பா.ஜ.கவுக்கும் வேறுபாடு இல்லை. விடுதலைப்புலிகள் மீதான தடை நீட்டிப்பு என்பது தமிழுணர்வுக்கு எதிரானது. இது, தமிழர்களுக்கு எதிரான தடையாகவே கருதப்படுகிறது. தமிழர்களை ஒடுக்க நினைப்பது ஒருபோதும் வெற்றி பெறப்போவதில்லை என்றார் நெடுமாறன்.

# தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசு வரும்வரை எமது மக்களைக் காக்கவேண்டியது தாயக, புலம்பெயர் மக்களின் கடமை!

**தமிழீழக் காவல்துறையில் ஒரு முதன்மை ஆய்வாளராகவும் முல்லைத்தீவு மாவட்ட கண்காணிப்பாளராகவும் பணியாற்றி முள்ளிவாய்க்கால் இறுதிக் களம் வரை தமிழீழ மக்களோடு மக்களாக நின்று தமிழீழக் காவல்துறையின் பொறுப்பதிகாரியாகவும் கடமையாற்றி இனவழிப்பின் சாட்சியமாகவும் இருந்துவரும் திரு.ரஞ்சித்குமார் அவர்கள், ஈழமுரசு வாசகர்களுக்கு வழங்கிய சிறப்பு நேர்காணலின் சென்ற இதழின் தொடர்ச்சி இது.**

**சந்திப்பு: கந்தரதன்**

**கேள்வி: கடமையின் போது வீரச்சாவடைந்த காவல்துறையினர் பற்றிய தகவல்கள் வெளியாகவில்லை. அது பற்றிக் குறிப்பிடுங்கள்...**

**பதில் :** காவல்துறையினர் பலர் தமது கடமையின் போது உயிரிழந்துள்ளனர். இறுதி யுத்தத்தின் போது அண்ணளவாக சுமார் 500 பேர்வரை உயிரிழந்திருக்கவேண்டும். இறுதி யுத்தத்தின்போது சரியான கணக்கெடுப்புக்கள் இருந்திருக்கவில்லை. முதல்முதலாக 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி யாழ்ப்பாணம் பழைய பூங்கா மீது சிறீலங்கா விமானப் படையின் குண்டுவீச்சுத் தாக்குதலின் போது, எமது காவல்துறையின் உப பரிசோதகர் கமலானந்தன் அவர்கள் வீரச்சாவடைகின்றார். அதன்பின்னர் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி தயாகரன் மற்றும் சுதாகரன் ஆகிய இரண்டு காவல்துறை உத்தியோகத்தர்கள் கடமை முடிந்து திரும்பியபோது, வவுனியா இளமருதம்குளம் பகுதியில் வைத்து ஒரு பதுங்கித் தாக்குதலில் வீரச்சாவடைந்தனர். இப்படிப் பல தாக்குதல் சம்பவங்களில் காவல்துறையினர் வீரச்சாவடைந்துள்ளனர். அதேநேரம் மட்டக்களப்பில் காவல் பணிமனையில் கடமையில் ஈடுபட்டிருந்தபோது, 1997 ஆம் ஆண்டு அப்பகுதி சிறீலங்கா விசேட அதிரடிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்ட போது, உபபரிசோதகர் கார்த்திகாயினியும் தலைமைக் காவலர் கீதாவும் தங்களைத் தாங்களே சுட்டு வீரச்சாவடைகின்றனர். இப்படிப் பல சம்பவங்களைக் குறிப்பிடலாம். இறுதி யுத்தகாலப் பகுதியில் கடமையின் போது பல தமிழீழக் காவல்துறை வீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**கேள்வி: இறுதி யுத்தகாலப் பகுதியில் புலம்பெயர் தேசங்களில் மக்கள் வீதிகளில் இறங்கி கடுமையான போராட்டங்களை முன்னெடுத்தனர். இது யுத்தத்தின் பிடியில் இருந்த மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியதா?**

**பதில்:** இறுதி யுத்த காலப்பகுதியான 2009 ஜனவரிக்குப் பின்னர்தான் புலம்பெயர் நாடுகளில் போராட்டம் அதிகமாக சூடுபிடித்திருக்கும் என்று நினைக்கின்றேன். அந்தக்காலப் பகுதியில் புலிகளின் குரல் வானொலி மட்டுமே இலத்திரனியல் ஊடகமாக இருந்தது. அதனை புலிகளின் குரல் வானொலி செய்தி ஆசிரியர் தவபாலன் அவர்கள் தினமும் புலம்பெயர் நாடுகளில் இன்று எவ்வாறான போராட்டங்கள் நடைபெற்றன என்று விபரமாக அறிவிப்பார். உண்மையிலேயே அது கடும் எழுச்சியாகத்தான் இருந்தது. மக்களுக்கு அங்கே சாப்பாடு இல்லை, தண்ணீர் இல்லை, மருந்து இல்லை. அத்தோடு நின்மதியான வாழ்க்கை இல்லை. ஆனால் புலம்பெயர் மக்கள் இரவு பகலாய் வீதியில் நிற்கின்றார்கள் என்பது அந்த மக்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது. அதாவது நாங்கள் தனித்த மனிதர்கள் இல்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் அங்கு நிற்பவர்களுக்குத் தெரியும் சண்டை ஒரு கிழமையோ இரண்டு கிழமையோ முடிந்துவிடப்போகின்றது என்பது தெரியும். அதேநேரம் புலம்பெயர் மக்கள் தமது உழைப்பாலே சேகரித்த வன்னி மக்களுக்கான உணவுப்பொருள்களும் மருந்துப்பொருள்களும் அடங்கிய 'வணங்கா மண்' கப்பல், அது கிடைக்காவிட்டாலும் அந்தச் செய்தி மக்களுக்கு ஓர் உற்சாகத்தைக் கொடுத்தது. எங்களுக்கும் மக்கள் இருக்கின்றார்கள் என்று. அந்த உற்சாகத்தை நான் நேரடியாகக் கண்டு கேட்டிருக்கின்றேன். போரின் முடிவு எப்படி வந்ததோ இல்லையோ அது இரண்டாம் பட்சம் ஆனால், ஓர் உளரீதியான பிணைப்பு தாயக மக்களுக்கும் புலம்பெயர்வாழ் மக்களுக்கும் உச்ச நிலையில் இருந்தது என்பதை நான் உணர்ந்திருக்கின்றேன்.

**கேள்வி: சிறீலங்கா இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணி வன்னிப்பகுதியில் ஊடுருவித் தாக்குதல்களை நடத்தியமை எவ்வாறு சாத்தியமானது?**

**பதில்:** ஈழப்போராட்ட வரலாற்றில் ஆழ ஊடுருவும் படையணி பற்றிய பதிவுகள் நிறையவே உள்ளன. இந்த ஆழஊடுருவும் படையணி (Longe Range Reconnaissance Patool -LRRP) பற்றிய தகவல்கள் 2000 ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினருக்கு எட்டியிருந்தன. சில முன்னேற்பாடுகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆரம்ப காலங்களில் மன்னார் மாவட்டம் பெரியமடு என்ற இடத்தில் வைத்து தளபதி ஜெயம் அவர்கள் மீதும், வன்னி மாவட்டம் கொக்காவில் பகுதியில் வைத்து அரசியல் துறையினர் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல் முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்திருந்தன. ஆனால், 29.06.2001 அன்று கிளிநொச்சி ஆனைவிழுந்தான் பகுதியில் நடைபெற்ற ஆழஊடுருவும் படையணியின் தாக்குதலில் கடற்புலிகளின் மூத்த தளபதி லெப். கேணல் கங்கையமரனும் மேஜர் தசரதனும் வீரச்சாவடைந்தனர். இதன்பின் 26.09.2001 அன்று புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் இடம்பெற்ற தாக்குதலில் கேணல் சங்கர் அவர்கள் வீரச்சாவடைந்தார். இதனைத்தொடர்ந்து வந்த காலங்களில் வன்னிப் பகுதியெங்கும் பரவலாக நடத்தப்பட்ட தாக்குதல்களில் சில விடுதலைப்புலிகளின் இலக்குகளும் பொதுமக்களின் இலக்குகளும் தாக்குதலுக்கு உள்ளாகின.

வன்னியில் இடம்பெற்ற ஆழஊடுருவும் படையணியின் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடைய இடங்களுக்கு விசாரணைகளுக்காக சென்றுள்ளேன். அதில் ஒன்றான புளியங்குளம் காட்டுப்பகுதியில் இடம்பெற்றிருந்த சம்பவத்தைக் குறிப்பிடலாம் என நினைக்கின்றேன். ஏப்ரல் மாதம் 2006 ஆம் ஆண்டு, வவுனியா மாவட்டம் பனிக்கநீராவி, பெரியமடு காட்டுப் பகுதிக்கு மூன்று பேர் வேட்டையாடச் சென்றிருந்தனர். நான்கு நாட்கள் ஆகியும் அவர்கள் திரும்பிவரவேயில்லை. ஆனால், அவர்கள் கொண்டுசென்ற 3 வேட்டை நாய்களும் திரும்பி வந்து அமைதி இழந்து காணப்பட்டன. இதனையடுத்து, உறவினர்களால் தமிழீழக் காவல்துறை பணிமனைக்கு அறியத்தரப்பட்டதையடுத்து, நாம் பொதுமக்களுடன் இணைந்து காட்டுப் பகுதியில் தேடுதல் நடத்தியபோது, 17.04.2006 ஆம் நாள் மூன்று சடலங்ககளைக் கண்டுபிடித்தோம். தியாகராசா கோணேஸ்வரன் (32 வயது), சிவசம்பு நவீந்திரராசா (36 வயது), சிவகுரு இராசலிங்கம் (34 வயது) ஆகியோரே உயிரிழந்தவர்கள் என உறவினர்கள் அடையாளம் காட்டினார்கள். இவர்கள் கொடூரமான முறையில் வெட்டியும் குத்தியும் கொல்லப்பட்டிருந்தனர்.

அப்பகுதியில் கிடைத்த சில தடயப் பொருட்களின் அடிப்படையில் இக்கொலைகள் சிறீலங்கா இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணியினரால் நடத்தப்பட்டிருந்ததை உய்த்தறியமுடிந்தது. இது பற்றி அவ்வேளை வவுனியாவில் செயற்பட்டுக்கொண்டிருந்த இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு (SLMM)





அறிவிக்கப்பட்டதற்கமைய அதன் பிரதிநிதிகள் சம்பவ இடத்திற்கு வருகைதந்து விசாரித்தனர். ஆனால், இக்குற்றச்சாட்டுக்களை வழமைபோல் சிறீலங்கா அரசு மறுத்துவிட்டது.

**கேள்வி: ஆழஊடுருவும் படையணியின் தாக்குதல்களை எப்போதாவது சிறீலங்கா அரசோ அல்லது அதன் படைத்துறையோ உரிமைகோரியுள்ளதா?**

**பதில்:** இதுவரைக்கும் இல்லையென்றே கூறவேண்டும். ஏனெனில் இப்படையணியால், வன்னியில் பெருமளவு பொதுமக்களின் இலக்குகள் தாக்கப்பட்டுள்ளன. பள்ளி மாணவர்கள், மதகுருமார்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலர் என சமூகத்தின் அனைத்துமட்டத்தினரும் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர். பொதுப் போக்குவரத்துப் பேருந்து, நோயாளர் காவுவண்டி என புலிகளின் பாவனையில் இல்லாத ஊர்திகளை சந்தேகத்திற்கு அப்பால் உறுத்திப்படுத்திய நிலையிலும் பொதுமக்களின் இலக்குகள் வேண்டுமென்றே தாக்கப்பட்டுள்ளன. இது ஓர் அரசின் இராணுவத்தினால் நடத்தப்பட்ட அப்பட்டமான பயங்கரவாதத் தாக்குதல் வடிவம்



என்றே கூறமுடியும். தனக்கெதிரான குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பித்துக்கொள்ளவும், ஒரு குழப்ப நிலைமையை ஏற்படுத்தவும் இப்படியான தாக்குதல்களை சிறீலங்கா அரசோ, அதன் படைத்துறையோ இதுவரை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளவில்லை.

**கேள்வி: இந்த ஆழஊடுருவும் படையணிக்கு எதிரான புலிகளின் எதிர்ப்பு நடவடிக்கைகள் எப்படி இருந்தன?**

**பதில்:** தாக்குதல் நடைபெற்ற ஆரம்ப காலங்களில் வன்னியில், சிறிது குழப்ப நிலை ஏற்பட்டது உண்மைதான். ஆனால், சுதாரித்துக்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள், சிறப்பு முறியடிப்பு அணிகளை உருவாக்கினர். தமிழீழக் காவல்துறையின் உள்ளகப் பாதுகாப்புப்பிரிவும் நவீன மயப்படுத்தப்பட்டது. புலிகளின் தொழில்நுட்ப வளர்ச்சியினால், நவீன திசைகண்டுபிடிப்புக் கருவிகள் (Direction Finder) பயன்பாட்டுக்கு வரத்தொடங்கியதனால், ஆழ ஊடுருவும் படையணியினர் பின்தொடரப்படும் நிலை ஏற்பட்டது. இப்படியான ஒரு கட்டத்தில்தான் 2008 நவம்பர் 26ஆம் நாள் வன்னியில் முக்கிய இலக்கொன்றைத்தேடி வந்த 'எட்டு மனிதர் குழு (Eight man team)' ஒன்று புலிகளின் சிறப்பு அணியொன்றினால் ஒட்டுசுட்டான் பகுதியில் வைத்து வழிமறித்து தாக்கப்பட்டது. இதில் ஆழ ஊடுருவும் அணியின் முக்கிய அதிகாரியான லெப்.கேணல் லலித் ஜெயசிங்க கொல்லப்பட்டார்.



லெப்.கேணல்
லலித் ஜெயசிங்க

தொடர்ச்சி 16ம் பக்கம்

# இந் நாட்டின் பூர்வீகக் குடி மக்கள் இந்துத் தமிழ் மக்களே...

சி.வி.விக்னேஸ்வரன்



பௌத்தமானது இலங்கைக்குக் கொண்டு வந்த போது அம் மதத்தை முதன் முதலில் தழுவியவர்கள் தமிழரே. தேவநம்பியதீசன் ஒரு தமிழ் மன்னன். சில நூற்றாண்டு காலங்கள் இலங்கையின் வடகிழக்கைச் சேர்ந்த இந்துத் தமிழர்கள் பௌத்தர்களாக மாறி தமிழ் பௌத்தர்களாகவே வாழ்ந்தார்கள் என வடமாகாண சபையின் முன்னால் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வாரம் ஒரு கேள்விக்கு பதிலளித்து ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கும் கேள்வி - பதிலில் இம்முறை இலங்கை ஒரு பௌத்த நாடு என்ற கருத்தை வலியுறுத்த தெற்கில் பலரும் எத்தனிக்கின்றார்கள். இது ஒரு சிங்கள பௌத்த நாடு. நாம் அவ்வாறான நடவடிக்கைகளுக்கு இடமளியோம் என்ற விதத்தில் பௌத்த பிக்குமார்கள் கூறிவருகின்றார்கள். இதுபற்றி உங்கள் கருத்து என்ன? இலங்கை பௌத்த சிங்கள நாடா? எனக் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கே இவ்வாறு பதில் அளித்துள்ளார்.

அதில் அவர் விரிவாகக் குறிப்பிடப்பட்டு உள்ளதாவது, இலங்கையானது அதன் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் சொந்தம். தனி இனமோ மதமோ அதனைச் சொந்தம் கொண்டாட முடியாது. இது பல்லினம் வாழும், பல மதங்கள் நிலவும், பன் மொழிகள் பேசப்படும் நாடு. இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று கூறுவதன் காரணம்? என்ன என்று நாம் பரிசீலிக்கவேண்டும். அதாவது இலங்கை பௌத்த சிங்கள நாடு, மற்றைய மத, இன, சமூக மக்கள் வந்தேறு குடிமக்கள். அவர்களுக்கு நாம் பார்த்துக் கொடுத்தால்தான் உரிமைகள் கிடைக்குமே ஒளிய தாமாக அவர்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்ற அடிப்படையிலேயே இவ்வாறு புத்த பிக்குகளாலும் மற்றையோராலும் சொல்லிவரப்படுகிறது. இது உண்மையில் இலங்கையில் சிறுபான்மையினரை அடிமைப்படுத்த, பயப்படுத்த, அந்நியப்படுத்த எடுத்து வரப்படும் நடவடிக்கைகள்.

**எவ்வாறு சில இஸ்லாமிய இளைஞர்கள் மூளைச்சலவை செய்யப்பட்டு பிறமத அப்பாவி மக்களின் உயிரைப் பறித்தால் தமக்கு சொர்க்கத்தில் 72 கன்னியருடன் வாழ இடம் கிடைக்க வைக்கும் என்ற கருத்தில் ஊறவைக்கப் பட்டார்களோ அதேபோல சிங்களப் பௌத்தர்களும் மூளைச்சலவை செய்யப்பட்டு 1919க்குப் பின்னர் இலங்கை சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்தமே என்ற கருத்துக்கு அடிமையாக்கப்பட்டு வருகின்றனர்.**

பிரச்சினைகள் ஏற்பட்டதே இவ்வாறான பேச்சுக்களாலும் சிந்தனையாலுமே. கடந்த நூறு வருடங்களாக பெரும்பாலும் பௌத்த பிக்குகளும் மற்றும் சிங்கள பௌத்த புத்திஜீவிகள் சிலரும் சிங்கள மக்களிடையே மூளைச்சலவை செய்து இவ்வாறான தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். எவ்வாறு சில இஸ்லாமிய இளைஞர்கள் மூளைச்சலவை செய்யப்பட்டு பிறமத அப்பாவி மக்களின் உயிரைப் பறித்தால் தமக்கு சொர்க்கத்தில் 72 கன்னியருடன் வாழ இடம் கிடைக்க வைக்கும் என்ற கருத்தில் ஊறவைக்கப்பட்டார்களோ அதே போல சிங்கள பௌத்தர்களும் மூளைச்சலவை செய்யப்பட்டு 1919க்குப் பின்னர் இலங்கை சிங்களப் பௌத்தர்களுக்குச் சொந்தமே என்ற கருத்துக்கு அடிமையாக்கப்பட்டுவருகின்றனர். ஆனால் உண்மை அதுவல்ல. இந் நாட்டின் பூர்வீகக் குடி மக்கள் இந்துத் தமிழ் மக்களே. அவர்கள் புத்த பிரான் பிறக்க முதலே இலங்கையில் வாழ்ந்து வந்துள்ளார்கள். இந்து சமுத்திரத்தில் இடம் அமைந்திருந்து கடல் கொண்ட குமரிக் கண்டத்துடன் அவர்கள் பூர்வீகம் தொடர்புடையது.

இலங்கையைப் பாதுகாக்கும் 5 ஈஸ்வரங்களான முன்னேஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், தொண்டீஸ்வரம் ஆகியவற்றில் காணப்பட்ட சிவலிங்கங்கள் புத்த காலத்திற்கு முன்பிருந்தே இங்கு எழுந்தருளி இருந்தவை. இன்று தெவிநுவர அல்லது டொன்றா என்று அழைக்கப்படும் விஸ்ணு கோயில் தொண்டீஸ்வர சிவலிங்கத்தின் மேல் கட்டப்பட்ட கோயிலாகும். பௌத்தமானது இலங்கைக்குக் கொண்டு வந்தபோது அம் மதத்தை முதன் முதலில் தழுவியவர்கள் தமிழரே. தேவநம்பியதீசன் ஒரு தமிழ் மன்னன். சில நூற்றாண்டு காலங்கள் இலங்கையின் வடகிழக்கைச் சேர்ந்த இந்துத் தமிழர்கள் பௌத்தர்களாக மாறி தமிழ் பௌத்தர்களாகவே வாழ்ந்தார்கள். அக் கால கட்டத்தில் வழக்கில் இருந்த தொல்லியல் பௌத்த எச்சங்களே இன்று வடமாகாணத்தில் அடையாளப்படுத்தப்படும் பௌத்த எச்சங்கள்.

இவை தமிழ் பௌத்தர் காலத்து பௌத்த எச்சங்களே. சில வருடங்களுக்கு முன்னர் பேராசிரியர் சுனில் ஆரியரத்தின தெமள பௌத்தயோ (தமிழ் பௌத்தர்கள்) என்ற நூலை சிங்கள மொழியில் வெளியிட்டிருந்தார். தமிழர்கள் பௌத்தர்களாக ஒரு காலத்தில் வாழ்ந்து வந்தமை பற்றி அந் நூலில் அவர் ஆராய்ந்துள்ளார். தெமள பௌத்தயோ காலக்கிரமத்தில் பௌத்தத்தைக் கைவிட்டு இந்து சமயத்தை மீண்டும் தழுவினர்.

இவ்வளவுக்கும் சிங்கள மொழி நடைமுறைக்கு வந்தது கி.பி. 6ம் அல்லது 7ம் நூற்றாண்டிலேயே. அதற்கு முன்னர் எழுதப்பட்ட மகாவம்சம் என்ற நூல் பாளி மொழியிலேயே எழுதப்பட்டது. அப்போது சிங்கள மொழி பிறக்கவில்லை. இந் நாட்டில் பேசப்பட்ட தமிழ் மொழியை அத்திவாரமாக வைத்து அதன் மேல் பாளி மொழியினால் அமைக்கப்பட்டு நடைமுறைக்கு வந்த மொழியே சிங்கள மொழி. பாளி மொழியில் சிகல என்றால் சிங்கம். முதன் முதலில் சிகல என்ற சொல் கி.பி. 4ம் 5ம் நூற்றாண்டுகளின் படைப்பான பாளி மொழியில் வெளிவந்த தீபவம்சத்தில் குறிப்பிடப்படுகிறது. சிங்கங்கள் அந்தக் காலத்தில் இங்கிருந்ததாலோ என்னவோ இந்தத் தீவு சிகல என்று அழைக்கப்பட்டது எனப்படுகிறது. 5ம் - 6ம் நூற்றாண்டுகளில் வெளிவந்த பாளி மொழிப் படைப்பான மகாவம்சத்தில் இரண்டு தடவைகள் சிகல என்ற சொல் பாவிக்கப்படுகிறது. சிங்கள மொழியோ, சிங்கள இனமோ இந்த இரண்டு பாளி மொழி நூல்களில் குறிப்பிடப்படவில்லை. இந்த இரு நூல்களின் பின்னரே சிங்கள மொழி திரட்டப்பட்டு தொகுக்கப்பட்டது.

எச்.ஏ.ஜே.ஹுலுகல்ல 1947ல் வெளிக்கொண்டு வந்த 'சுற்றுலாப் பயணிகளுக்கான செய்திகள்' என்ற குறு நூலில் சிங்களவர்கள் ஒரு கலப்பு இனம் என்றும், சிங்கள மொழியானது பெரும்பாலும் தமிழ் மொழியால் வளமாக்கப்பட்டது என்றும் கூறியுள்ளார்.

**துட்டகைமுனுவை சிங்கள அரசன் என்று குறிப்பிடுவது பிழையானது. எல்லாளன் இந்துத் தமிழன் துட்டகைமுனு பௌத்த தமிழன் என்பதே உண்மை.**

முதலியார் டபிள்யு. எஃப். குணவர்தன அவர்கள், 'சிங்கள மொழியானது அடிப்படையில் ஒரு திராவிட மொழி. அதன் அடித்தளம் திராவிடம். அதன் மேல் கட்டப்பட்ட ஆரிய மொழியொன்றைச் சேர்ந்ததே சிங்கள மொழி' என்று கூறியுள்ளார். அந்த ஆரிய மொழியே பாளியாகும். பௌத்தத்தைக் கொண்டு வந்தவர்கள் பாவித்தது பாளி மொழியையே. ஆனால் அக்கால மக்கள் பாவித்த மொழி தமிழ். தமிழும் பாளியும் கலந்ததே சிங்கள மொழி. அது 6ம் - 7ம் நூற்றாண்டுகளிலேயே மொழி அந்தஸ்தை அடைந்தது. பாளியில் இருந்து வந்த படியால் ஆதி சிங்கள மொழி பாளி காலத்திலேயே இருந்து வந்தது என்று சிலர் கூறுவது நகைப்புக்குரியது. என்னுடைய தாத்தா 100 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்தார். ஆகவே நான் நூறு வருடங்களுக்கு முன்னரே இருந்து வாழ்ந்து வருகின்றேன் என்று கூறுவது போல் இருக்கின்றது!

மேலும் துட்டகைமுனுவை சிங்கள அரசன் என்று குறிப்பிடுவது பிழையானது. எல்லாளன் இந்துத் தமிழன் துட்டகைமுனு பௌத்த தமிழன் என்பதே உண்மை.

ஆகவே சரித்திர ரீதியாகப் பார்த்தால் மொழி ரீதியாகவும் மத ரீதியாகவும் இலங்கையில் ஆதியில் குடிகொண்டிருந்தவர்கள் தமிழ் மொழி பேசிய இந்துக்களே. இந்துக்கள் என்பதிலும் பார்க்க சைவசமயிகளே என்று கூறினால் அதுவே பொருத்தமானது.

அன்று தொடக்கம் அதாவது புத்த காலத்திற்கு முன்பிருந்தே தற்காலத்தில் சுமார் நூறு இருநூறு வருடங்களுக்கு முன் வரையில் மேற்கில் நீர்கொழும்பில் இருந்து வடபால் நோக்கிப்பரந்து கிழக்கில் கதிர்காமம் வரையில் தொடர்ந்து வியாபித்து வாழ்ந்து வந்தவர்கள் தமிழர்களே. இன்றும் வடகிழக்கு மாகாணங்களின் பெரும்பான்மையர் தமிழர்களே. சிங்கள மக்கள் என்றுமே வடக்கில் வியாபித்து வாழவில்லை.

உண்மையில் 1956ம் ஆண்டு -சிங்களம் மட்டும்- சட்டம் கொண்டுவரப்பட்ட போது வடகிழக்கிற்கு தமிழ் மொழியே உத்தியோக பூர்வ மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும் அல்லது இலங்கை சமசமாஜாக் கட்சி, கொம்யூ-னிஸ்ட் கட்சி போன்றவை அன்று கூறியவாறு தமிழ், சிங்களம் இரு மொழிகளுக்கும் நாடு பூராகவும் சம உரிமை வழங்கியிருக்க வேண்டும்.

தொடர்ச்சி 18ம் பக்கம்

## இலங்கை சிங்கள பௌத்த நாடு அல்ல என்று எவரும் கூறமுடியாது

**- ரொஹான் குணரத்ன -**



இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடாகும். இது சிங்கள பௌத்த நாடு அல்ல என்று எவரும் கூறமுடியாது. ஆனால் இலங்கை சிங்கள பௌத்த நாடல்ல என்று கூறுகின்ற அமைச்சர் ஒருவரின் கருத்து கவலையளிக்கிறது என பிரபல பயங்கரவாத எதிர்ப்பு விவகார நிபுணரான பேராசிரியர் ரொஹான் குணரத்ன தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை சிங்கள பௌத்த நாடல்ல என்று கூறுகின்ற அமைச்சர் ஒருவரின் கருத்து கவலையளிக்கிறது. தற்போதைய சூழ்நிலையில் அவரின் கருத்தினால் பௌத்தர்கள் மேலும் கோபமடையக்கூடும். அரசியலமைப்பில் எவ்வாறெனினும், எதுவாயினும் கூறப்பட்டிருக்கலாம். ஆனால் இது ஒரு சிங்கள பௌத்த நாடு என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஒப்ரேசன் டமில் எட்ஜ்...

எது எப்படியோ, மந்திரத்தால் மாங்காயை விழுத்தும் கே.பியின் மாயாவாதத் திட்டத்தால் பலர் மருண்டு போனார்கள் என்பது தான் உண்மை. அதிலும் வன்னிப் போரில் 146,679 தமிழர்களைக் கொன்று குவித்தும், காணாமல் போகச் செய்தும் பெரும் இன வழிப்பை அரங்கேற்றிய சிங்களத்திற்குப் பதிலடி கொடுக்க வேண்டும் என்று புலம்பெயர் தேசங்களில் துடித்த பலர் கே.பியின் அறிவிப்பால் மருண்டு போனார்கள்.

இது போதாதென்று கே.பியின் மாயமான் திட்டத்தை எதிர்கொள்ள முடியாத அன்றைய அனைத்துலகத் தொடர்பகப் பதில் பொறுப்பாளர் நெடியவன், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தில் அனைத்துலகத் தொடர்பகப் போராளிகளுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்று அப்பொழுது மலேசியா சென்று கே.பியை சந்தித்த கலாநிதி முருகர் குணசிங்கம் அவர்களிடம் தூது அனுப்பினார் (இது பற்றித் தனது நூல் ஒன்றில் கலாநிதி முருகர் குணசிங்கம் ஒப்புதல் வாக்குமூலமளித்துள்ளார்).

இங்கு இன்னுமொரு விடயத்தையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும். நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் என்ற கனவுலக சாம்ராச்சியத்தை உருவாக்கும் கே.பியின் நயவஞ்சகத் திட்டத்தை அமுல்படுத்தும் நடவடிக்கைகளில் முன்னின்று செயற்பட்டவர்களில் கணிசமானோர் தமிழீழ விடுதலைப் புலிகளால் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள். இவர்களோடு தமது பன்னாட்டு ஆயுத வழங்கல்கள் முடக்கப்பட்டமைக்குக் காரணமாக இருந்தவர்கள் என்று யுத்த காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளால் சந்தேகிக்கப்பட்ட ஒரு தொகுதியினரும் இருந்தார்கள்.

'தேட்டம்' என்ற செயற்திட்டத்தின் கீழ் 2005ஆம் ஆண்டில் புலம்பெயர் தேசங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளால் திரட்டப்பட்ட நிதியில் ஒரு தொகுதி இந்த இரண்டாவது தரப்பினரிடம் முதலீடாக இருந்தது. வன்னியில் யுத்தம் தீவிரமடைந்த பொழுது இந்த நிதியைப் பயன்படுத்தி புதிய படைக்கல கொள்வனவுகளை மேற்கொள்வதற்கான முயற்சிகள் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டன. எனினும் தாம் முதலீடு செய்த நிதி நட்டத்தில் போய் விட்டதாக இவர்களில் சிலர் கதையளந்து தமிழீழ விடுதலைப் புலிகளை ஏமாற்றினார்கள். இவ்வாறு நடந்து கொண்டவர்களில் கே.பி.ரெஜி என்றழைக்கப்படும் காந்தலிங்கம் பிறேம ரெஜி அவர்கள் முதன்மையானர் (இவரது செப்படி வித்தைகள் பற்றி ஏற்கனவே வெளிவந்த தொடர்களில் நாம் வெளிக்கொணர்ந்திருந்தோம்).

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலீடுகளை வைத்திருந்து அதனை உரிய நேரத்திற்கு வழங்காமல் அது நட்டத்தில் போய் விட்டதாக நாடகமாடியவர்கள் புலம்பெயர் தேசங்கள் அனைத்திலும் இருந்தார்கள்.

இதற்கான உதாரணமாக 2008ஆம் ஆண்டின் இறுதியில் நடந்தேறிய சம்பவம் ஒன்றை இங்கு நாம் பதிவு செய்யலாம். வன்னி மேற்கை முழுமையாகக் கைப்பற்றி, கிளிநொச்சியை ஆக்கிரமிப்பதற்கான ஆயத்தங்களில் சிங்களப் படைகள் இறங்கியிருந்த காலப்பகுதி அது. வெளிநாட்டில் இருந்து அவசரமாக எறிகணைகள் வந்து சேர்ந்தால் சிங்களப் படைகளின் முன்னேற்றத்தை தடுக்க முடியும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் களமுனைத் தளபதிகள் பலர் கருதினார்கள். இதற்கான திட்டமும் வகுக்கப்பட்டது. இதனை செயற்படுத்தும் பொறுப்பை சிறீராம் என்ற தளபதியிடம் கடற்புலிகளின் தளபதி சூசை வழங்கினார். தளபதி சிறீராம் அவர்களும் தனக்கு வழங்கப்பட்ட பணியை நேர்த்தியாக செய்வதற்கான முழு முயற்சிகளிலும் இறங்கினார். ஆனால் அந்த நேரத்தில் தனது வசமிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் பணத்தை உரிய நேரத்திற்கு வழங்காது ஒரு நபர் இழுத்தடித்தார். விளைவு: தளபதி சிறீராம் தலைமையில் அந்தமான் - நிக்கோபார் தீவுத் தொடர்கள் ஊடாக வன்னிக்கு எறிகணைகளைக் கொண்டு செல்லும் திட்டம் கைவிடப்பட்டது.

இந்த நபர் யார் என்று அக்காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தவில்லை. ஆனால் யுத்தம் முடிவடைந்ததும் கே.பியிற்குப் பக்கபலமாக இவர் இயங்கத் தொடங்கிய பின்னர் தான் இவர் பற்றிய உண்மைகளைப் பலர் தெரிந்து கொண்டார்கள். பிரான்சில் வசிக்கும் இந்த நபரிடம் தான் கடற்புலிகளின் சொத்துக்களில் பெரும் பகுதி உள்ளது.

இறுதி யுத்தத்தில் சிங்களப் படைகளுக்கு எதிராகக் களமாடி தளபதி சிறீராம் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். பின்னர் முள்ளிவாய்க்காலில் அவரது துணைவியார் இசைப்பிரியா சிறைப்பிடிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். ஆனால் இந்த இரண்டு மாவீரர்களுக்கும் துரோகம் இழைக்கும் வகையில் நடந்து கொள்ளும் குறித்த நபர், அடிக்கடி கிளிநொச்சி சென்று கே.பியை சந்திப்பதும், பின்னர் பிரான்ஸ் திரும்பி கே.பியின் இரு கரங்களில் ஒன்றான வேலும்மயிலும் மனோகரன் என்றழைக்கப்படும் மனோ அவர்களுடன் இணைந்து தமிழ்த் தேசிய அமைப்புக்களை உடைக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றார்.

*(மடையுடைப்புத் தொடரும்)*

# மீண்டும் மோடி...

இந்திய தேர்தல் முடிவுகள் பற்றி கார்டியன் பத்திரிக்கை வெளியிட்டுள்ள தலையங்கத்தில் மிகப்பெரிய தேர்தலில் நரேந்திர மோடி என்ற தனி மனிதர் வெற்றி பெற்றுள்ளதாக கூறப்பட்டுள்ளது. மோடியின் 5 ஆண்டு கால ஆட்சியில் இந்தியாவின் பொருளாதாரம் மிக மோசமான நிலையில் இருந்த போதும் அவர் அதிக இடங்களில் வெற்றி பெற்றிருப்பது உலக நாடுகள் அனைத்திற்குமே மோசமான ஒரு செய்தி என்று கார்டியன் பத்திரிக்கை எச்சரித்துள்ளது.

இந்து தேசியவாதம் என்ற பெயரில் நாட்டை மோசமான பாதைக்கு அழைத்து செல்லும் இயக்கத்தின் அரசியல் பிரிவே பாரதிய ஜனதா கட்சி என்றும் கார்டியன் விமர்சித்துள்ளது. இந்து உயர் சாதியினர் ஆதிக்கம், பெரு முதலாளிகளுக்கு ஆதரவு, வெறுப்பு அரசியல், மாநில அரசு அதிகாரங்களை கட்டுப்படுத்துதல் போன்றவை பாரதிய ஜனதாவின் நிலைப்பாடு என்றும் கார்டியன் எச்சரித்துள்ளது.

மோடியின் பெருவாரியான வெற்றியின் மூலம் சுமார் 20 கோடி இஸ்லாமியர்களை இரண்டாம் தர குடிமக்களாக கருதும் இருண்ட அரசியலிடம் இந்தியாவின் ஆன்மா தோற்றுவிட்டதாக அந்த பத்திரிக்கை கூறியுள்ளது. மோடி சிறந்த பிரச்சாரகர் என்பதில் சந்தேகமில்லை என்று கூறியுள்ள கார்டியன், பொய் தகவல்கள் மற்றும் பிரிவினை வாதத்தை வைத்து மோடி பிரச்சாரம் செய்ததாக குற்றம் சாட்டியுள்ளது.

இதே போல் அமெரிக்காவில் இருந்து வெளிவரும் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிக்கையும் மோடியின் வெற்றியை கடுமையாக விமர்சித்துள்ளது.

பொய் பிரச்சாரம் மற்றும் வெறுப்பு அரசியல் மூலம் இந்தியாவை மோடி மயக்கிவிட்டார் என்று நியூயோர்க் டைம்ஸ் குற்றம் சாட்டியுள்ளது. த கார்டியன் மற்றும் நியூயோர்க் டைம்ஸ் ஆகிய பத்திரிக்கைகள் உலகளவில் நம்பகத்தன்மைக்கு பெயர் பெற்றவை ஆகும். இவை இரண்டுமே மோடி வெற்றி குறித்து தெரிவித்துள்ள கருத்துகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. மோடியின் வெற்றி குறித்து மேற்கண்ட இரு பத்திரிகைகளும் தெரிவித்துள்ள கருத்துகளால், சர்வதேச அளவில் மோடியின் வெற்றி குறித்து விவாதிக்கப்பட்டு வருகிறது.

## முழுப் பெரும்பான்மையுடன் தொடர்ந்து 2 தடவை ஆட்சி!

நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜனதா அமோக வெற்றி பெற்றுள்ளது. 2014ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலிலும், இந்த தேர்தலிலும் பா.ஜ.க. தொடர்ந்து 2வது தடவையாக தனிப் பெரும்பான்மை பெற்றுள்ளது. இதுபோல், சுதந்திர இந்தியாவில் இதற்கு முன்பு 2 பிரதமர்கள்தான் இத்தகைய சாதனையை படைத்துள்ளனர். ஜவகர்லால் நேரு, 1952, 1957, 1962 ஆகிய 3 நாடாளுமன்ற தேர்தல்களில் தொடர்ந்து முழுப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று பிரதமர் பதவியில் அமர்ந்தார்.



அதன்பின்னர், அவருடைய மகள் இந்திரா காந்தி, 1967, 1971 ஆகிய ஆண்டுகளில் நடந்த தேர்தல்களில் முழு பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று பிரதமர் பதவியில் அமர்ந்தார். அவர்களுக்கு பின்னர், தொடர்ந்து 2வது தடவையாக முழு பெரும்பான்மை பெற்று ஆட்சியை கைப்பற்றிய 3வது பிரதமர் என்ற பெருமையை மோடி பெற்றுள்ளார்.

முன்னாள் பிரதமர் வாஜ்பாய், 1998, 1999 ஆகிய ஆண்டுகளில் நடந்த தேர்தல்களில் வெற்றி பெற்று பிரதமராக இருந்துள்ளார். இருப்பினும், அப்போது பா.ஜ.கவுக்கு தனிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. வாஜ்பாய், 1998ம் ஆண்டு தேர்தல் பதவிக்



காலத்தை முழுமையாக அனுபவிக்க இயலாமல், 13 மாதங்களிலேயே பதவி இழந்தார். மன்மோகன் சிங்கும் கூட்டணி பலத்தில்தான் 2 தடவை பிரதமராக இருந்தார். நேரு, இந்திரா காந்தி ஆகியோர் கொங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்கள். அந்த கோணத்தில் பார்க்கும்போது, முழு பெரும்பான்மையுடன் தொடர்ந்து 2வது தடவையாக ஆட்சியை பிடித்த கொங்கிரஸ் அல்லாத முதலாவது பிரதமர் என்ற பெருமை, மோடிக்கு கிடைத்துள்ளது.

## மோடியின் 6 மாதப் பயணத்திட்டம் கசிந்தது

பிரதமர் மோடியின் அரசு முறை வெளிநாட்டு பயணத்திட்டம் வெளியாகியுள்ளது. அதன்படி மோடி பதவி ஏற்ற பின் யூன் 13ம் திகதி கிர்கிஸ்தானில் நடைபெறும் ஷிாங்காய் ஒத்துழைப்பு



மாநாட்டில் பங்கேற்க உள்ளார். மேலும் யூன் 28ல் ஜப்பான் சென்று 2 நாள் ஜி-20 மாநாட்டில் பங்கேற்கிறார். தொடர்ந்து ஒகஸ்ட் மாதம் பிரான்ஸ் நாட்டிற்கும், செப்டம்பரில் ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளார். அதனைத்தொடர்ந்து நவம்பரில் தாய்லாந்து, பிரேசில் நாடுகளுக்கும் மோடி பயணம் மேற்கொள்கிறார். இதன் மூலம் பிரதமராக மோடி பதவி ஏற்ற பின் 6 மாதங்கள் தொடர்ந்து வெளிநாடு பயணம் மேற்கொள்ள போகிறார் என்று தெரியவந்துள்ளது. பிரதமர் மோடி, அடிக்கடி வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டதாக, தேர்தல் பிரசாரத்தின் போது கடுமையாக விமர்சனங்கள் எழுப்பப்பட்டன. சமூக வலைதளங்களிலும் பிரதமர் மோடியின் வெளிநாட்டு பயணங்கள் விமர்சனத்திற்குள்ளாகின. இந்த சூழலில், அடுத்த 6 மாதத்திற்கான பிரதமர் மோடியின் வெளிநாட்டு பயண திட்டம் வெளியாகியிருக்கிறது.

# ஆறு கடக்கும் வரைக்கும் அண்ணன் தம்பி




வணக்கம் பிள்ளையள்.

எல்லோரும் சுகமாக இருக்கிறியள் தானே?

நீங்கள் சுகமாக இருப்பியள் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் சுகம் விசாரிக்கிறது தமிழரின்ரை பண்பாடு பாருங்கோ. தான் சுகமாக இருக்கிறானோ இல்லையோ, மற்றவனின் சுகத்திலை கவனம் செலுத்துகிறவன் தானே தமிழன். உதாலை தான் தமிழனுக்கு அழிவு என்று நான் சொன்னால் நீங்கள் என்ன நம்பவே போகிறியள்? இல்லாட்டி நான் சொல்கிறதைக் கேட்டுப் போட்டு எங்கடை கிழட்டுச் சம்பந்தர் ஐயா நாக்கத் தொங்கப் போடுகிற மாதிரி கேள்வி ஏதுமே கேட்கப் போகிறியள்?

அது என்னவென்றால் பிள்ளையள் வருசம் தொடங்கி இன்னும் சில நாட்களில் ஐந்து மாதங்கள் முடியப் போகுது. கண்ணை மூடித் திறக்கிறதுக்குள்ளை இந்த வருசமும் முடிவுக்கு வந்து விடும். அது தான் இப்ப சிங்கள நாட்டிலை இருக்கிற பெரிய பிரச்சினையே. வருசம் முடியிறதுக்கு இடையில் எப்படியாவது அதிபர் தேர்தல் நடக்கும். அதில் ஆர் போட்டி போடுகிறது என்பதுதான் எல்லோருக்குமே உள்ள பிரச்சினை.

எல்லோரும் பல்லக்கு ஏறினால் பல்லக்கைத் தூக்கிறது யார்? என்ற கதையாக இப்ப எல்லோரும் அதிபர் தேர்தலில் குதிக்கிறதுக்கு தயாராகினம். இஞ்சாலை ஒரு பக்கத்தில் இஞ்சி தின்ற குரங்காக நிற்கிற மைத்திரிபால சிறீசேனா, தானும் இரண்டாவது தடவையாக அதிபர் தேர்தலில் போட்டி போடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார்.

அடுத்த பக்கத்திலை இது வரைக்கு அண்ணன் மகிந்தருக்குக் கீழே அதிகாரியாக இருந்தது போதும், இனியாவது நானும் அதிபர் கதிரையில் இருந்து பார்ப்பம் என்று கோத்தபாய ராஜபக்ச துடியாய்த் துடிக்கின்றார்.

**ரணில் மாத்தையாவும் சும்மா இல்லை பாருங்கோ. அவருக்குத் தெரியும் தான் அதிபர் ஆகிறது என்பது ஒருக்காலும் நடக்காது என்று. அதுதான் இந்த முறை புத்தாக ஒருத்தரைக் களமிறக்குவதற்கு ரணில் மாத்தையா திட்டமிட்டிருக்கிறாராம்.**

தன்ரை வாரிசு நாமல் ராஜபக்சவைத் தூக்கிப் பிடிக்காமல் அடுத்த அதிபராக வேண்டும் என்று கோத்தபாய துடிக்கிறதிலை மகிந்த மாத்தையாவுக்கு கொஞ்சம் சினம் தான் பாருங்கோ. ஆனாலும் என்ன செய்வது, தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்று இருந்த நிலை மாறிப் போகேக்குள்ளை மகிந்த மாத்தையாவால் என்ன செய்ய முடியும்?

மகிந்தருக்கும் தான் மூன்றாவது தடவையாக அதிபராக வேண்டும் என்று ஆசைதான். ஆனால் அதுக்கு சட்டத்தில் இடமிருந்தால் தானே! எங்கையாவது சட்டத்தில் ஒட்டையைப் பிடித்து அடுத்த தேர்தலில் குதிக்கலாம் என்று பார்த்தால், உச்ச நீதிமன்றத்தில் தன்ரை ஆட்களை எல்லே நீதியரசர்களாக ரணில் மாத்தையா நியமித்து வருகின்றார்.

ரணில் மாத்தையாவும் சும்மா இல்லை பாருங்கோ.

அவருக்குத் தெரியும் தான் அதிபர் ஆகிறது என்பது ஒருக்காலும் நடக்காது என்று. என்னதான் தான் தலைகிழாக நின்றாலும் தன்னால் அதிபராக வர முடியாது என்று தெரியாமலே போன முறை சிறீசேனாவையும், அதுக்கு, முதல் முறை சரத் பொன்சேகாவையும் தேர்தலில் ரணில் களமிறக்கினவர்? அதுதான் இந்த முறை புதிதாக ஒருத்தரைக் களமிறக்குவதற்கு ரணில் மாத்தையா திட்டமிட்டிருக்கிறாராம்.

அவர் வேறை யாரும் இல்லை பாருங்கோ. அவரின்ரை பெயர் தம்மிக்க பெரேரா. ஆள் சாதாரண ஆள் இல்லை. இலங்கையிலேயே பெரிய கோடீஸ்வரரர். ஆளிட்டை இருக்கிற சொத்துக்களே நானூற்று அறுபது கோடி டொலர்கள் என்றால் பாருங்கோவன். ஆள் மேற்குலக நாடுகளோடை நல்ல உறவைப் பேணி வருபவர். அவரைக் களமிறக்கினால் அமெரிக்காவின் ஆசீர்வாதம் இருக்கும் என்று ரணில் மாத்தையா நம்புகிறார். அதுதான் தம்மிக்கவை ரணில் மாத்தையா அணுகியிருக்கிறார்.

அதுவும் சும்மா இல்லை. அடுத்த முறையும் தான் பிரதமராக இருக்கிறதுக்கு தம்மிக்க பெரேரா உத்தரவாதம் அளித்தால் தான் அவரை அதிபர் தேர்தலில் களமிறக்குவதாக ரணில் மாத்தையா சொன்னவராம்.

கரும்பு தின்னக் கூலியே வேணும்? மனுசனும் ஓம் என்று சொல்லிப் போட்டாராம். உந்தக் கதை கசிந்து சிங்கள ஊடகவியலாளர்களின் காதுகளுக்குப் போய் விழ, அவையளும் மனுசனை மறிச்சுக் கேட்டிருக்கினம், 'என்ன மாத்தையா, நீங்கள் தான் அடுத்த அதிபராம்?'

மனுசனும் ஒரு நமட்டுச் சிரிப்போடு செல்லியிருக்கிறாராம், 'இது பற்றி இப்போதைக்கு என்னால் கருத்து எதுவும் சொல்ல முடியாது.' பிறகென்ன?

உதுக்குள்ளை விசயம் கேள்விப்பட்டதும் சிறீசேனா மாத்தையா ஆடிப் போய்விட்டாராம். இரவல் சேலையை நம்பி இடுப்புக் கந்தையை எறிந்த கதையாக மகிந்தரை நம்பி, ரணிலை தூக்கியெறிந்த சிறீசேனா மாத்தையா, எப்படியாவது மகிந்தரை மடக்குவம் என்று பார்த்தால், கண்கொத்திப் பாம்பாக போட்டி போடுகிறதுக்கு கோத்தபாய வந்து நிற்கிறார். சரி அந்தப் பக்கத்தில் இருந்து தாவி மீண்டும் இந்தப் பக்கம் வந்து ரணிலை மடக்குவம் என்று பார்த்தால் ஆள் தம்மிக்க பெரேராவைக் களமிறக்கப் போகிறார் என்கிறது சிறீசேனாவுக்கு இடியாக விழுந்திருக்குது.

ஆறு கடக்கும் வரைக்கும் அண்ணன் தம்பி. அதுக்குப் பிறகு நீ யாரோ நான் யாரோ என்று நடந்தால் இது தான் நடக்கும் பிள்ளையள்.

எது எப்படியோ, சிங்கள நாட்டில் மீண்டும் தேர்தல் திருவிழா களை கட்டப் போகுது. அதுவும் ஜனாதிபதி தேர்தல் என்றால் லேசுப்பட்ட காரியமே?

அண்டைக்கு என்ரை நண்பன் ஒருவர் கதைக்கேக்குள்ளை சொன்னான், 'எங்கடை சம்பந்தர் ஐயா இந்த முறை என்ன செய்யப் போகிறார் என்பது தான் மில்லியன் டொலர் கேள்வி' என்று. உதைக் கேட்டதும் எனக்கு சிரிப்பு வந்து விட்டது. நான் வாய் விட்டுச் சிரித்து விட்டேன் பிள்ளையள்.

பின்னை என்ன? சம்பந்தர் ஐயா ஆரின்ரை பக்கம் நிற்கப் போகிறார் என்பதை விளங்கிக் கொள்கிறது என்ன கடினமான காரியமே பிள்ளையள்?

தமிழ் மக்களுக்கு சமஸ்டித் தீர்வைப் பெற்றுத் தரப் போகிறேன் என்று சொல்லித் தான் 2010ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் ரணிலோடு கையைக் கோர்த்துக் கொண்டு சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக மனுசன் இறங்கினவர். அந்தத் தேர்தலில் பொன்சேகா மண்கவ்வினாலும், மனுசன் விடவில்லை. சிங்கக் கொடியைப் பிடிச்சுக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டங்களில் மனுசன் தன்ரை விசுவாசத்தை காட்டினவர்.

பிறகு 2015ஆம் ஆண்டு நடந்த அதிபர் தேர்தலில் ரணில் ஊதின மகுடிக்கு ஆடின பாம்பு மாதிரி சிறீசேனாவை மனுசன் ஆதரிச்சவர்.

இப்படி பத்து வருசம் கடந்து போய் விட்டது பிள்ளையள். ஆனாலும் மனுசன் சளைக்காமல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வால்பிடிக்கிறார்.

இந்த முறையும் உதுதான் நடக்கப் போகுது.

சிறீசேனா எங்களை ஏமாற்றிப் போட்டார் என்று ஒப்பாரி வைச்சுப் போட்டு, ரணிலின்ரை பல்லக்கை மனுசன் தூக்கப் போகிறார். அதிபர் தேர்தலில் தம்மிக்க பெரேரா களமிறங்கினாலும் சரி, வேறை யார் களமிறங்கினாலும் சரி, அவையள் ரணில் மாத்தையாவின் ஆட்



ளாக இருக்க வேண்டும் என்பது தான் எங்கடை சம்பந்தர் ஐயாவைப் பொறுத்தவரை முக்கியமான விசயம். மற்றதெல்லாம் அவருக்கு இரண்டாம் பட்சம் பாருங்கோ.

உதுக்குள்ளை தம்மிக்க பெரேரா களமிறங்குகிற செய்தி கேட்டு மகிந்த மாத்தையா கொதிச்சுப் போய்விட்டாராம். தம்மிக்க பெரேரா சும்மா தம்மிக்க பெரேரா மட்டுமில்லை. அவர் ரணிலின்ரையும், மேற்குலக நாடுகளினதும் டம்மி என்று மனுசன் விளாசித் தள்ளினார் என்றால் பாருங்கோவன்.

அதுவும் ரணிலின்ரை டம்மி பெரேரா... மன்னிக்க வேண்டும், தம்மிக்க பெரேரா அதிபராகக் களமிறங்குவது பற்றி உங்கடை கருத்து என்ன என்று சிங்கள ஊடகவியலாளர் ஒருவர் கேட்டதும் நக்கல் நளினத்தோடு 'கரி சோக் கரி சோக்' என்று சிங்களத்தில் மகிந்தர் சொன்னவராம். அந்த அளவுக்கு மகிந்த மாத்தையா கோபமாக இருக்கிறார் என்று கதைக்கினம்.

எது எப்படியோ, ஒன்று மட்டும் தெளிவாகச் சொல்லுவன் பிள்ளையள். ஆர் ஆட்சிக்கு வந்தாலும் தமிழருக்கு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. 'ஆறு கடக்கும் வரைக்கும் அண்ணன் தம்பி. ஆறு கடந்தால் நீ யார் நான் யார்?' என்ற கதையாகத் தான் தமிழரின்ரை நிலை இருக்கும்.

இதை எங்கடை சனம் விளங்கி நடந்தால் சரி.

வரட்டே பிள்ளையள்..?

பிரான்சின் ஏக விநியோகஸ்தர்கள் ...
SKYROSE
YUPPTV
14, RUE CAIL - 75010 PARIS
01 77 17 63 58
M° Gare du Nord / La Chapelle

PTP திருமண பொருத்துனர் - பிரான்சு
யாழ்ப்பாணம், பிரான்சு போன்ற நாடுகளிலிருந்து மணமக்களை தெரிவு செய்ய, தொடர்புகொள்ள வேண்டிய சேவை
தொடர்புகளுக்கு: 0695498519
K. பரம் 0753844284
PTP திருமண சேவை - பாரிஸ்

Aubervilliers Quatre chemins ல் ஒரு தமிழ்க்கடை
Anna Marché
அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...
மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு
விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
V.I.P Sarl 4 rue Ernest Prévost,
93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65

பாரீஸ் அறிவாலயம்
Paris Arivalayam
7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 3
இலங்கை இந்திய புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள் மேலும் நவீன தேடலுக்கான அனைத்து வெளியீடுகள் பாடசாலை அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள், சுயமுன்னேற்ற நூல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் வாங்கிட இன்றே செல்ல வேண்டிய இடம்.




## புல்லரிக்குது, புல்லரிக்குது என்கின்றார்கள். அப்படி எதனைக் கேட்டால் புல்லரிக்கும்? புல்லரிக்கிறமாதிரி ஒன்று சொல்லுங்களேன் பார்க்கலாம்...

**கேள்வி:–** புல்லரிக்குது, புல்லரிக்குது என்கின்றார்கள். அப்படி எதனைக் கேட்டால் புல்லரிக்கும்? புல்லரிக்கிறமாதிரி ஒன்று சொல்லுங்களேன் பார்க்கலாம்...

**பதில்:–** புல்லரிக்கும் கதைகள் உலகம் முழுவதும் எத்தனையோ இருக்கின்றன. அது கேட்பவரின் மனநிலையையும், அந்தக் கதையையும் பொறுத்தது. புல்லரிக்கும் கதைகளுக்காக ஏன் உலகத்தைச் சுற்றுவான்? ஈழவிடுதலைப் போராட்டத்தில் இல்லாத புல்லரிக்கும் கதைகளா..? இந்த வரலாற்றுச் சம்பவத்தைப் படியுங்கள். உங்களுக்கும் புல்லரிக்கின்றதா இல்லையா என்று பார்த்துவிடுவோம்.

'அந்தச் சிங்களச் சிப்பாய் விடுதலைப் புலிகளிடம் உயிருடன் பிடிபட்டபோது தன் கதை இத்துடன் முடிந்துவிடப்போகின்றது என்றே நினைத்திருந்தான். பயங்கரவாதிகளுக்கு எதிரான போர் என்று வெறியூட்டப்பட்டு களமுனைக்கு அனுப்பப்பட்ட அந்தச் சிப்பாய்க்கு, சில மாதங்களின் முன்தான் திருமணமாகி, அவன் மனைவியும் கர்ப்பமடைந்திருந்தாள். போரில் வெற்றி பெற்று குழந்தைப் பேறின்போது தன் மனைவியுடன் விடுமுறையில் தங்கி நிற்கலாம் என்று எதிர்பார்ப்போடு களமுனைக்கு வந்தவன், இன்று தன் மனைவியையும் தனக்குப் பிறக்கப்போகும் குழந்தையையும் கண்ணால் காணமுடியாது, உயிருடன் திரும்ப முடியாத உலகிற்குள் சென்றுவிட்டதை எண்ணி நிலைகுலைந்துபோனான். மரணம் மிகவும் பக்கத்தில் வந்துவிட்டது அவனுக்கு உறுதியாகத் தெரிந்தது.

ஆனால் அவன் எதிர்பார்த்ததுபோன்று எதுவும் நடக்கவில்லை. நாட்கள் நகர்ந்தன. அவன் நம்பவைக்கப்பட்டதுபோல் புலிகள் ஒன்றும் அத்தனை பயங்கரவாதிகளாக அவனுக்கு இப்போது தெரியவில்லை. மனித நேயத்துடன் அவர்கள் நடந்துகொண்ட முறைகள் அவனை ஆச்சரியப்படுத்தின.


போர்கள் ஓய்ந்த ஒரு சில வருடங்களின் பின் தடுத்து வைக்கப்பட்டுள்ள படையினரைப் பார்ப்பதற்கு குடும்பத்தினருக்கு விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியிருந்தார்கள். தென்னிலங்கையில் இருந்து வந்திருந்த தன் மனைவியையும், சிறுமியாக வளர்ந்திருந்த தன் மகளையும் பார்த்து அவன் பூரித்துப்போனான். முதற் தடவையாக தன் மகளை கொஞ்சி மகிழ்ந்தான். அத்தனையும் சில மணி நேரங்கள் தான். அவர்களின் சந்திப்பிற்கான நேரம் முடிந்து, மீண்டும் அவர்கள் தென்னிலங்கை திரும்பிவிட்டனர்.

தென்னிலங்கை திரும்பிய அந்தச் சிப்பாயின் மகள் தமிழீழத் தேசியத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாள். 'பிறந்ததில் இருந்து தன் தந்தையுடன் வாழும் பாக்கியம் கிடைக்காமலேயே போய்விட்டது. அந்த வாய்ப்பைத் தனக்குத் தருவீர்களா?' என்று கேட்டு அந்தக் கடிதத்தை எழுதியிருந்தாள்.

விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்பட்ட அந்தக் கடிதம் தலைவரின் கைகளுக்குப் போய்ச் சேர்ந்ததா..? இல்லையா..? என்பது கூட அந்தச் சிறுமிக்குத் தெரியாது. நாட்கள் மட்டும் நகர்ந்தன. விடுதலைப் புலிகளிடம் இருந்து அந்தக் கடிதத்திற்கான பதில் ஒன்றும் வரவில்லை. ஏமாந்து போய் இருந்தாள் சிறுமி. தன் தந்தையை அவர்கள் விடுவிக்கப்போவதில்லை என்பதை அவள் புரிந்துகொண்டிருந்தாள். வன்னி சென்று மீண்டும் தன் தந்தையைக் காணும் வாய்ப்பு வந்தபோது, தன் தாயுடன் தந்தையைக் காண ஆவலோடு



வன்னிக்கு வந்திருந்தாள். வழமைபோல் தந்தையுடன் கதைத்து உறவாடி மீண்டும் தென்னிலங்கை புறப்படத் தயாரானார்கள். அப்போது அங்கே வந்த விடுதலைப் புலிகளின் தளபதி ஒருவர், அந்தச் சிப்பாயின் கையைப் பிடித்து சிறுமியின் கையில் கொடுத்து '**உன் அப்பாவை உன்னுடன் கூட்டிக்கொண்டு போம்மா...? இது தலைவர் பிரபாகரன் உனக்குத் தரும் அன்புப் பரிசு**'



என்று சொன்னபோது அந்தச் சிறுமியால் மட்டுமல்ல அந்தச் சிப்பாயாலும் அவன் மனைவியாலும் அந்த நிமிடத்தை நம்பமுடியாமல் இருந்தது. அவர்கள் புல்லரித்துப் போய் நின்றார்கள்.'

இந்த வரலாற்று நிகழ்வை, இந்தக் கதைக்குள் நுழைந்து நீங்கள் வாசித்திருந்தால், அந்தச் சிப்பாயின் கையைப் பிடித்து சிறுமியின் கையில் கொடுத்து 'உன் அப்பாவை உன்னுடன் கூட்டிக்கொண்டு போம்மா...' என்பதைப் படிக்கின்றபோது நீங்களும் புல்லரித்துப் போயிருப்பீர்கள்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் இப்படிப் புல்லரிக்கின்ற கதைகள் மட்டுமல்ல, கேட்டால் இதயம் வெடித்துவிடும் கதைகளும் ஏராளம் உண்டு.

**கேள்வி:–** பாவ, புண்ணியங்கள் பின் தொடர்ந்து வருமா? அவை அடுத்த பிறவியிலும் தொடரும் என்பது எவ்வளவு தூரம் உண்மை அரிச்சந்திரனே..?

க.வேலழகன் – மன்னார் பிரான்ஸ்

**பதில்:–** அடுத்த பிறவிற்குப் போய் வாழ்ந்துவிட்டு, மீண்டும் இந்தப் பிறவிக்கு திரும்பிவந்து பாவ, புண்ணியம் தொடரும் என்று யாரும் சொன்னதாக ஆதாரம் இல்லை. எல்லாம் நம்பிக்கையில், மனிதர்களை நல்வழிப்படுத்த வந்த வழிகாட்டிகள்தான் இந்தப் பாவ புண்ணியக் கதைகள். ஆனால், கிடைத்த இந்தப் பிறப்பில் மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதற்கு அண்மையில் படித்த இந்தக் கதையும் நல்லதொரு வழிகாட்டிதான்.

தொடர்ச்சி 18ம் பக்கம்

**கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

இலத்திரனியல் முகவரி : eelamurazu@gmail.com
தபால் முகவரி : Media Centre, BP 40, 93141 Bondy pdc
குறுந்தகவலாக (கைபேசி SMS) : 00 33 7 81 80 81 16

## தமிழரின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதைப்.....

அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாகக் கை உயர்த்திவிட்டு வெளியே வந்து, தாங்கள் கை உயர்த்தாவிட்டாலும் அது நிறைவேறியிருக்கும் என சம்பந்தன், சுமந்திரன், சித்தார்த்தன் உட்பட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கூறுகின்றனர். ஆக, வடக்கு - கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பூரண சம்மதத்துடன்தான் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்களின் வழிமொழிதல்களுடன்தான் தமிழ் மக்கள் வதைக்கப்படுகின்றனர்.

கிழக்கே, காத்தான்குடி, சாய்ந்தமருது போன்ற இடங்களில் சோதனைகளைத் தடுத்து நிறுத்திய முஸ்லிம் தலைவர்களைப் போன்றும், தெற்கே சோதனைகளை நிறுத்திய சிங்களத் தலைவர்களைப் போன்றும் தமிழ்த் தலைவர்களால், வடக்கே இந்தச் சோதனைகளைத் தடுத்து நிறுத்தி மக்களைப் பாதுகாக்க முடியாமல் போனது ஏன்? அப்படிச் செயற்பட்டால் அவர்களுக்கு அரச சலுகைகள் இல்லாமல் போகும். சிங்களத் தலைவர்களின் அன்பு பாராட்டல், நட்புரிமை இல்லாமல் போகும். இதைத் தவிர வேறு காரணங்கள் இல்லை.

வடக்கே, மன்னார், முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் பல இடங்களில் காடுகளை வெட்டி முஸ்லிம் குடியேற்றங்களைச் செய்திருகின்றார் றிசார்ட் பதியுதீன். அவரின் ஆதரவாளர்கள் முல்லைத்தீவை முஸ்லிம் தீவாக மாற்றுவோம் என சபதம் எடுத்திருக்கின்றனர். கிளிநொச்சியில் முஸ்லிம்களின் பெயரல் பல ஏக்கர் காணிகள் வாங்கப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில், பொம்மைவெளி மற்றும் நாவாந்துறை பிரதேசங்களில் றிசார்ட் பதியுதீனின் நிதியில் பல ஏக்கர் காணிகள் விலை கொடுத்து வாங்கப்பட்டிருக்கின்றது. அங்கு குடியேற்றப்படவுள்ள முஸ்லிம்கள் தொடர்பான விபரங்கள் பதிவு செய்யப்படுகின்றன. ஏற்கனவே, யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் என்ற போர்வையில் புத்தளத்தில் வசிக்கும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் மேற்படி காணிகளில் குடியேற்றப்படவுள்ளனர்.

**றிசார்ட் பதியுதீனின் அமைச்சு ஊடாக தனிப்பட்ட ரீதியிலான பல நன்மைகளைப் பெற்றுவருகின்றார் சிறிதரன். இதேபோன்று, கூட்டமைப்பில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் மேற்படி முஸ்லிம் அமைச்சர் ஊடாக தனிப்பட்ட நலன்களை, சலுகைகளை அனுபவிக்கின்றனர். இப்படியானவர்கள் தமிழ் மக்களில் அக்கறை எடுப்பார்கள் என கிஞ்சித்தும் எதிர்பார்க்க முடியாது.**

வடக்கை சுவீகரிப்பதற்கு றிசார்ட் பதியுதீன் பெரும் பிரயத்தனம் செய்துவரும் நிலையில், அதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், அவருக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஆதரிக்க மாட்டார்கள் என அறிக்கை விட்டிருக்கின்றனர். இரா. சம்பந்தன் இறுக்கமாகக் கூறியிருக்கின்றார். அதைவிட, வன்னியை பிரதிநிதித்துவப்படுத்தும் கூட்டமைப்பு எம்.பி சி.சிறிதரன் 'றிசார்ட் பதியுதீனுக்கு எதிராக நான் செயற்படமாட்டேன்' என பகிரங்க அறிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றார்.

றிசார்ட் பதியுதீனின் அமைச்சு ஊடாக தனிப்பட்ட ரீதியிலான பல நன்மைகளைப் பெற்றுவருகின்றார் சிறிதரன். இதேபோன்று, கூட்டமைப்பில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் மேற்படி முஸ்லிம் அமைச்சர் ஊடாக தனிப்பட்ட நலன்களை, சலுகைகளை அனுபவிக்கின்றனர். இப்படியானவர்கள் தமிழ் மக்களில் அக்கறை எடுப்பார்கள் என கிஞ்சித்தும் எதிர்பார்க்க முடியாது.

சிறீலங்கா அரசு மிகச் சிறந்த இராஜதந்திரத்துடன் நகர்கின்றது. ரணில் விக்கிரமசிங்க தனது நரித் தந்திரத்தை மிக நேர்த்தியாகச் செய்து வருகின்றார். கம்பரெலிய என்ற திட்டத்தின் மூலம் வடக்கின் அபிவிருத்தி நிதி என்ற போர்வையில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பல பில்லியன் கணக்கான ரூபாய்களை ரணில் வழங்கியிருக்கின்றார். இதன் மூலம் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் தமிழ்த் தேசியம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கின்றது. தமிழர் மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம், சுயநிர்ணய உரிமை என்பன பணத்திற்கு விலை போயிருக்கின்றது. 'நக்கினார் நாவிழந்தார்' என்பதற்கிணங்க கூட்டமைப்பு சலுகைகளுக்கு அடிபணிந்திருக்கின்றது.

புலம்பெயர் தமிழர்களே! தமிழ்த் தேசியப் பேராளர்களே! முன்னாள் தளபதிகளே! இந்நாள் செயற்பாட்டாளர்களே! தமிழ்த் தேசியம் அழிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. இது தமிழ்த் தேசியத்திற்கான எச்சரிக்கை மணி. இது தொடர்பாக எவருமே சிந்திக்க மறுக்கின்றீர்கள். தமிழ் மக்களும் தமிழ்த் தேசிய கொள்கையாளர்களும் ஒன்றுபட்ட சக்தியாக எழுச்சியடைந்தால் மட்டுமே 'தமிழர் தாயகம்' என்ற சொற்பதத்தைக் காப்பாற்ற முடியும். இல்லையேல் தமிழரின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதைப் போன்று விரைவில் தமிழ்த் தேசியம் மௌனிக்கப்பட்டுவிடும்.

# இணைய உலகிலிருந்து வெளியேற ரஷ்யா முடிவு!

## உளவு விவகாரத்தால் அமெரிக்காவில் தேசிய நெருக்கடி நிலை

ரஷ்யா இந்த உலக இணையத்தில் இருந்து விலகி, தங்களுக்கு என்று சொந்தமான இணையத்தை உருவாக்கிக்கொள்ள முடிவெடுத்துள்ளது. இதன் மூலம் இணைய உலகில் இருந்து மொத்தமாக வெளியேற அந்நாடு முடிவெடுத்துள்ளது. அமெரிக்காவிற்கு தொடர்புகளை பாதுகாக்கும் வகையில் தேசிய நெருக்கடி நிலையை பிறப்பித்து அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். Huawei நிறுவனம் தயாரிக்கும் மென் பொருள்களை பயன்படுத்தி சீனா தனக்கான தகவல்களை உளவு பார்த்து வருவதாக பல நாடுகள்



தற்போதும் ரஷ்யாதான் அச்சுறுத்தக் கூடிய நாடாக திகழ்ந்து வருகிறது. ஆனால் முன்பு போல ரஷ்யா ஆயுதங்கள் மூலம் அமெரிக்காவை அச்சுறுத்தவில்லை. இந்த முறை இணையம் மூலம் ரஷ்யா அமெரிக்காவை பயமுறுத்தி வருகிறது. அமெரிக்காவில் நடக்கும் பெரும்பாலான சைபர் மற்றும் ஹக்கிங் தாக்குதல்கள் எல்லாம் ரஷ்யா மூலம் நடப்பதாக ஒரு குற்றச்சாட்டு ஏற்கனவே இருக்கிறது. அமெரிக்க அதிபர் தேர்தலிலேயே ரஷ்யா இணையம் மூலம் நிறைய கட்டுரைகளை முறைகேடாக வெளியிட்டு, தேர்தல் முடிவை மாற்றியது என்று குற்றச்சாட்டு உள்ளது.

ஆனால் ரஷ்யா இதில் கொஞ்சம் உசார். ரஷ்யாவில் இணைய பயன்பாட்டிற்கு நிறைய கட்டுப்பாடு இருக்கிறது. சரியாக சொல்ல வேண்டும் என்றால், ரஷ்யாவில் சீனாவை போலவே நிறைய இணைய கட்டுப்பாடுகள், பாதுகாப்பு விதிகள் விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில்தான் ரஷ்யா தங்களுக்கு என்று சொந்தமாக இணையத்தை உருவாக்கிக்கொள்ள முடிவெடுத்துள்ளது. ஆம் தற்போது இருக்கும் இணைய உலகில் இருந்து ரஷ்யா தங்களை மொத்தமாக துண்டித்துக் கொள்ள முடிவெடுத்துள்ளது. அதன்படி புதிதாக தங்களுக்கு என்று ஒரு இணைய உலகை உருவாக்க ரஷ்யா முடிவெடுத்து உள்ளது. அதற்கும் தற்போது பயன்பாட்டில் இருக்கும் இணையத்திற்கும் எந்த தொடர்பும் இருக்காது என்று கூறுகிறார்கள். மாறாக அந்த இணையத்தில் கிடைக்கும் அனைத்து தகவல்களும் அப்படியே இதில் கிடைக்கும். இந்த இணையத்தை உலகில் வேறு எங்கும் பயன்படுத்த முடியாது. ரஷ்யாவில் மட்டுமே இதை பயன்படுத்த முடியும். இதன் மூலம் உலகில் இது மிகவும் பாதுகாப்பான இணைய உலகாக இருக்கும் என்று ரஷ்யா நம்புகிறது. இதற்காக தன்னாட்டின் ஆராய்ச்சியாளர்களை ரஷ்யா அதிபர் புட்டின் முடுக்கிவிட்டு இருக்கிறார். விரைவில் ரஷ்யா இதுகுறித்த அறிவிப்பை வெளியிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி நடக்கும் பட்சத்தில், இணைய உலகில்ரஷ்யாதனித்துவிடப்படும்என்பதுகுறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே, பாதுகாப்பு காரணங்களுக்காக அரச வேலைகளை கணினிகளில் தட்டச்சு செய்வதைத் தவிர்த்து முன்னைய முறையான தட்டச்சு இயந்திரங்களை பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

ரஷ்ய நிலைமை இவ்வாறிருக்க, வெளிநாட்டு எதிரிகளிடம் இருந்து அமெரிக்க கணினி தொலைசந்தேகம் எழுப்பி வந்தன. இந்நிலையில் அமெரிக்காவின் தகவல் தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட அறிவுச் சார் விவகாரங்கள் திருடப்படுவதும் உளவு பார்க்கப்படுவதும் தடுக்கும் வகையில் தகவல் தொழில்நுட்பத் துறையில் தேசிய நெருக்கடி நிலையை பிறப்பித்து டொனால்ட் ட்ரம்ப் அதிரடியாக உத்தரவிட்டுள்ளார்.

இந்த நெருக்கடி நிலையால் வெளிநாட்டு தொலைத் தொடர்பு நிறுவனங்கள் அமெரிக்க நிறுவனங்களை பயன்படுத்தி கொள்வது தடுக்கப்படும். எந்த ஒரு வெளிநாட்டு நிறுவனத்தின் பெயரையும் அவர் குறிப்பிடவில்லை என்ற போதிலும் சீனாவில் Huawei தொலைதொடர்பு நிறுவனத்தை முடக்கவே இந்த உத்தரவை அவர் பிறப்பித்து இருப்பதாக கூறப்படுகிறது. இந்நிலையில் நெருக்கடி நிலை பிறப்பிக்கப்பட்ட உடன் Huawei நிறுவனம் மற்றும் அதோடு தொடர்புடைய




70 நிறுவனங்களை அதற்கான பட்டியலில் அமெரிக்க வர்த்தக துறை இணைத்துள்ளது. இதன் மூலம் அமெரிக்கா அரசின் சிறப்பு அனுமதியை பெறாமல் Huawei நிறுவனம் அமெரிக்கா தொழில்நுட்பங்கள், கருவிகள், பாகங்களை வாங்குவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, Huawei நிறுவனத்துக்கு தடை விதிக்கும் அமெரிக்காவின் நடவடிக்கைக்கு பதில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சீனா எச்சரித்துள்ளது. இதுகுறித்து சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் லூ காங் கூறியதாவது: ஆபத்தான நிறுவனங்களுக்கான பட்டியலில் Huawei நிறுவனத்தை சேர்க்கும் அமெரிக்காவின் முடிவு குறித்து தகவல் அறிந்தோம். எங்களது நிறுவனங்கள் வெளிநாடுகளில் செயல்படும் போது, அந்தந்த நாட்டு சட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கும்படி அறிவுறுத்தி வருகிறோம். எங்களது நிறுவனங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால், அந்த நிறுவனங்களின் நலனைப் பேணும் வகையிலான பதிலடி நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்றார் அவர்.

## ஞாபக மறதியைக் குறைக்க ஜப்பான் திட்டம்

ஞாபக மறதியால் (alzheimer) பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையை குறைக்க ஜப்பான் அரசு திட்டமிட்டுள்ளது. ஜப்பான் நாட்டில் ஞாபகமறதி நோய் 70 வயது கடந்த முதியவர்களுக்கு அதிகம் ஏற்படுகிறது. வருகிற 2030ம் ஆண்டிற்குள் மொத்த மக்கள் தொகையில் 6 முதல் 7 சதவீதம் அல்லது 70 முதல் 80 இலட்சம் மக்கள் இந்த நோயால் பாதிக்கப்படுவர் என அந்நாட்டு அரசு மதிப்பிட்டுள்ளது.

ஞாபக மறதி நோயால் பாதிக்கப்படும் மக்களுக்கு அறிந்து கொள்ளும் ஆற்றல் மற்றும் நினைவாற்றல் குறைந்து விடும். அவர்களது அன்றாட பணிகளை செய்வதற்கே சங்கடம் நிறைந்த சூழல் ஏற்பட்டு விடும். சிலர் தங்களது சொந்தங்களை மறந்து விடுவர். எங்கு இருக்கிறோம், என்ன செய்கிறோம் என்பதே அறியாத நிலை ஏற்பட்டு விடும். இதனால் இந்த வியாதியால் பாதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையை



குறைக்க ஜப்பான் அரசு திட்டமிட்டுள்ளது.

இதன்படி தடுப்பு நடவடிக்கைகளாக, குழு உடற்பயிற்சி பாடங்கள் மற்றும் கற்றல் வகுப்புகள் ஆகியவை உள்ளூர் சமூக மையங்களில் நடத்தப்படும். இவை முதியவர்கள் இந்த வியாதியை எதிர்கொள்வதற்கு உதவும் வகையில் இருக்கும். இந்த வியாதியை தடுப்பதற்காக வர்த்தக அமைப்புகள் மற்றும் தயாரிப்புகளில் முதலீடு செய்யவும் முயற்சி மேற்கொள்வதுடன், இதனை பற்றி அதிக அளவில் மருத்துவ ஆய்வு மேற்கொள்வதற்கான வசதிகளையும் அரசு செய்து கொடுக்கும். இதன் உதவியால் அடுத்த 6 வருட காலத்தில் 2025ம் ஆண்டிற்குள் அந்நாட்டில் டிமென்சியா பாதிப்பிற்கு ஆளான 70 வயது கடந்த நோயாளிகளின் விகிதத்தினை பெருமளவில் குறைக்க ஜப்பான் அரசு திட்டமிட்டுள்ளது.

## ஏவுகணை தாங்கிப் போர்க் கப்பல்கள் சீன கடற்படையில் மேலும் 2 இணைப்பு

தனது கடற்படையின் பலத்தை மிக வேகமாக அதிகரித்து வரும் சீனா தற்போது, சீன கடற்படையில் மேலும் இரண்டு புதிய ஏவுகணை தாங்கி போர் கப்பல்களை கடந்த வாரம் இணைத்துள்ளது. இதுகுறித்து சீன அரசுக்கு சொந்தமான குளோபல் டைம்ஸ் வெளியிட்டுள்ள செய்தியில், 052டி ரகத்தைச் சேர்ந்த 2 ஏவுகணை தாங்கி போர் கப்பல்கள், சீன கடற்படையில் சேர்க்கப்



பட்டன. இதன்மூலம், சீன கடற்படையில் இருக்கும் அத்தகைய கப்பல்களின் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய ரக போர் கப்பல்கள், கடலில் மிக விரைவாகவும், மிக அதிகமான தூரத்துக்கும் பயணிக்கக் கூடியவை. கடலில் விமானந் தாங்கி போர் கப்பல்களுக்கு அரணாகவும் இக்கப்பல்கள் செல்லும். சீனா தனது கடற்படையை நவீனமாக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

சீன கடற்படைக்காக விமானம் தாங்கி கப்பல் உள்ளிட்டவை அந்நாட்டால் சொந்தமாகக் கட்டமைக்கப்பட்டு வருகின்றன. சீனக் கடற்படையில் ஏற்கனவே ஒரு விமானம் தாங்கி போர் கப்பல் பயன்பாட்டில் உள்ளது. இன்னொரு விமானம் தாங்கி போர் கப்பல், சீன கடற்படையால் பரிசோதிக்கப்பட்டு வருகிறது. மேலும், 3வது விமானம் தாங்கி போர் கப்பலையும் சீனா கட்டமைத்து வருகிறது. இதேபோல், இன்னும் சில ஆண்டுகளில் 5 முதல் 6 விமானம் தாங்கி போர் கப்பல்களை கட்டமைப்பதற்கு சீனா திட்டமிட்டுள்ளது.

சீனாவிடம் 052சி ஏவுகணை தாங்கி போர் கப்பல் பயன்பாட்டில் உள்ளன. அந்த வரிசையில், 052டி ரக கப்பல் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த கப்பலில் ராடார் சாதனங்கள், புதிய ஆயுதங்கள், மற்றும் துல்லியமிக்க தாக்குதல் சாதனங்கள் உள்ளிட்டவை பொருத்தப்பட்டுள்ளன.

அமெரிக்காவிடம் 60 ஏவுகணை தாங்கி போர் கப்பல்கள் உள்ளன. ரஷ்யாவிடம் 15 ஏவுகணை தாங்கி போர் கப்பல்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

### மீண்டும் கொங்கிரஸ் ஆட்சி

தென் ஆபிரிக்காவில் நடந்த தேர்தலில் ஆளும் ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ் வாக்கு விகிதம் குறைந்தபோதிலும் வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்துள்ளது. எனினும், அந்த நாட்டின் இடது மற்றும் வலதுசாரிக் கட்சிகளின் பலம் நாடாளுமன்றத்தில் அதிகரித்துள்ளது. கடந்த 1994ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் நெல்சன் மண்டேலா ஆட்சிக்கு வந்ததில் இருந்து, அந்த இரு கட்சிகளின் வாக்கு வங்கி அதிகரித்துள்ளது இதுவே முதல் முறையாகும்.

### எடைக்கற்கள் முடிவுக்கு வந்தன!

பொருட்களின் நிறையை அறிய பயன்படுத்தும் எடைக்கற்கள் முறை இனி புழக்கத்தில் இருந்து நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பொருட்களின் நிறையை சரிபார்க்கும் எடைக் கற்கள் முறையை முடிவுக்கு கொண்டு வர சர்வதேச அளவுகள் கொள்கை அமைப்பு ஏற்கனவே முடிவு செய்து விட்டது. இதனால் 50 கிராம், 100 கிராம், 200 கிராம், 500 கிராம் மற்றும் 1 கிலோ, 2 கிலோ, 5 கிலோ உள்ளிட்ட அனைத்து எடைக் கற்களும் இனி பயன்பாட்டில் இருக்காது. இதற்கு பதிலாக நவீன முறையின் படி மிக துல்லியமாக அளவிடும் மின்காந்த அளவீட்டுக் கருவிகளை உலகம் முழுவதும் அறிமுகப்படுத்த பிரான்ஸ் தலைநகர் பரிசில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான உடன்படிக்கையில் பல்வேறு நாடுகளும் கையெழுத்திட்டு வருகின்றன. இந்தப் புதிய அளவீட்டு நடைமுறை கையொப்பமிட்ட நாடுகளில் அடுத்த மாதத் தொடக்கத்தில் நடைமுறைக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### நிலவுக்கு மனிதன்!

அமெரிக்காவின் சார்பில் 2024ம் ஆண்டுக்குள் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்துக்காக நாசா நிறுவனத்துக்கு 1.6 பில்லியன் டொலர் நிதி ஒதுக்க ஜனாதிபதி டிரம்ப் ஒப்புதல் வழங்கினார்.

### அரபிக்கடலில் எண்ணெய்

பாகிஸ்தானில் கராச்சியில் உள்ள அரபிக்கடலில் எண்ணெய் வளம் இருக்கிறதா என்பதை கண்டறிய ஆழ்கடலில் தோண்டும் பணி நடந்தது. இதில் எண்ணெய் வளம் இல்லை என கண்டறியப்பட்டு, அந்தப் பணி நிறுத்தப்பட்டு விட்டது. இதை பாக்.பிரதமரின் அந்தரங்க உதவியாளர் நதீம் பாபர் உறுதி செய்தார்.

### உக்ரைன் அதிபருக்கு அபராதம்

உக்ரைன் நாட்டு அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற வோலோடிமிர் ஜெலன்ஸ்கி தன் வாக்குச்சீட்டை ஊடகவியலாளர்களுக்கு காட்டியதற்காக அபராதம் விதிக்கப்பட்டது. இவர் இம்மாத இறுதியில் அதிபராக பதவி ஏற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் அவர் வாக்களித்தபோது அவரை படமெடுத்த ஊடகவியலாளர்களுக்கு அவர் வாக்குச்சீட்டு தெரியுமாறு, காட்சி கொடுத்தார். இது சர்ச்சையை ஏற்படுத்தியது. இதையடுத்து உள்ளூர் நீதிமன்றத்தில் தன் செயலுக்கு அவர் மன்னிப்பு கேட்டதை அடுத்து, அவருக்கு 20 ஈரோ வரையில் அபராதம் விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

# தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசு வரும்வரை....

அக்காலப் பகுதியில் சிறீலங்கா வான்படை உலங்குவானூர்திகளால் மேற்கொள்ளப்பட்ட ஒரு மீட்பு நடவடிக்கைமூலம் லலித் ஜெயசிங்காவின் உடலுடன் அவரது அணியினர் தப்பிச்சென்றனர்.

இப்படியான சம்பவம் ஒன்றில் ஆழ ஊடுருவும் படையினரால் கைவிடப்பட்ட உடமைப்பொதியொன்று பரிசோதிக்கப்பட்டபோது, அதனுள் பல படைத்துறை உபயோகப் பொருட்களுடன் வீரியம் மிக்க மயக்க ஊசிகளும் கைவிலங்குகளும் காணப்பட்டன.

சம்பவதினம் முன்னேறிவந்த அந்த அணி , விடுதலைப்புலிகளின் அதியுயர் இலக்கு ஒன்றைத் தாக்கியழிக்கும் நோக்குடன் வந்துள்ளது. முடிந்தால் அந்த இலக்கை உயிருடன் கொண்டுசெல்லும் உப திட்டமும் அவர்களிடம் இருந்ததை உணரக் கூடியதாக இருந்தது.

கடந்த 2019 பெப்ரவரி மாதம் ஒட்டுசுட்டான் பகுதிக்கு, தென்னிலங்கையில் இருந்து வந்த லெப்.கேணல் லலித் ஜெயசிங்காவின் குடும்பத்தினர் அவர் உயிரிழந்ததாகக் குறிப்பிடப்படும் இடத்தில் மரம் நாட்டி வணக்கம் செலுத்தியுள்ளனர்.



கேணல் சங்கர் உட்பட முக்கிய தளபதிகளின் வீர மரணத்திற்கு இவரே காரணம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

**கேள்வி: இறுதியுத்தத்தின் போது சரணடைந்த போராளிகள், பொதுமக்கள் பலர் இன்றுவரை காணாமல் ஆக்கப்பட்டவர்களாகவே இருந்துவருகின்றனர். அது தொடர்பாக உங்கள் சாட்சியத்தின் பதிவாகக் குறிப்பிடுங்கள்?**

**பதில்:** இறுதி யுத்தம் ஒரு நெருக்கடியான நிலையில், உச்சக்கட்டத்தில் நடந்துகொண்டிருந்தபோது, இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் ஒரு கைகலப்புச் சண்டைபோலவே நிகழ்த்திக்கொண்டிருந்துள்ளனர். அந்த நேரத்தில் பல போராளிகள் இராணுவத்தினரால் கைதுசெய்யப்படுகின்றனர். இன்று அவர்களின் கதை இல்லை. அதேபோன்று இந்தப் போர் முடிவடையும் தருணம் அதாவது 2009 மேமாதம் 17 ஆம் திகதி, முள்ளிவாய்க்காலில் இராணுவம் சனத்தோடு சனமாக வந்து கலந்துவிட்டது. அதாவது முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதான வீதி கடற்கரைப் பக்கம் முழுவதும் இராணுவம் வந்து நிற்கின்றது. நந்திக்கடல் பக்கம் விடுதலைப் புலிகள் சண்டைசெய்துகொண்டு நிற்கின்றார்கள். அப்போது அங்கு நின்ற மக்கள் எல்லோரையும் இராணுவம் முல்லைத்தீவை நோக்கிக் விரட்டுகின்றார்கள். அதன் பின்னர் மக்கள் பெரும் அணியாக முல்லைத்தீவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். நானும் மக்களோடு மக்களாக சாதாரண சிவில் உடையோடு சென்றுகொண்டிருக்கின்றேன். வீதிக்கு அருகில் சுமார் 50 இற்கு மேற்பட்ட பெண் போராளிகளை நீளக் காற்சட்டை, சேட்டுடன் தலைமுடி வெட்டிய நிலையில் இராணுவம் இருத்திவைத்துள்ளது. இன்றுவரை அவர்களுக்கு என்ன நடந்ததோ தெரியவில்லை. அதன் பின்னர் வட்டுவாகல் பாலத்துக்குள்ளால் நாங்கள் நடந்து வருகின்றோம். பாலம் முடியும் இடத்தில் பல போராளிகளை இராணுவம் பிடித்துவைத்துள்ளது. அதையும் கடந்து சென்றபோது ஒரு பெரிய மாட்டுப்பட்டிபோல ஒரு பெரிய இடத்திலே மக்கள் எல்லோரையும் அடைத்துவைத்தனர். பின்னர் ஒரே ஒரு பாதையைத் திறந்து ஒற்றை வரிசையில் ஆட்களை வெளியில் எடுத்து முழுப் பரிசோதனை செய்து பேருந்தில் ஏற்றிக் கொண்டுசெல்கின்றார்கள். நான் அப்போது அவதானித்தேன். இராணுவம் நிற்கின்றது. இராணுவப் புலனாய்வுக்காரர்கள் நிற்கின்றார்கள். அத்தோடு காட்டிக்கொடுக்கும் தமிழாட்களும் நிற்கின்றார்கள். அதைவைத்து போராளிகளை மக்களில் இருந்த பிரித்து எடுக்கின்றார்கள். நான் அன்றையதினம் செல்வதைத் தவிர்த்துவிட்டு சனத்தோடு சனமாக நிற்கின்றேன். சனத்துக்குள் இருந்து பிடிக்கும் போராளிகளை அத்தனை ஆயிரம் பேருக்கு முன்பாக வைத்து மிக மோசமாகத் தாக்குகின்றார்கள். அதனால் சனத்தோடு சனமாக வந்துள்ள போராளிகளுக்கு எப்படி இதற்குள்ளால் செல்வது என்ற குழப்பம் வருகின்றது. இது தொடர்பாக யோகி அண்ணன் என்னோடு கதைத்தார். போராளிகளைப் பிடித்து அடிக்கின்றார்கள். அதுபற்றித்தான் யோசிப்பதாக அவர் என்னிடம் கூறினார். மே 18 ஆம் திகதி இவர்கள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார்கள். வன்னியில் இயங்கிய ஆங்கிலக் கல்லூரியில் அதிபராக இருந்த அருட் தந்தை பிரான்சிஸ் ஜோசெப் அவர்கள் அங்கு நிற்கின்றார். அவர்கள் அங்கு பட்டியல் போடுகின்றனர். அரசியல் துறையில் இருந்த எழிலன், பாப்பா, இளம்பரிதி, நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, தமிழீழக் காவல்துறைத் துணைப்பொறுப்பாளர் மாதவன் எனப் பல போராளிகள் தமது பெயர்களை அருட் தந்தையுடன் இணைந்து பட்டியலிடுகின்றனர். என்னையும் தங்களுடன் பதிவுசெய்யுமாறு கோருகின்றனர். ஆனால் நான் அதை மறுத்து பின்னர் வருவதாகக் கூறுகின்றேன். இவர்கள் எல்லோரும் இராணுவத்தினரின் பேருந்தில் ஏறுகின்றனர். பின்னர் வேலிக்கு வெளியில் நின்ற இராணுவத்தினர், மக்களுக்குள் இறங்கிப் போராளிகளைத் தேடத் தொடங்கினர். இனி நின்றால் பிரச்சினை என்று நினைத்து நான் மே 19 அன்று ஒற்றை வரிசையில் வெளியேறினேன். அப்போது இராணுவப் புலனாய்வாளர்கள் என்னை அழைத்து ஒரு பனங்கூடலுக்கு நடுவே இருத்தினார்கள். அங்கு நிறையப் போராளிகள் இருக்கின்றார்கள். அங்கு எனக்குத் தெரிந்தவர்கள் என்றால் வண்ணக்கிளி மாஸ்ரர், திலீப் அண்ணை (ஒரு கால் இல்லாதவர்) அப்படிப் பலர் இருந்தார்கள்.



அவர்களை நான் கேட்டேன். எப்படி அங்கு வந்தீர்கள் என்று, தாங்களும் வரிசையில் வரும்போது யாரோ காட்டிக்கொடுப்பவர்களால் பிடிக்கப்பட்டோம் என்று கூறினார்கள். பின்னர் இரண்டு பேருந்துகள் வந்தன. அதில் பிடித்து ஏற்றினார்கள். எங்களை ஏற்றிய பேருந்து ஓமந்தைக்குப் போனது. மற்றப் பேருந்து எங்குசென்றதென்பதே இதுவரை தெரியவில்லை. அவர்களுடைய மனைவிமார் இன்றும் தேடிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். உதாரணமாக வண்ணக்கிளி மாஸ்ரரின் துணைவியார் இன்றும் அவரைத் தேடிக்கொண்டுதான் இருக்கின்றா. எனது கண்ணுக்கு முன்னால் அவரைப் பேருந்தில் ஏற்றினார்கள். நானும் அவர்களுடன்தான் சென்றேன். எல்லோரையும் ஏற்றும்போது, பேருந்தில் இடம்இல்லாத காரணத்தால் என்னை விட்டுவிட்டுச்சென்றார்கள். என்னை அடுத்த பேருந்தில் ஏற்றினார்கள். என்னால் அதனை மறக்கமுடியாமல் உள்ளது. எங்களை ஓமந்தைக்குக் கொண்டுசென்றார்கள். ஓமந்தையிலும் இரண்டாயிரம் போராளிகள் இருந்தார்கள். அங்கு ஆண்போராளிகள், பெண் போராளிகள் எல்லோரையும் ஒன்றாக ஒன்றரை ஏக்கர் காணிக்குள் அடைத்து வைத்திருந்தார்கள். அவ்வளவு பேருக்கும் ஒரு கிணறு, ஒரு மலசலகூடம். அங்கு சென்ற ஒருவருக்கும் மாற்று உடுப்பு இல்லை. அங்கு சுகாதாரப் பிரச்சினை மட்டுமல்லாமல் சமூகப் பிரச்சினையும் இருந்தது. முள்ளிவாய்க்காலில் சேற்றுக்குள்ளே, சகதிக்குள்ளே இருந்து விட்டு வந்த எமக்கு அந்த ஒரு கிணற்றில் தான் அனைவரும் குளிக்கும் நிலை. சாரத்தைக் கிழித்து போத்தலில் கட்டி எடுத்துக் குளித்தோம். அதனை இராணுவத்தினர் காணொளி எடுக்கின்றனர். சில போராளிகள் தமது குடும்பங்களோடே அங்கு வந்து நிற்கின்றார்கள். பகலில் இப்படியே போனாலும் இரவுவேளையில் இராணுவத்தினர் இறங்கி ஆட்களை பிடித்துச்செல்வார்கள். ஒரு நாள் இரவு ஒரு பெண்பிள்ளையின் அழுகுரல் எனக்குக் கேட்டது. பின்னர் அந்தப் பிள்ளையைக் காணவில்லை. வேலிக்கரையில் படுத்திருப்பவர்களை இராணுவம் இழுத்துச் செல்வதாகக் கூறினார்கள். அப்படி கொண்டுசென்றவர்களுக்கு என்ன நடந்தது என்று இன்றுவரையும் இல்லை. ஒரு அம்மா ஜெனிவாவில் பேட்டி கொடுத்தபோது கூறினார், ஓமந்தையில் தான் விட்டுவந்த பிள்ளையைக் காணவில்லை என்று. இது இரவில் இராணுவத்தினரால் இழுத்துச்செல்லப்பட்ட பிள்ளையாக இருக்கும். நாங்கள் முடிந்தவரை வேலிக்கரையில் படுப்பதில்லை. கைபிடித்துத் தூக்கமுடியாதவாறு உள்ளுக்குள்ளேயே படுப்போம். அதைவிட இராணுவத்தினர் பெயர் சொல்லி அழைப்பார்கள். சிலர் பெயர்கூப்பிட்டாலும் போகமாட்டார்கள். பின்னர் காட்டிக்கொடுக்கும் தலையாட்டியோடு வந்து தேடுவார்கள். தேடிப் பிடித்துவிடுவார்கள். அப்படிக் கொண்டுசென்றவர்கள் இன்று எங்கே என்றே தெரியாது. இன்னொரு சம்பவத்தையும் குறிப்பிடவேண்டும். ஆட்லறி யை இயக்கும் சிங்கள நபர் ஒருவரை விடுதலைப் புலிகள் பிடித்துவைத்திருக்கவேண்டும். அந்த நபரையும் எமக்கு மத்தியில் இராணுவத்தினர் தேடிப்பிடித்தனர். அவருக்கும் என்ன நடந்தது என்று தெரியாது. இறுதியாக வடிகட்டி ஆயிரத்து 442 பேரை மட்டுமே ஓமந்தை முகாமில் வைத்திருந்தனர். பின்னர் மேலும் வடிகட்டப்பட்டுத் தடுப்பு முகாம்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டோம்.

**கேள்வி: நீங்கள் எந்தத் தடுப்பு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டீர்கள்?, அங்கு எவ்வாறு நடாத்தப்பட்டீர்கள்?**

**பதில்:** என்னை மே 22 அன்று ஓமந்தை மத்திய கல்லூரியில் உள்ள தடுப்பு முகாமுக்குக் கொண்டு செல்கின்றனர். அங்கு முள்ளிவாய்க்கால் இறுதியுத்தத்தில் கைது செய்யப்பட்ட போராளிகள் எல்லோரையும் கொண்டுவந்தனர். அங்கு இராணுவப் புலனாய்வாளர்களின் கட்டுப்பாட்டில் முழு விசாரணைகளும் இருந்தது. அங்கு போராளிகள் மோசமாகத் தாக்கப்பட்டு சித்திரவதைகள் செய்யப்பட்ட பல சம்பவங்கள் இடம்பெற்றன. அதன்பின்னர் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவு சிலரைப் பொறுப்பெடுத்து பூசாவுக்குக் கொண்டு சென்றது. அதேநேரம் ஜோசேப் முகாமிலும் தடுத்துவைக்கப்பட்டனர். இதன் பின்னர் என்னை பொலனறுவையில் உள்ள கந்தக்காட்டு முகாமிற்கு கொண்டுசெல்கின்றனர். அங்கு நாங்கள் விவசாயத்தில் ஈடுபடுத்தப்படுகின்றோம். அதாவது நாங்கள் கட்டாயமாக வேலை வாங்கப்பட்டோம். அவ்வாறு சுமார் 10 மாதங்கள் இடம்பெற்றன. இன்னொன்றையும் சொல்லவேண்டும். அங்குவைத்து எல்லாப் போராளிகளுக்கும் தடுப்பு ஊசி என்ற பெயரில் ஏதோ ஏற்றுகின்றனர். ஊசி ஏற்றப்பட்டு மறுநாளே ஒரு போராளி சாவடைகின்றார். அவரது உடலை பொலனறுவை வைத்திய சாலையில் இராணுவம் வைக்கின்றது. அதன்பின்னர் இராணுவம் வந்து ஒரு சந்திப்பை ஏற்பாடுசெய்கின்றது. நீங்கள் முகவரியைத் தரும்போது சரியாகத்தாருங்கள். இறந்த போராளி தவறாக முகவரியைத் தந்துவிட்டார். அதனால், அவரது சடலத்தை ஒப்படைக்கமுடியாமல் உள்ளது என்று இராணுவ அதிகாரி தெரிவித்தார். போராளியின் உடலை அவர்களே அடக்கம் செய்வதற்காக பொய்யான தகவலைச் சொல்லியிருக்கவேண்டும். இப்படிப் புனர்வாழ்வு என்ற பெயரில் போராளிகள் உடல் உளரீதியில் சித்திரவதைசெய்யப்பட்டுத் தான் இருந்தார்கள். சர்வதேச அழுத்தமோ என்னமோ பின்னர் நானும் விடுவிக்கப்பட்டேன்.

**கேள்வி: நிழலின் அருமை வெய்யிலிலே தெரிவதுபோல் தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ள சீரழிவுகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிழலை இன்று மக்கள் தேட ஆரம்பித்துள்ளனரே?**

**பதில்:** ஒப்பீட்டளவில் தெற்காசியாவில் என்று பார்த்தாலும் சரி உலக அளவில் என்று பாரத்தாலும் சரி எமது சமூகம் உலக அளவிலேயே அமைதியை விரும்பும் சமூகம். பொதுவாகவே சமூகக் கட்டமைப்பில் குற்றம் வெறுக்கப்படுகின்றது. இது தான் எங்கள் தமிழீழக் காவல்துறையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரச கட்டமைப்புக்களில் நிர்வாகம் செய்வதற்கு இலகுவாக அமைந்தது. காரணம் குற்றமனப்பான்மை இல்லாத மக்கள் அங்கு இருந்தார்கள்.

தொடர்ச்சி 18ம் பக்கம்

# பிரான்சு லாச்சப்பலில் பேரெழுச்சிகொண்ட முள்ளிவாய்க்கால் மே 18 நினைவேந்தல் நிகழ்வு!



மே18 முள்ளிவாய்க்கால் இன அழிப்பின் 10 ஆம் ஆண்டு நினைவேந்தல் பேரணி நிகழ்வு பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, தமிழீழ மக்கள் பேரவை, தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பு மற்றும் அனைத்து உபகட்டமைப்புக்களின் ஏற்பாட்டில் கடந்த (18.05.2019) சனிக்கிழமை பேரெழுச்சியுடன் இடம்பெற்றது. பிற்பகல் 15.00 மணியளவில் பேரணி பரிசு லாச்சப்பல் பகுதியில் இருந்து ஆரம்பமாகி பல்லின சமூகத்தினரும் பார்த்திருக்க தமிழீழ மக்களுக்கு இடம்பெற்ற அவலங்கள் அடங்கிய பதாதைகள் கருத்துப்படங்களுடனும் தமிழீழத் தேசியக்கொடிகளைத் தாங்கியபடி அணிவகுத்துச் சென்று லாச்சப்பல் பகுதியில் உள்ள திடலைச் சென்றடைந்தது. அங்கு முள்ளிவாய்க்கால் இறுதி மண்மீட்பு யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்ட பொது மக்கள் மற்றும் போராளிகள் நினைவாக வணக்க நிகழ்வும் - தொடர்ச்சியான எமது நீதிக்கான போராட்டத்தை வலியுறுத்தி பொதுக் கூட்டமும் இடம்பெற்றது.

பொதுச் சுடரினை அமெரிக்காவில் இருந்து வருகைதந்த அமெரிக்க உலகத்தமிழர் அமைப்புத் தலைவர் திரு.தணிகுமார் அவர்கள் ஏற்றிவைக்க, ஈகைச் சுடரினை 16.03.2009 அன்று வீரச்சாவடைந்த லெப்.கேணல் திருமறவன் அவர்களின் துணைவியார் ஏற்றிவைத்தார். நினைவுச் சுடரினை 15.05.2009 அன்று முள்ளிவாய்க்காலில் தாயையும் சகோதரியையும் இழந்த தாசன் அவர்கள் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மலர் வணக்கத்தை 16.03.2009 அன்று வீரச்சாவடைந்த லெப்.கேணல் திருமறவன் அவர்களின் துணைவியாரும் பிள்ளைகளும் செலுத்திவைத்தனர். அகவணக்கத்தைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் மலர்வணக்கம் செலுத்தினர். தொடர்ந்து வணக்க நடனத்தை திறான்சி தமிழ்ச்சோலை மாணவிகள் உணர்வு பொங்க வழங்கியிருந்தனர். இம்முறையும் பேரணியில் குர்திஸ்தான் விடுதலை இயக்க சகோதரர்களும் கலந்துகொண்டு தமது ஆதரவினை வெளிப்படுத்தியிருந்தனர்.

பிரான்சு தமிழீழ மக்கள் பேரவை ஊடகப்பேச்சாளர் திரு.மோகனதாஸ் மற்றும் அமெரிக்காவில் இருந்து வருகை தந்திருந்த தமிழின உணர்வாளர் அமெரிக்க உலகத்தமிழர் அமைப்புத் தலைவர் திரு.தணிகுமார் அவர்களின் சிறப்புரை, சென் சென் தனி நாடாளுமன்ற உறுப்பினர் M. Jean-Christophe Lagarde அவர்களின் உரை, பிரான்சு தமிழீழ மக்கள் பேரவைப் பொறுப்பாளர் அவர்களின் பிரெஞ்சு மற்றும் தமிழ் மொழியிலான உரை, பிரான்சு தமிழ் இளையோர் அமைப்பின் சார்பில் செல்வன் நவநீதன் நிந்துலன் அவர்களின் பிரெஞ்சுமொழியிலான உரை, குர்திஸ்டான் மக்களின் பிரதிநிதியின் பிரெஞ்சு மொழியிலான உரை, பிரெஞ்சு தேசிய விடுதலை அமைப்பின் சார்பில் பிரெஞ்சுப் பிரமுகர்களின் உரை, முள்ளிவாய்க்கால் மண்ணில் இறுதி வரை நின்று மருத்துவப்பணியாற்றிய மருத்துவர் திரு.நா.வண்ணன் அவர்களின் உரை எனப்பல உரைகள் இடம்பெற்றதுடன் பிரெஞ்சு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரின் அறிக்கைகளும் வாசித்தளிக்கப்பட்டன.

அரங்க நிகழ்வுகளாக தொர்சி தமிழ்ச்சோலை மாணவி செல்வி சுதாகரன் டிலுசியா அவர்களின் கவிதை, செவ்ரோன் தமிழ்ச் சோலை மாணவிகளின் பிரெஞ்சு மொழியிலான நடிப்பும் கதையும், கிளிச்சி தமிழ்ச்சோலை மாணவி செல்வி ரவிச்சந்திரன் தயாழினி அவர்களின் உரை, சுவாசிலே றூவா தமிழ்ச் சோலை மாணவிகளின் எழுச்சி நடனம், வில்நெவ் தமிழ்ச்சோலை மாணவர்களின் எழுச்சி நடனம், ஒல்னே சுபுவா தமிழ்ச்சோலை மாணவ மாணவிகளின் சிறப்பு நாடகம், கலைஞர்களின் பறையிசைப் பாடல்கள் எனப் பல நிகழ்வுகள் அரங்கைச் சிறப்பித்திருந்தன.

# முத்த ஊடகவியலாளர் முத்துலிங்கம் ஐயாவின் இழப்பு இட்டுநிரப்பமுடியாத ஒன்று!

பிரான்சில் கடந்த 20.05.2019 திங்கட்கிழமை சாவடைந்த மூத்த ஊடகவியலாளரும், பன்மொழி பெயற்பாளருமான அமரர் அருணாசலம் முத்துலிங்கம் அவர்களின் இறுதி நிகழ்வுகள் கடந்த 22.05.2019 புதன்கிழமை வில்தனுஸ் மயானத்தில் நடைபெற்று உடல் தகனம் செய்யப்பட்டது.



இந்நிகழ்வில் பலரும் முத்துலிங்கம் ஐயாவுடனான தமது அனுபவங்களைப் உரிமையோடு பகிர்ந்துகொண்டனர். ஊடகவியலாளர் முத்துலிங்கம் அவர்கள் யாழ் உதயன் பத்திரிகையில் ஆங்கில சிங்கள மொழிபெயர்ப்பாளராகவும் நூலகராகவும் நீண்டகாலம் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய “தமிழில் கஜனி” என்ற மொழிபெயர்ப்பு கட்டுரை தமிழ் மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. அத்தோடு தமிழீழ விடுதலைப் பயணத்திற்கும் இவருடைய பணி காத்திரமாக அமைந்துள்ளதாக அறியக்கிடைத்துள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகளின் திரைப்பட வெளியீட்டுப்பிரிவு, அரசறிவியல் கல்லூரி உள்ளிட்ட பல பிரிவுகளுக்கு இவர் தனது மொழிபெயர்ப்புப் பணியினை வழங்கியுள்ளார். அத்தோடு தென்பகுதியில் இருந்து வடபகுதிக்கு அனைத்து ஊடகங்களையும் தடைசெய்த காலத்தில் இவர் சிங்கள, ஆங்கில நாளிதழ்கள், வார இதழ்கள் போன்றவற்றை இலகுவான தமிழ்மொழி நடையில் அழகாக மொழிபெயர்த்து ஆய்வுக்கட்டுரைகளாக வடித்து வழங்கியுள்ளார்.

1990களில் யாழ். உதயன் பத்திரிகையில் தன்னை இணைத்துக்கொண்ட இவர், 1996ல் குறித்த பத்திரிகையை சிறீலங்கா இராணுவத்தினர் கையகப்படுத்த எடுத்த முயற்சியை தனது மொழியாற்ற லினால் மீட்டுக்கொடுத்ததாகவும் இவரோடு பணியாற்றியவர்கள் தெரிவிக்கின்றனர். அத்தோடு தென்பகுதிக்கு அரச பணி கிடைத்துச்சென்ற பலரை, அவர்களின் குடும்ப நிலைகருதி தனது செல்வாக்கினைப் பயன்படுத்தி தமிழ்ப் பகுதிகளுக்கு மாற்றிக் கொடுத்ததாகவும் பலர் தமது நன்றியைப் பகிர்ந்து வருகின்றனர். 2006ஆம் ஆண்டிற்குப் பின்னர் பிரான்சிற்கு தனது குடும்பத்தினருடன் வருகை தந்த இவர், மீண்டும் தனது மொழிபெயர்ப்புப் பணியைத் தொடர்ந்துள்ளார். இவருடைய உன்னதமான பணி தமிழ்த் தேசியப் பரப்பிலும் ஊடகப் பரப்பிலும் இட்டுநிரப்ப முடியாத ஒன்றாகும்.



ஸ்ராஸ்பூர்க் - முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 10ம் ஆண்டு நினைவுநாள் பதிவு!



பரிசின் புறநகர்ப் பகுதியான சவினிலுத்தொம் நகரத்தில் இடம்பெற்ற கவனயீர்ப்பு நிகழ்வில்...



கிளிச்சிப் பகுதியில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவேந்தல்!



சார்சல் பகுதியில் லெப்.சங்கரின் நினைவுத்தூபி அமைக்கப்பட்ட இரண்டாம் ஆண்டும் இனவழிப்பு நினைவேந்தலும்!



செவ்ரோன் பகுதியில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவேந்தல்!

# அவலச் சாவுகளும்...



ஒருவன் பலியாகியுள்ளதுடன் பலத்த காற்றுடன் கூடிய மழை காரணமாக மரங்கள் முறிந்து விழுந்து பல வீடுகளும் சேதமடைந்துள்ளன. திருக்கோவில் பிர தேசத்தில் கடந்த 17ம் திகதி வெள்ளிக் கிழமை பலத்த காற்றுடன் மழை பெய்த துடன் மின்னல் தாக்கமும் அதிகமாகக் காணப்பட்டது. இந்நிலையில் காஞ்சிரம் குடா பாலத்தடியில் மீன் விற்றுக் கொண் டிருந்த ராஜகுமார் எனும் சிறுவன் மின்னல் தாக்கி மரணமடைந்துள்ளான். மின்னல்தாக்கி தமிழர்கள் மரணமாவது தற்போது அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**தொடருந்து முன் பாய்ந்த நபர் உயிரிழப்பு!**

யாழ்ப்பாணம் கோண்டாவில் தொடருந்து நிலையத்துக்கு அண்மையாக, தொடருந்துடன் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். சுன்னாகத்தைச் சேர்ந்த எஸ்.சகாயநேசன் (வயது–43) என்பவரே,இரவுத் தொடருந்து வந்து கொண்டிருந்த போது, தொடருந்து முன்பாக பாய்ந்து உயிரிழந்ததாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

# பொய்ச் செய்திகளுக்கு

## பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு மறுப்பு

கடந்த ஈழமுரசு முள்ளிவாய்க்கால் சிறப்பிதழ் வெளிவந் ததன் பின்னர், ஈழமுரசு இதழுக்கு எதிராக சமூகவலைத் தளங்கள் ஊடாக திட்டமிட்டரீதியில் மேற்கொள்ளப்பட்ட மிக மோசமான தாக்குதல் குறித்து வாசகர்கள் அறிந்திருப்பார்கள். முள்ளிவாய்க்கால் சிறப்பிதழில் வெளியான ஒரு திரைப்பட விளம்பரம் குறித்து இந்தச் சர்ச்சை தோற்றுவிக்கப்பட்டிருந்தது.

சமூக வலைத்தளங்களில் ஓரிருவர் முன்வைத்திருந்த இந்தக் குற்றச்சாட்டுக்களை, ஈழமுரசின் மீது வன்மம் கொண் டிருக்கும் ஓரிரு ஊடகங்கள் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி, ஈழமுரசின் மீது சேற்றை வாரியிறைத்து அபாண்டமான பழியைச் சுமத்துவதற்கு முயற்சித்திருந்தன.

குறிப்பாக தமிழினத்திற்கு எதிரான தீவிர கொள்கையைக் கொண்டுள்ள சிறீலங்காவின் இனவாத அமைப்புக்களில் ஒன்றான ஜே.வி.பியின் பெயரில் இயங்கிவரும் தமிழ் ஊடகம் ஒன்று, பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவை ஆதார மாக்கி செய்தி வெளியிட்டிருந்தது எமக்கு மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

அச்செய்தியில், 'தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத் துக்காக இப்பத்திரிகை தொடங்கப்பட்டிருந்தாலும், 2009க்கு பின்னராக இது தனியொருவரின் பத்திரிகையாக இயங்கி வருவதோடு, தமக்கும் இப்பத்திரிகைக்கும் தொடர்பு இல்லை என தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறான ஒரு பதிலை தமிழர் ஒருங்கிணைப்புக் குழு வழங்கியதா? அல்லது அவர்கள் பொய்யான தகவலை இதனூடாக வெளியிட்டுள்ளார்களா? என்பதை நாம் அறிந்து கொள்ள பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, அவ்வாறான ஒரு பதிலை தாங்கள் வழங்கவில்லை என்றும் இது அவர்களின் பொய்யான செய்தியென்றும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப் பாளர்கள் ஈழமுரசுக்கு உறுதிப்படுத்தியுள்ளனர்.

# இந் நாட்டின் பூர்வீகக் குடி மக்கள்...

அவ்வாறு செய்யாமல் வலுக்கட்டாயமாக சிங்க ளத்தை ஒரேயொரு உத்தியோகபூர்வ மொழியாக இலங்கை பூராகவும் பிரகடனம் செய்தமை இலங் கையை சிங்கள பௌத்த நாடாக மாற்ற உள்ளூர ஆவலும், ஆசையும், அவசரமும் அவர்களுக்கு இருந் தமையை எடுத்துக் காட்டுகின்றது.

அதாவது இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடல்ல. ஆனால் அதனை சிங்கள பௌத்த நாடாக மாற்ற வேண்டும் என்ற ஒரு கருத்து பல சிங்கள அரசியல் வாதிகளையும் புத்திஜீவிகளையும் பீடித்துள்ளமை தெரிய வருகின்றது. புத்தரின் பல்லை (தாது) யார் வைத்திருக்கின்றார்களோ அவர்களே நாட்டை ஆள வேண்டும் என்ற ஒரு பரம்பரைக் கருத்து நிலவுவதை வைத்து இவ்வாறான சிந்தனை ஏற்பட்டிருக்கலாம். இதனால்த்தான் தெலுங்கு நாயக வம்சத்தைச் சேர்ந்த கண்டிய அரசர்கள் புத்தரின் பல்லைப் பாதுகாப்பாக வைத்துக் கொண்டு புத்த மதத்திற்கு சகல நன்மை களையும் செய்து வந்தார்கள். கடைசி கண்டிய மன்னன் கண்ணுத்துரையே சிறீ விக்கிரம இராஜசிங் கன் என்ற பெயரை ஏற்றிருந்தான்.

ஆகவே இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடல்ல. இலங்கையின் மொத்த சனத் தொகையில் கிட்டத் தட்ட 75 சதவிகிதம் சிங்கள பௌத்தர்கள் என்ற முறையில் இது சிங்கள பௌத்த நாடென்றால், வட கிழக்கை சிங்கள பௌத்த நாடு என்ற கருத்தமைப் புக்கு வெளியே எடுத்து அதற்கு தனித்துவமான ஒரு அடையாளத்தை வழங்குவது அவசியம். ஏன் என் றால் வடகிழக்கு தமிழர்கள் வாழும் பகுதியில் அவர்கள் பௌத்தத்தைத் தழுவி பின்னர் கைவிட் டார்கள். இப்போது அவர்கள் இந்துக்கள். மேலும் கிறீஸ்தவர்களும் முஸ்லீம்களும் இங்கு வாழ்கின்றார் கள். வாழ்ந்து வருகின்றார்கள். தற்போது மீண்டும் அவர்கள் மத்தியில் பௌத்தத்தை திணிக்க எண்ணு வது அறமல்ல. அறிவுடை செயலல்ல. இதனால்த் தான் நாங்கள் வடகிழக்கை இணைத்து தமிழ் மக்களின் தாயகப் பகுதியை அடையாளஞ் செய்து அதற்கென ஒரு அரசியல் கட்டமைப்பை உருவாக்கி அவர்களின் சுயாட்சிக்கு வழிவகுக்க வேண்டும் என்று கேட்டு வருகின்றோம். அந்தக் கட்டமைப் பினுள் தமிழ்ப் பேசும் முஸ்லீம்களுக்கு ஒரு தனி அலகை ஒதுக்க வேண்டும் என்றும் கேட்டு வருகின் றோம். எமக்கு அவ்வாறான ஒரு அரசியல் தனித்து வம் தரப்பட்டால் எமது அலகு சமயச் சார்பற்ற ஆனால் எல்லா சமயங்களையும் சமமாகக் கருதும் ஒரு அலகாகச் செயற்படும் என்று எதிர்பார்க்கலாம். என மேலும் அதில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

# அரிச்சந்திரன் பதில்கள்...

ஒரு மனிதனின் ஆயுட்காலம் முடிந்து அவனது உயிரைப் பறிப்பதற் காக யமன் வந்துவிட்டார். அந்த மனிதனிடம் உன் ஆயுட்காலம் முடிந்து விட்டது புறப்படு என்றார். அவன் அதிர்ச்சியடைந்தான்.

ஐயோ... இப்போதுதான் எனக்கு நாற்பது வயதாகின்றது. என் மனைவி பிள்ளைகளை நான்தான் பார்க்கவேண்டும். எதிர்காலத்திற்கு நிறைய திட்டங்கள் நான் போட்டு வைத்துள்ளேன். அவற்றை எல்லாம் விட்டு விட்டு உடனடியாக என்னால் வரமுடியாது என்றான்.

அதற்கு யமன், அதெல்லாம் எனக்குத் தெரியாது. உன் காலம் முடிந்து விட்டது நீ உடனடியாகப் புறப்படவேண்டியதுதான் என்றார்.



அவனுக்குப் புரிந்தவிட்டது இனி பூமியில் தன்னால் வாழமுடியாது என்பது. சரி ஒரு ஐந்து நிமிடமாவது கொடு என்று கெஞ்சினான். யமன் அதற்கு அனுமதி கொடுத்தான்.

அந்த மனிதன் ஓடிச்சென்று சில நிமிடங்களில் ஒரு பயணப்பெட்டி யுடன் வந்தான். யமன் ஆச்சரியத்துடன், அந்தப் பெட்டியில் என்ன உள்ளது? என்றார்.

என்னுடைய உடைமைகள்... என்றான் மனிதன்.

உன்னுடைய உடைமைகளா! என்று ஆச்சரியத்துடன் கேட்டார் யமன்.

ஆம் என்னுடைய பொருட்கள், உடைகள், பணம்... என்றான் மனிதன்.

இவை அனைத்தும் உன்னுடையது அல்ல. இவை பூமியில் நீ வாழ்வதற் கானது என்றார் யமன்.

அப்போ என் மனைவி, பிள்ளைகளை என்னுடன் அழைத்துச் செல்ல லாமா என்றான் மனிதன்.

இல்லை அவர்களின் ஆயுள் இன்னமும் முடியவில்லை என்றார் யமன்.

என் நினைவுகளை எடுத்துச் செல்லலாமா? என்றான் மனிதன்.

அவை கண்டிப்பாக உன்னுடையது கிடையாது. அவை காலத்தின் கோலம் என்றார் யமன்.

இப்படியே எல்லாவற்றையும் கேட்டு கேட்டு சலித்துப் போய் இறுதி யாக தான் அதிகமாக நேசிக்கும் என் உடம்பை என்றாலும் எடுத்துச் செல்லலாமா? என்று கேட்டான் மனிதன்.

உயிர் இல்லாதபோது அதற்கு எந்தப் பிரயோசனமும் இல்லை. தீக்கோ அல்லது மண்ணுக்கோ அது இரையாக வேண்டியதுதான் என்றார் யமன்.

இறுதியாக எனது ஆன்மாவை என்றாலும் என்னுடன் கொண்டு செல்லலாமா என்றான் மனிதன். அதுவும் உனக்குச் சொந்தமில்லை. அது பிறக்கும் இன்னோரு உயிரில் நுழைந்துவிடும் என்றார் யமன்.

அந்த மனிதனுக்கு கடும் கோபம் வந்துவிட்டது. இந்தப் பூமியில் இத்தனை காலம் வாழ்ந்திருக்கின்றேன். எனக்கு எதுவுமே மிச்சம் இல் லையா? என்று கோபத்துடன் கேட்டான்.

அதற்கு யமன், இந்தப் பூமியில் நீ வாழ்ந்த ஒவ்வொரு நொடியும் உனக்கு சொந்தமானது. அந்த நொடிகளில் நீ அனுபவித்த சந்தோசங்கள், நீ மற்றவர்களுக்கு கொடுத்த சந்தோசமான தருணங்கள் தான் மிச்ச மானவை என்றாராம்.

பாவ, புண்ணியங்கள் பின் தொடர்ந்து வருமா? என்று சிந்தித்துக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, கிடைத்த இந்த வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் மற்றவர்களைப் பாதிக்காது சந்தோசமாக அனுபவியுங்கள்.

# தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசு வரும்வரை....

ஆனால் இன்று 10 வருடகாலங்களுக்கு இடை யில் குற்றச்செயல்களின் வளர்ச்சி இவ்வளவு தூரத் திற்கு வேறுபட்டிருக்கின்றது என்று சொன்னால், என்னுடைய கருத்து அங்கு குற்றம் ஊக்குவிக்கப்படு கின்றது. பொதுவாகவே ஆக்கிரமிப்பாளர்கள் வந்து ஒரு சமூகத்தை அழிப்பதற்கு இப்பியான செயற் பாடுகளைத்தான் கையாள்வது உலக வழமை. அதுவும் இவ்வாறான விடயங்களில் கில்லாடித்தன மான சிறீலங்கா அரசாங்கமும் சிறீலங்காப் படை களும் வந்து தமிழ் சமுதாயத்தில் குறிப்பாக இளம் சமூகத்தை இலக்குவைத்து, குற்றத்தை ஊக்குவிப்ப தைத் தன்னுடைய கடமையாகச் செய்து வருகின் றது. அதில் குறிப்பிட்டுச் சொல்லப்போனால், போதைப்பொருள் பாவனை. இன்று தமிழீழ விடு தலைப் புலிகள் ஓர் அரச கட்டமைப்பை அங்கு வைத்திருந்த காலப் பகுதியில் அங்கு ஒரு கிராம் போதைப்பொருள், ஒரு 100 கிராம் கஞ்சா எடுப்பது பெரியதோர் உலக அதிசயமாக இருந்தது. ஆனால், இன்று வடபகுதிதான் இதற்குப் பெயர்பெற்ற இட மாக இருக்கின்றது. இது ஒரு கேவலமான விடயம். இதனை எமது தாயகத்தில் இருக்கும் மக்களும் சரி, புலம்பெயர் தேசத்தில் இருக்கும் மக்களும் சரி, இந்தக் குற்ற மனப்பான்மையில் இருந்து எமது சமூ கத்தை காப்பாற்றுவதற்கு தங்களாலான ஏற்பாட்டை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால், ஆக்கிரமிப்புப் படைகள் தமது வேலை யைத்தான் செய்வார்கள். அதிலிருந்து பாதுகாப்புப் பெறுவது எமது கடமை. ஆகவே மீண்டும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசு எமது தாயகத்திற்கு வரும் வரை எமது மக்களைக் காப்பாற்றவேண்டியது தாயக, புலம்பெயர் மக்களின் கடமை என்பதையே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

**கேள்வி: தமிழீழக் காவல்துறையின் உருவாக்கம் தமிழர் தாயகத்தில் எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்தியது ?**

**பதில்:** போர் இடம்பெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் பாரிய இடப்பெயர்வுகள், வன் முறைகள் ஏற்பட்டு, ஊறக்கட்டமைப்புக்கள் பல சீர்குலைந்த தன்மையினால், பல குற்றச்செயல்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அங்கு நிறையவே இருந்தன. ஆனால், தமிழீழக் காவல்துறை ஆரம்பிக் கப்பட்ட பின்னர், குற்றம் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அங்கு இல்லாமல் செய்யப்பட்டன. அதாவது தமிழீழக்காவல்துறைக்கு பொறுப்பாக இருந்த திரு.நடேசன் அவர்கள், அடிக்கடி எம்மிடம் கூறிக்கொள்ளும் விடயம் இதுதான், ஒரு குற்றத் தைக் கண்டுபிடிப்பதற்கு முன்னர் அந்தக்குற்றம் நிகழக்கூடிய சூழ்நிலைகளைத் தடுத்துவிடுவதன் மூலம் தேவையற்ற மனிதவலு, நேர விரையம் என் பதைவிட ஒரு பொதுமகன் தண்டிக்கப்படுவதில் இருந்தும் விலக்கப்படுவான். ஆகவே ஒரு குற்றத் தைக் கண்டுபிடிப்பதற்கு முதல், அதனைத் தடுப் பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று அவர் அடிக்கடி எம்மிடம் கூறுவார். இந்தக்கொள்கையின் அடிப்படையில் தான் தமிழீழக்காவல்துறை இயங்கி வந்தது. அதாவது தமிழீழக்காவல்துறை ஆரம்பிக்கப் பட்ட நாளில் இருந்தே, ஒரு தகவல் சேமிப்புக் கட்டமைப்பு ஒன்றை இறுதிவரை செய்துவந்தது. அதைவிட முக்கியமான விடயம் எமது தாயகத்து மக்கள், தமிழீழக் காவல்துறையோடு வைத்திருந்த நெருக்கமான உறவும் தமிழீழக் காவல்துறைக்கு வழங்கிய ஒத்துழைப்பும் இந்தக் குற்றங்களை குறைப் பதற்கும் இல்லாமல் செய்வதற்கும் முக்கிய காரண மாக அமைந்துவிட்டது.

# விழிநீர் சொரிந்த அஞ்சலிகள்..!



உதயன் குடும்பத்திற்கே கதிரவனாய் வந்துதித்து
உறுதியோடு கடமைதனை நேர்த்தியாகப் புரிந்தீர்கள்
உதவியென்று நாடி எவர் வந்த போதிலும் சலிக்காது
உதவும் பாங்கிற்கு வேறுநிகர் இவ்வுலகில் நீவீரே!
உங்கள் இழப்பின் செய்தி அறிந்திட்டபோதும் - அதை
உணர்ந்திட எம்மனம் மறுக்கின்றதென்பதே திண்ணம்!

பிறப்பு: 03.12.1942
இறப்பு: 20.05.2019

அமரர்

## அருணாச்சலம் முத்துலிங்கம்

(மூத்த ஊடகவியலாளர்-பன்மொழிபெயர்ப்பாளர்)

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

- பிரான்சு வாழ்
உதயன் முன்னாள் சக பணியாளர்கள்.


## தமிழர் திருமண மண்டபம்

**Palais de La Terrasse**

100 முதல் 600 இருக்கைகள்



Aulnay sous bois, Goussainville, Villers le bel, Fosses, Louvres, Les Noues, Sarcelles, Saint denis, Bondy, Bobigny, Drancy, La Courneuve, Le Blanc Mesnilல் இருந்து 15 நிமிடத்திலும், Le Bourgetல் இருந்து 6 நிமிடத்திலும் மண்டபத்துக்கு செல்ல முடியும்.

Le Bourgetல் இருந்து 9 இருக்கைகள் கொண்ட போக்குவரத்துச் சேவை இலவசம்!

29 avenue louis de broglie
95500 le thillay
facebook: Salle Laterrasse Le Thillay

**Palais de l'épi d'Or**

Salle - 1
100 முதல் 300 இருக்கைகள்
Salle - 2
100 முதல் 400 இருக்கைகள்





3, Avenue de l'épi d'Or
94800 Villejuif
facebook: salle de l'épi d'or
Métro: 7 ( Arrêt: Porte d'italie)
Bus: 131 ( Arrêt: Youri Gagarine)

தொடர்புகளுக்கு:
06 12 65 73 53 / 06 51 79 74 32 / 06 95 61 39 43

## மாங்கல்யம் நகை மாடம்

தரம் - நேரம் - விலை - டிசைன் - உத்தரவாதம்

பழைய நகைகளைக் கொடுத்து அதற்கு பெறுமதியான
புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்!

ஓடர் நகைகள் எதுவாயினும் ஒரு கிழமைத்
தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்!!



122 Av Paul Vaillant Couturier - 93120 La Courneuve
Tél & Fax: 01 48 36 40 75
email: mangalyam93120@gmail.com
www.mangalyam-jewels.com

## கபறினா இறைச்சிக்கடை

தினமும் உடன் இறைச்சி
வகைகளையும்,
விசேடமாக
ஆட்டிறைச்சிப் பங்கையும்
பெற்றுக்கொள்ள...



BOUCHERIE GABARINA

62, Rue Louis Blanc
75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76

207, rue fbg st Denis
75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30

## S.P.Raju Jewellery

பழைய நகைகளுக்கு
புதிய நகைகள் வழங்குகிறோம்!!!!



199 rue du Fbg St Denis,
75010 Paris
Tél: 01 58 20 17 33

13 rue cail, 75010 Paris
Tél: 01 46 07 43 42

Vijay Jewellery
விஜய் நகை மாளிகை
புதுப்பொலிவுடன் லாச்சப்பலில்
நகை வாங்குபவர்களுக்கு
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
புதிதாக ஆரம்பமாகும் நகைச்சீட்டில்
இணைந்து கொள்ளும் அனைவருக்கும் 100€ இலவசம்.
சகல விதமான நகைகளும் குறித்த தவணையில்
உங்கள் எண்ணத்திற்கேற்ப வடிவமைத்து தரப்படும்.
51, Rue Louis Blanc 75010 Paris
Tél : 09 80 79 21 37
Port : 06 23 68 24 53
M° : Gare du Nord / La Chapelle / Louis Blanc
Vijay_Jewellery
Vijay Jewellery Shop

பிரெஞ்சு அரசினால்
அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!
திரு.சகாதேவன்
எமது மொழிபெயர்ப்புக்கள் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்.
நேரில் வரமுடியாதவர்களுக்கு தபால் மூலம் மொழிபெயர்ப்புக்கள் அனுப்பி வைக்கப்படும்.
தொடர்பு கொள்ள
SAGADEVAN Pierre
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

லா சப்பலில்
சாரதி பயிற்சிநிலையம்
3i Conduite
CODE DE LA ROUTE பயிற்சி வகுப்புகள்
CONDUITE பயிற்சி வகுப்புகள்
CONDUITE EXAM அனுமதி பெற்றுத்தரப்படும்
9 இருக்கைகள் கொண்ட வாகனம் வாடகைக்குதரப்படும்
சகல பயிற்சிகளும் உங்கள் நேர வசதிக்கு ஏற்ப அமைத்துத்தரப்படும்
Email : 3iconduite@gmail.com
57 RUE LOUIS BLANC - 75010 PARIS
SRUTHI STUDIO வின் உள்புறம்
Tél : 06 51 38 87 33

பாரிஸ் லா சப்பலில்
AMBAAL STORE
பல் பொருள் அங்காடி
Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.st.Denis 75010 Paris

Neuilly sur marne, Meaux, Torcy, Lagny
வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே
EURO SAGEN
மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள்
மற்றும் கடலுணவு வகைகள்
Ria MoneyGram WESTERN UNION
Import & Export
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0160202947 | Port: 0667204000

பாலன்ஸ் சலூான்
தமிழர்களால்
நடத்தப்படும்
ஆண்கள்
அழகு நிலையம்
29 rue Philippe de Girard,
75010 Paris. M° La Chapelle
Tél: 06 63 01 75 80

உங்கள் உணவுவிடுதி மற்றும்
உங்கள் இல்ல வைபவங்களிற்கான பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
RAPID EMBALLAGES
1 bis, rue du chemin vert
93800 Epinay sur seine
Tél./Fax: 01 39 83 68 81 Rép.: 01 58 34 04 22
Port: 06 66 79 56 89 / 06 16 81 22 00

EURO RESTO SERVICE
உணவு விடுதிகளுக்கான உபகரணங்கள், மற்றும் உங்கள் இல்ல, மண்டப வைபவங்களுக்கான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அனைத்து விதமான பிளாஸ்ரிக் பைகளும் மிகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்
48, RUE DU CHÂTEAU LANDON - 75010 PARIS
TÉL.: 01 40 36 00 09 / 06 68 67 15 55 M°: STALINGRAD / LA CHAPELLE

VICHNESH SHOP
அனைத்து வகையான மளிகைப் பொருட்கள்
மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலை
பேசி அட்டைகள் மலிவு விலையில்
பெற்றுக்கொள்ளலாம்
8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60

ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான
சிகையலங்கார நிலையம்.
COIFFURE VITHUSA
TÉL: 06 52 44 89 27
40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS
M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152

La Courneuve மொழி பெயர்ப்புச் சேவை
துல்லியமாக, சட்டபூர்வமாக, குறைந்த கட்டணத்தில்
செய்துகொள்ள,அரசாங்க அங்கீகாரம் பெற்ற மொழி
பெயர்ப்பாளர் (Français, Tamoul, Anglais)
திரு.கலாபல்லவன்
Email : t.kalapallavan@gmail.com
91, avenue Jean Jaurès, 93120 La Courneuve
Tél : 06 51 15 25 48 T1 Station DANTON (Dans le salon de coiffure)

மாலா மளிகை
மலிவிற்கு மறுபெயர் மாலா
அனைத்து
மளிகைப் பொருட்களும்
ஒரே இடத்தில் - உயர் தரத்தில்
மாலா மார்க்
2Kg றால் 13€95
2Box நண்டு 10€95
2Kings மிளகாய்த்தூள் 11€90
2Kg றால் 10€99
60 Rue Louis Blanc, 75010 Paris
Tél : 01 40 34 42 49 M°: La Chapelle ou Gare du Nord